

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு
(2013–2014)

(பதினான்காவது பேரவை)

பதின்மூன்றாவது அறிக்கை

"கால்நடை பராமரிப்பு"

(பேரவைக்கு அளிக்கப் பெற்ற நாள் : 8 AUG 2014)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்
சென்னை – 600 009.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு
(2013–2014)



(பதினான்காவது பேரவை)

பதின்மூன்றாவது அறிக்கை

"கால்நடை பராமரிப்பு"
குறித்த மதிப்பீடு தொடர்பான குழுவின் அறிக்கை

பொருளடக்கம்

		பக்கம்
மதிப்பீட்டுக் குழுவின் அமைப்பு	...	i
முன்னுரை	...	iii

பாகம் – 1 அறிக்கை

I	முகவுரை ...	1–2
II	நிருவாக அமைப்பு ...	2
III	துறையின் குறிக்கோள் ...	3
IV	துறை மற்றும் அதன் சார்நிலை அலுவலகங்களின் பணிகள் ...	3–4
V	காலிப் பணியிடங்களை நிரப்புதல் மற்றும் புதிய பணியிடங்களை தோற்றுவித்தல்	4–5
VI	தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம் (NADP) ...	5–6
VII	தேசிய புரதச்சத்து பெருக்க இயக்கம் (NMPS) ...	6–7
VIII	தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தீவன அபிவிருத்தி ...	7
IX	குறைந்த காலத்தில் தீவனப் பயிர் தேவையைப் பூர்த்தி செய்யும் திட்டங்கள் ...	7–8
X	பசுந்தீவன அபிவிருத்தியை விரைவுபடுத்தும் திட்டம் ...	8
XI	ஊறுகாய் புல் தயாரிப்பு அலகினை நிறுவுதல் ...	8
XII	உதகமண்டலம் மாவட்ட கால்நடைப் பண்ணையில் தீவன அபிவிருத்திப் பணி மேற்கொள்ளுதல் ...	9
XIII	அரசு தரிசு நிலங்களை தேர்வு செய்து புல் வளர்க்க நடவடிக்கை எடுத்தல் ...	9
XIV	மத்திய அரசு சிறுதளைகள் வழங்கும் திட்டம் ...	9
XV	கோமாரி நோய் தடுப்புத் திட்டம் ...	10–12
XVI	தேசிய ஆட்டுக்கொள்ளி நோய் தடுப்புத் திட்டம் (NCPPPR) ...	13
XVII	தேசிய கன்று வீச்சு நோய் தடுப்புத் திட்டம் ...	14
XVIII	தேசிய வெக்கை நோய் ஒழிப்புத் திட்டம் ...	14
XIX	தேசிய கால்நடை நோய் தெரிவிக்கும் அமைப்பு (NADRS) ...	14
XX	கால்நடை மருத்துவ நிலையங்களுக்கு புதிய கட்டடம் கட்டுதல் மற்றும் பழைய மருந்தகக் கட்டடங்களை புதுப்பித்தல் (ESVHD) ...	15
XXI	கால்நடை கணக்கெடுப்பு ...	15
XXII	கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு மாநிலங்களுக்கு உதவிடும் திட்டம் ...	15–16

XXIII	ஒருங்கிணைந்த மாதிரி வரைவுத் திட்டம்	...	16
XXIV	திட்டங்கள்	...	16–18
XXV	கிராமப்புற புழக்கடை கோழி அபிவிருத்தித் திட்டம்	...	18–21
XXVI	மாநில தீவன அபிவிருத்தித் திட்டம் 2012–2013	...	21–22
XXVII	மாநில தீவன அபிவிருத்தித் திட்டம் 2013–2014	...	22–23
XXVIII	கால்நடை மருந்தகம் அமைத்தல்	...	23
XXIX	கால்நடை கிளை நிலையம் துவக்குதல்	...	23
XXX	கால்நடை மருத்துவமனை அமைத்தல்	...	24
XXXI	சைதாப்பேட்டை கால்நடை பன்முக மருத்துவமனைக்கு தேவையான அடிப்படை வசதிகளைச் செய்தல்	...	24–25
XXXII	செங்கல்பட்டு கால்நடை பெரு மருத்துவமனையை பன்முக மருத்துவமனையாகத் தரம் உயர்த்துதல்	...	25
XXXIII	கட்டமைப்பை வலுப்படுத்துதல் மற்றும் கட்டடங்களைப் புதுப்பித்தல் திட்டம்	...	25–32
XXXIV	கால்நடை பாதுகாப்புத் திட்டம்	...	32
XXXV	பகுதி–2 திட்டம்	...	32–33
XXXVI	மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம்	...	33–35
XXXVII	மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்	...	35
XXXVIII	ஆடுகளுக்கான தீவிர சுகாதார சிகிச்சைத் திட்டம்	...	35
XXXIX	கிராமப்புற பெண்களின் பொருளாதார மேம்பாட்டினை எருமை வளர்ப்பின் மூலம் உறுதிப்படுத்தும் திட்டம்	...	36
XL	தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்	...	36
XLI	செயற்கைமுறை கருவூட்டல்	...	36–37
XLII	கரு மாற்று தொழில்நுட்பத்தை பிற மாவட்டங்களில் விரிவுபடுத்த நடவடிக்கை	...	37
XLIII	இராணிப்பேட்டையிலுள்ள நுண்ணுயிர் தடுப்பு மருத்துவப் பிரிவுகளைத் தரம் உயர்த்த நடவடிக்கை	...	38–39
XLIV	கால்நடை பராமரிப்புத் துறையில் விளம்பரப் பிரிவு அமைக்க நடவடிக்கை எடுத்தல்	...	39
XLV	கால்நடை மருத்துவப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள் மூலம் விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கல்	...	39–40
XLVI	வெளியூர் செல்வோர் நாய்களைப் பாதுகாப்பாக விட்டுச் செல்ல நவீன நாய்ப் பராமரிப்பு பிரிவு அமைத்தல்	...	40

XLVII	அரிய வகை நாய் இனங்களை காப்பாற்றிட நடவடிக்கை எடுத்தல்	...	40–41
XLVIII	மத்திய அரசின் உதவியுடன் கால்நடை காப்பீட்டுத் திட்டத்தை பிற மாவட்டங்களில் செயல்படுத்த நடடிவக்கை	..	41
XLIX	விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் பரண்மேல் ஆடு வளர்ப்பினை செயல்படுத்த நடவடிக்கை	..	41–42

பாகம் – 2

நிகழ்ச்சிப் பகுதி	..	43–56
பரிந்துரைகளின் சுருக்கம்	...	57–65
குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம்	...	66

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மதிப்பீட்டுக் குழுவின் அமைப்பு (2013–2014)

(2013–ஆம் ஆண்டு மே திங்கள் 16–ஆம் நாளன்று அமைக்கப்பெற்றது)

தலைவர்

1. திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

2. மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்
நிதி மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர் (அலுவல் காரணமாக)

3. $ திரு. ச. இராமச்சந்திரன்
தலைவர், பொதுக்கணக்குக் குழு (அலுவல் காரணமாக)
@திரு. பி.வி. கதிரவன்
தலைவர், பொதுக் கணக்குக் குழு (அலுவல் காரணமாக)

4. திரு. பி.ஜி. நாராயணன்
தலைவர், பொது நிறுவனங்கள் குழு (அலுவல் காரணமாக)

5. திருமதி த. இந்திராகாந்தி
6. திரு. செ. காமராஜ்
7. டாக்டர் க. கிருஷ்ணசாமி
8. திரு. கு. குணசேகரன்
9. திரு. அர. சக்கரபாணி
10. திரு. ஆர். சாமி
11. திரு. ஆர். சீனிவாசன்
12. திரு. தங்கதமிழ்செல்வன்
13. திரு. ப. தன்சிங்
14. திரு. வ. நீலகண்டன்
15. திரு. ச. பழனிச்சாமி
16. திரு. எஸ்.ஆர். பார்த்திபன்
17. செல்வி கே. பாலபாரதி
18. திரு. எஸ். ஜாண் ஜேக்கப்
19. முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா

செயலகம்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன் . . செயலாளர்

திரு. இரா. பழனிசாமி . . இணைச் செயலாளர்

திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

$ 9.12.2013 ஆம் நாள் வரை
@ 26.5.2014 ஆம் நாள் முதல்

முன்னுரை

2013–2014–ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு 16.5.2013–ஆம் நாளன்று அமைக்கப்பெற்றது. இக்குழுவில் 16 உறுப்பினர்கள் உள்ளனர். இது தவிர மாண்புமிகு நிதி மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர், பொது கணக்குக் குழுத் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுத் தலைவர் ஆகியோர் அலுவல் காரணமாக இக்குழுவில் உறுப்பினர்களாக உள்ளனர்.

2013–2014–ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு தனது ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட ஐந்து மதிப்பீடுகளில், " **கால்நடை பராமரிப்பு** " மதிப்பீடும் ஒன்றாகும். "கால்நடை பராமரிப்பு" குறித்த மதிப்பீட்டை கூர்ந்தாய்வு செய்வதற்காக குழு, தேனி, திண்டுக்கல், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், விருதுநகர், திருநெல்வேலி, இராமநாதபுரம், சிவகங்கை, வேலூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய 11 மாவட்டங்களில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறையின் மாவட்ட அளவிலான அலுவலர்களுடன் கலந்துரையாடியது. 30.12.2013 அன்று சென்னையில், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறையின் அரசுச் செயலாளர், ஆணையர், கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் இதர துறை அலுவலர்களுடன் குழுவின் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. இவ்வறிக்கைக்கு **4.8.2014** அன்று குழு ஒப்புதல் அளித்தது. "கால்நடை பராமரிப்பு" குறித்த குழுவின் அறிக்கை பின்வரும் பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளது.

குழுவின் சார்பாக அறிக்கையை சட்டமன்றப் பேரவைக்கு வழங்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுக் குழுவின் தலைவராகிய நான்,"கால்நடை பராமரிப்பு" குறித்த இந்த அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

"கால்நடை பராமரிப்பு" தொடர்பான மதிப்பீட்டினை ஆய்வு செய்வதற்குத் தேவையான அனைத்து தகவல்களையும் அளித்த கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை அலுவலர்களுக்கு குழு தனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது. பார்வையிடுவதற்கு வசதியாக குழுவின் பரிந்துரைகள் பெரிய எழுத்துக்களில் (Bold) அச்சிடப்பட்டுள்ளன. இவ்வறிக்கையுடன் பரிந்துரைகளின் சுருக்கம் ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது.

சென்னை – 600 009,
நாள்: 4.8.2014
ஆடி 19, திருவள்ளுவர் ஆண்டு, 2045

அ.பாப்பாசுந்தரம்,
தலைவர்
மதிப்பீட்டுக் குழு

கால்நடை பராமரிப்பு

முகவுரை

1. கால்நடை பராமரிப்புத் துறை கிராமப் பொருளாதார முன்னேற்றத்திற்கான ஒரு ஆணிவேராகச் செயல்படுகிறது. பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப குறைந்தளவே வேலைவாய்ப்பு கிடைக்கும் இவ்வேளையில், கால்நடை வளர்ப்புத் தொழில் முழு நேரம் மற்றும் பகுதி நேரமாக அதிக அளவில் நகர்ப்புற மற்றும் கிராமப்புற பெண்களுக்கு வேலைவாய்ப்பை, குறிப்பாக சுய வேலைவாய்ப்பை உருவாக்கித் தருகிறது. மேலும், கிராமப்புறங்களில் இருந்து நகர்ப்புறங்களை நோக்கி மக்கள் இடம் பெயர்வதைக் குறைப்பதுடன் வேலையில்லாத் திண்டாட்டம், கிராமப்புற மக்கள் இடம்பெயர்தல் மற்றும் வறுமையைப் போக்குவதற்கான ஒரு விருப்பமான தொழிலாகவும் விளங்குகிறது. கால்நடைகள் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு குடும்பத் தொழிலுக்கு, அடுத்த, முக்கியமான வருவாய் மூலமாக இருப்பதுடன், அவர்களுக்கு ஒரு பெரிய சொத்தாகவும் விளங்குகிறது.

2. மேலும், கால்நடைகள் மனிதனுக்கு மிகவும் தேவையான சமச்சீர் புரதங்களை வழங்கி, குடும்ப உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துவதுடன், தேசிய சத்துணவுத் தரத்தை மேம்படுத்துவதற்குக் காரணமாகின்றன. இவ்வாறு சரிவிகித உணவை உட்கொள்வதால் தேக ஆரோக்கியமும் ஏற்படுகிறது.

3. தமிழகத்தில் கால்நடைகளின் எண்ணிக்கை 93 இலட்சம் ஆகும். இத்துறை கால்நடை அபிவிருத்தி, எருமை அபிவிருத்தி, செம்மறியாடு அபிவிருத்தி, வெள்ளாடு அபிவிருத்தி, பன்றி அபிவிருத்தி, கோழி அபிவிருத்தி போன்ற பணிகளுடன் தீவன வளம், விரிவாக்கம், பயிற்சி மற்றும் சமூக பொருளாதார திட்டங்களையும் மேற்கொண்டு வருகிறது.

4. கால்நடை பராமரிப்புப் பிரிவிலிருந்து பால், இறைச்சி, முட்டை, கம்பளி, தோல் மற்றும் தோல் பொருட்கள் மற்றும் மூலப் பொருட்களான இரத்தம், எலும்பு, கொழுப்பு, நிலத்திற்குத் தேவையான உரம், போக்குவரத்திற்குப் பயன்படக்கூடிய சக்தி மற்றும் சாணம் ஆகியவை கிடைக்கிறது. தோல் மற்றும் தோல் பொருட்களை தோல் உற்பத்தியாளர்கள் எற்றுமதிக்கும், தங்கள் வாணிபத்திற்கும் ஈடுபடுத்தி வருகிறார்கள். இறந்த பிராணிகளின் உடலிலிருந்து இறைச்சி, எலும்பு, கொழுப்பு, கொம்பு, குளம்பு, குடல் பாகம் ஆகியவைகள் கிடைக்கின்றன.

5. கால்நடைகளிலிருந்து பால் மற்றும் பால் பொருட்கள், முட்டை, இறைச்சி, கம்பளி போன்ற வீட்டு உபயோகத்திற்குத் தேவையான பொருட்கள் கிடைப்பது மட்டுமல்லாது, வேளாண்மைத் தொழில் நடவடிக்கைக்கும், பல்வகையான வேளாண்மை தழுவிய தொழில்கள், தயாரிப்புகளுக்கும் பயன்படுகிறது. சோப்பு, மெழுகுப் பொருட்கள், உணவுப் பொருட்கள், வஜ்ஜிரம், எலும்பிலிருந்து தயாரிக்கப்படும் பொருட்கள், கத்திப்பிடிகள், பொடி டப்பாக்கள், சட்டை பித்தான்கள், அழகு சாதனப் பொருட்கள் போன்ற பொருட்கள் தயாரிப்புகளின்மூலம் நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பளித்து வருமானத்தைப் பெருக்க உதவுகின்றன.

6. செயற்கைமுறை கருவூட்டல் நிலையங்கள் வாயிலாக நாட்டின பசுக்கள் மற்றும் எருமைகளில், அயலின மற்றும் கலப்பின உறைவிந்துக் குச்சிகளைப் பயன்படுத்தி சிறப்பான செயற்கைமுறை கருவூட்டல் மேற்கொண்டு அவற்றைத் தரம் உயர்த்தி, கலப்பின கால்நடைகளின் எண்ணிக்கையை உயர்த்தி, பயனில்லாத கால்நடைகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் மிகச் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் விளைவாக, வகைப்படுத்த இயலாத கால்நடைகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டதோடு, முக்கியமாக தரம் உயர்த்தப்பட்ட மற்றும் உயரிய மரபணு கொண்ட

உறைவிந்துக் குச்சிகள் பயன்பாடு காரணமாக பால் உற்பத்தி படிப்படியாக உயர்ந்து வருகிறது.

7. ஒவ்வொரு மனிதனுக்கும் நாள் ஒன்றுக்கு 250 கிராம் பாலும், ஆண்டுக்கு 180 முட்டைகளும் கிடைக்கப்பெற வேண்டும் என்பது இந்திய மருத்துவ ஆய்வுப் பேரவையின் பரிந்துரையாகும். தேசிய அளவில் ஒரு மனிதனுக்கு ஒரு நாளுக்கு 263 கிராம் பாலும், ஆண்டு ஒன்றுக்கு 51 முட்டைகளும் கிடைக்கின்றன. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை ஒரு மனிதனுக்கு நாள் ஒன்றுக்கு 237 கிராம் பாலும், ஆண்டு ஒன்றுக்கு 162 முட்டைகளும் கிடைக்கின்றன.

8. தமிழ்நாடு முட்டை உற்பத்தியில் 18.27 விழுக்காட்டையும், இறைச்சி உற்பத்தியில் 8.78 விழுக்காட்டையும், பால் உற்பத்தியில் 5.61 விழுக்காட்டையும் பங்களித்து, நாட்டின் முட்டை உற்பத்தியில் இரண்டாம் இடத்தையும், இறைச்சி உற்பத்தியில் ஐந்தாம் இடத்தையும், பால் உற்பத்தியில் எட்டாம் இடத்தையும் வகிக்கிறது. இவ்வாறாக இத்துறையின் முயற்சியால் முட்டை, இறைச்சி மற்றும் பால் உற்பத்தி பெருமளவில் உயர்ந்துள்ளது.

(ii) நிருவாக அமைப்பு:

9. கால்நடை பராமரிப்புத் துறை, கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநரின் ஒட்டுமொத்த கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகிறது. இந்த இயக்குநருக்கு உதவுவதற்காக 4 கூடுதல் இயக்குநர்களும், இரண்டு இணை இயக்குநர்களும், ஒரு துணை இயக்குநரும் மற்றும் ஒன்பது உதவி இயக்குநர்களும் இயக்குநரகத்தில் உள்ளனர். நிருவாகம் சம்பந்தமான பணிகளின் இயக்குநருக்கு உதவுவதற்காக துணை இயக்குநர், மேலும் (பணியாளர்) நிதி மற்றும் கணக்கு சம்பந்தமான பணிகளில் உதவுவதற்காக நிதி கட்டுப்பாட்டாளர் மற்றும் முதன்மைக் கணக்கு அலுவலர் ஆகியோரும் இயக்குநரகத்தில் உள்ளனர்.

10. தமிழ்நாட்டில் உள்ள 32 மாவட்டங்களில் சென்னையைத் தவிர இதர 31 மாவட்டங்கள் ஒவ்வொன்றும் ஒரு இணை இயக்குநர் தலைமையிலும், 76 வருவாய்க் கோட்டங்கள் ஒவ்வொன்றும் ஒரு உதவி இயக்குநர் தலைமையிலும் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

11. கூடுதல் இயக்குநர் பணி நிலையில் ஒரு இயக்குநர் தலைமையில் இராணிப்பேட்டை கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையம் செயல்பட்டு வருகிறது. கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கான பல்வேறு வகையான தடுப்பு மருந்துகள் மற்றும் நுண்ணுயிர் தடுப்பு மருந்துகள் இங்கு உற்பத்தி செய்யப்படுகிறது. சென்னை, சைதாப்பேட்டையில் நோய் கண்டறிதல், உறுதிப்படுத்துதல் மற்றும் கண்காணிப்புப் பணிக்காக மத்திய தொடர்பு ஆய்வுக்கூடம் இயங்கிவருகிறது. இவ்வாய்வுக்கூடம் 20 கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் மற்றும் 2 கோழி நோய் கண்டறியும் ஆய்வுக்கூடங்களின் பணிகளையும் ஒருங்கிணைக்கிறது.

12. மேலும், 8 கால்நடைப் பண்ணைகளும், 3 ஆட்டுப் பண்ணைகளும், ஒரு கோழிப் பண்ணையும், ஒரு தீவனப் பண்ணையும், 20 கால்நடை பெருக்க மற்றும் தீவன அபிவிருத்தி அலகுகளும் இத்துறையின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

(III) துறையின் குறிக்கோள்:

(அ) செயற்கைமுறை கருவூட்டல்மூலம் பசு மற்றும் எருமைகளின் தரத்தை உயர்த்துதல்.

(ஆ) பால், முட்டை, இறைச்சி மற்றும் கம்பளி ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்குதல்.

(இ) நவீன கால மருத்துவ உதவிகள் மற்றும் உடல் நலம் பேணுதல்.

(ஈ) மைய மற்றும் மாநில அரசுகளின் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுதல்.

(உ) கால்நடைகள் நோய்களிலிருந்து மனித உடல் நலத்தைப் பாதுகாத்தல்.

(ஊ) விவசாயிகளுக்கும், அலுவலர்களுக்கும் பயிற்சியை வழங்குதல்.

(IV) துறை மற்றும் அதன் சார்நிலை அலுவலகங்களின் பணிகள்

13. கால்நடை பராமரிப்புத் துறையில் 6 பன்முக மருத்துவமனைகள், 22 பெருமருத்துவமனைகள், 139 கால்நடை மருத்துவமனைகள், 1,671 கால்நடை மருந்தகங்கள், 585 ஊரக கால்நடை மருந்தகங்கள் மற்றும் 56 நடமாடும் கால்நடை மருத்துவ அலகுகள் உள்ளடங்கிய மொத்தம் 2,479 கால்நடை நிலையங்கள் மூலம் தமிழ்நாட்டில் உள்ள கால்நடைகளுக்கும், கால்நடை மருத்துவ சேவைகள் அளிக்கப்படுகின்றன.

14. மேற்கண்ட நிலையங்களில், பன்முக மருத்துவமனைகள் 24 மணி நேரமும் செயல்பட்டு, சிறப்பு சேவைகளான ஈனியல் சிகிச்சை, அறுவை சிகிச்சை மற்றும் மருத்துவ சிகிச்சை அளிப்பதுடன் உள்நோயாளி பிரிவைக் கொண்டுள்ளன. மேலும், உள்நோயாளி சிகிச்சை வசதிகள் கால்நடை பெருமருத்துவமனைகள் மற்றும் கால்நடை மருத்துவமனைகள் ஆகியவற்றிலும் கிடைக்கின்றன.

15. நோயுற்ற கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தல், செயற்கைமுறை கருவூட்டல், மலடுநீக்க சிகிச்சை, தடுப்பூசி போடுதல், ஆண்மை நீக்கம், குடற்புழு நீக்கம் போன்ற கால்நடை சேவைகள் மட்டுமின்றி விலையில்லா கறவைப் பசுக்கள், வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கும் திட்டம், இதர பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுதல், விரிவாக்கப் பணிகள் மற்றும் விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தல் போன்ற பணிகளும் கால்நடை நிலையங்களின் மூலமாக செயல்படுத்தப்படுகின்றன.

16. கால்நடைகளை கால்நடை நிலையங்களுக்கு அழைத்து வர இயலாத அளவுக்கு தொலைதூரப் பகுதிகளில் வசித்து வரும் விவசாயிகளின் கால்நடைகளுக்கு, 56 நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் வாயிலாக தடுப்பூசி போடுதல், குடற்புழு நீக்கம் செய்தல் போன்ற கால்நடை மருத்துவ சேவைகளும், செயற்கைமுறை கருவூட்டல் போன்ற இனப்பெருக்க வசதிகளும் செய்யப்படுகின்றன. இப்பிரிவுகள், விவசாயிகளின் இருப்பிடங்களிலேயே சேவைகள் வழங்குவதால், இவற்றின் சேவை பொதுமக்களால் பெரிதும் வரவேற்கப்படுகின்றன.

17. கால்நடை கிளை நிலையங்களில், பசுக்கள் மற்றும் எருமை இனத்திற்கு செயற்கைமுறை கருவூட்டல் கால்நடை ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்படுவதோடு, நோயுற்ற கால்நடைகளுக்கு முதலுதவியும் அளிக்கப்படுகின்றன. கால்நடை கிளை நிலையங்களில் பணிபுரியும் கால்நடை ஆய்வாளர்களின் பணிகள், கால்நடை உதவி மருத்துவர்களின் தொழில்நுட்ப வழிகாட்டுதலின்பேரில், தடுப்பூசி போடுதலுக்கும், குடற்புழு நீக்கத்திற்கும் பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது.

18. கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் நோய் கண்டறியும் பணியோடு, நோய் முன்னெச்சரிக்கைப் பணி, நோய்க் கிளர்ச்சியின்போது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல், விழிப்புணர்வு முகாம் நடத்துதல், தடுப்பு மருந்து விநியோகம் செய்தல், தடுப்பூசிப் பணிகளை மேற்பார்வையிடல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

(V) காலிப் பணியிடங்களை நிரப்புதல் மற்றும் புதிய பணியிடங்களை தோற்றுவித்தல்

19. தமிழ்நாட்டில் கால்நடை பராமரிப்புத் துறையில் பல்வேறு நிலையில் உள்ள பணியிடங்கள் காலியாக உள்ளது என குழு அறிந்தது. அதிலும் குறிப்பாக கால்நடை ஆய்வாளர் நிலை–1 மற்றும் நிலை–2 இல் பணியிடங்கள் காலியாக உள்ளதால், துறையின் பணிகள் எவ்வாறு மேற்கொள்ளப்படுகிறது என்றும், அப்பணியிடங்களை நிரப்ப துறையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்தும் குழு அறிய விரும்பியது.

20. ஒசூர், புதுக்கோட்டை, முகுந்தராயபுரம் பண்ணைகளில் 2011–2012 ஆம் ஆண்டு கால்நடை ஆய்வாளர் பயிற்சி முடித்த 291 நபர்களை 11–9–2013 அன்று காலியாக உள்ள கால்நடை நிலையங்களில் கால்நடை ஆய்வாளர்களாக பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளதாக துறை குழுவிடம் தெரிவித்தது.

21. மேலும், 2012–2013 ஆம் ஆண்டுக்கு ஒசூர், புதுக்கோட்டை, முகுந்தராயபுரம் பண்ணைகளில் 312 நபர்களுக்கு 17–10–2013 முதல் கால்நடை ஆய்வாளர் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சி முடித்தவர்களைக் கொண்டு மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் காலியாகவுள்ள கால்நடை ஆய்வாளர் நிலை–1, நிலை–2 பணியிடங்களை நிரப்புவதற்கு துறையால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தது.

22. அலுவலக உதவியாளர் பணி நியமனம் தொடர்பாக அரசாணை எண் 245, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் (காப6) துறை, நாள் 25–9–2013 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தற்போது அலுவலக உதவியாளர் பணியிடங்கள் இத்துறைக்கென 187 என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில் சம்மந்தப்பட்ட மண்டலங்களுக்கு அலுவலக உதவியாளர் பணியிடங்கள் ஒதுக்கீடு செய்து காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பிட இத்துறை அலுவலக ந.க. எண் 16398/இஇ2/2006, நாள் 13–12–2013 மூலம் ஆணை வழங்கப்பட்டுள்ளது எனவும் துறை குழுவிற்கு விளக்கம் அளித்துள்ளது.

23. 2012–2013 ஆம் ஆண்டில் ஒசூர், புதுக்கோட்டை, முகுந்தராயபுரம் பண்ணைகளில் 312 நபர்களுக்கு 17–10–2013 முதல் நடைபெற்றுவரும் கால்நடை ஆய்வாளர் பயிற்சி நிறைவடைந்தவுடன் நிரப்பப்படாமல் உள்ள கால்நடை ஆய்வாளர் நிலை–1 மற்றும் கால்நடை ஆய்வாளர் நிலை–2 பணியிடங்களை நிரப்பவும், நிரப்பப்படாமல் இருக்கும் 187 கால்நடை அலுவலக உதவியாளர் பணியிடங்களை நிரப்புவதற்கு கால்நடை பராமரிப்புத் துறையின் ந.க. எண் 16398/இஇ2/2006, நாள் 13–12–2013 மூலம் ஆணை வெளியிடப்பட்டதன் தொடர்ச்சியாக துறை துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு மேற்காணும் பணியிடங்களை நிரப்பிட வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

24. துறையின் மருத்துவப் பிரிவுகள் மற்றும் அவற்றிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வாகனங்கள் முறையாக செயல்படுகிறதா என்பது குறித்து குழு துறையிடம் விவரங்களைக் கோரியது.

25. சென்னையில் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் இத்துறையின் கீழ் இயங்கும் அனைத்து மருத்துவப் பிரிவுகளும் முறையாக செயல்படுகின்றன. 2012–2013 ஆம் ஆண்டு 31 புதிய நடமாடும் கால்நடை மருத்துவ பிரிவுகளுக்கு 31 புதிய வாகனங்கள் வாங்கப்பட்டன. வாகனங்களுக்கு என்.ஏ.டி.பி. திட்டத்தின்மூலம் கூடுதலாக ஓட்டுநர் பணியிடங்கள் அனுமதிக்கப்படவில்லை. இதனை சரிசெய்ய இங்குள்ள நிரந்தர பணியிடத்தில் பணியாற்றுபவர்கள் இப்பணியினையும் சேர்த்து பார்க்க வேண்டும் என்றும் பணியிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பணியமர்த்தப்படுவார்கள் என்றும், வாகன ஓட்டுநர்களுக்கான முன்மொழிவு அரசுக்கு அனுப்பியிருக்கிறோம் என்றும் கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் குழுவிடம் தெரிவித்தார்.

26. 2012–2013 ஆம் ஆண்டு தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 31 புதிய நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகளுக்கு 31 வாகனங்கள் வாங்கப்பட்டு, அவற்றிற்கு உரிய ஓட்டுநர்கள் அமர்த்தாமல் அந்த வாகனங்கள் செயல்படாமல் உள்ளது. எனவே, காலியாக உள்ள ஓட்டுனர் பணியிடங்களை நிரப்ப அரசு ஆணையினை விரைவில் பெற்று நியமனம் செய்வதற்கு துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

27. சைதாப்பேட்டை பன்முக மருத்துவமனைக்கு கால்நடை உதவி மருத்துவர்கள் 9, கால்நடை ஆய்வாளர்கள் 9, கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் 20 மற்றும் துப்புரவுப் பணியாளர்கள் 10 போன்ற பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டும் என துறையின் சார்பாக குழுவிடம் கோரிக்கை வைக்கப் பெற்றது. அம்மருத்துவமனைக்கு புதிய பணியிடங்கள் தோற்றுவிக்க ஏதேனும் கருத்துரு துறையிடம் உள்ளதா என குழு துறையிடம் கோரியது.

28. சைதாப்பேட்டை பன்முக மருத்துவமனைக்கு கால்நடை ஆய்வாளர் புதிய பணியிடங்கள் தோற்றுவிக்க கருத்துரு ஏதும் இல்லை என்றும், கால்நடை பராமரிப்பு உதவியாளர் பதவிகளும் 2013–2014 ஆம் வருட காலியிட மதிப்பீட்டில் நிரப்பிட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சைதாப்பேட்டை பன்முக மருத்துவமனைக்கு 10 துப்புரவுப் பணியாளர்கள் புதிய பணியிடங்கள் தோற்றுவிக்க கருத்துரு ஏதும் இல்லை என்றும் துறை குழுவிடம் தெரிவித்தது.

29. சைதாப்பேட்டை பன்முக கால்நடை மருத்துவமனைக்கு மேலே தெரிவிக்கப்பட்ட பணியிடங்களைத் தோற்றுவிக்க கருத்துருவை அரசுக்கு அனுப்பி ஆணை பெறுவதற்கு துறை துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

(VI) தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம் (NADP):

30. 2012–2013 ஆம் ஆண்டில் பின்வரும் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருவதை குழு அறிந்தது.

(i) திருப்பூர் மாவட்டம், பல்லடத்தில் கோழியின நோய் பரிசோதனைக் கூடம் ரூ.2.63 கோடி செலவில் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ii) 31 நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் ரூ.2.05 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

iii) ரூ.13.27 கோடி செலவில் 85 கால்நடை மருந்தகங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு கிராமப்புறங்களில் தரமான சேவை அளிக்கும் மையங்களாக செயல்படுத்தப்பட உள்ளது.

(iv) "உழவர் பெருவிழா" கடந்த ஏப்ரல் மற்றும் மே 2012 மாதங்களில் 1.51 கோடி செலவில் நடத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 6,636 முகாம்கள் நடத்தப்பட்டு அதில் 38.40 இலட்சம் கால்நடைகள் மற்றும் 8.91 இலட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

31. 2012–2013 ஆம் ஆண்டில் திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் கோழியின பரிசோதனைக் கூடம் ரூ.2.63 கோடி செலவில் அமைப்பதற்கும் மற்றும் ரூ.13.27 கோடி செலவில் 85 கால்நடை மருந்தகங்களுக்கு கட்டடங்கள் கட்டுவதற்கும் துறை துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

32. 2013–2014 ஆம் ஆண்டில் 22 கால்நடை பெருமருத்துவமனைகள், 20 கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி அலகுகள் மற்றும் 11 பண்ணைகளுக்காக 53 எளிதில் எடுத்துச் செல்லும் நுண்ணாய்வுக் கருவிகள் வாங்குவதற்கு ரூ.881.90 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் நுண்ணாய்வுக் கருவிகளைப் பயன்படுத்துவதற்கான பயிற்சி, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் மூலம் 100 கால்நடை மருத்துவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்று துறை மேலும் குழுவிற்குத் தெரிவித்தது.

33. மேலும் 2013–2014 ஆம் ஆண்டில் 22 கால்நடை பெருமருத்துவமனைகள், 20 கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி அலகுகள் மற்றும் 11 பண்ணைகளுக்காக எளிதில் எடுத்துச் செல்லும் நுண்ணாய்வுக் கருவிகள் வாங்குவதற்கு ரூ.881.90 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை குழு அறிந்தது. இக்கருவிகளை வாங்கி பயன்பாட்டிற்குக் கொண்டுவர துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

(VII) தேசிய புரதச்சத்து பெருக்க இயக்கம் (NMPS):

34. 2011–2012 ஆம் ஆண்டில் துவங்கப்பட்ட தேசிய புரதச்சத்து பெருக்க இயக்க திட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து வெள்ளாடு வளர்ப்பினை ஊக்குவிப்பதற்காக ரூ.5.05 கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில், ஒவ்வொரு மாவட்டத்திலும் 8 மகளிர் சுய உதவிக் குழுக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒவ்வொரு சுய உதவிக் குழுவிலும் 9 பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின்மூலம் ஒவ்வொரு பயனாளிக்கும் 10 வெள்ளாடுகள் இலவசமாக வழங்கப்படும். அவற்றுக்குத் தேவையான முதல் 3 மாதங்களுக்கான அடர் தீவனம், கொட்டகைகள் அமைத்தல் மற்றும் காப்பீடு செய்தல் போன்ற பணிகளுக்கான செலவினமும் அவர்களுக்கு ஆடுகள் வளர்ப்பதற்கான பயிற்சியும் இலவசமாக அளிக்கப்படுகிறது. இத்திட்டம் 15 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்று துறை குழுவிற்கு தெரிவித்தது.

35. 2011–2012 இல் தேசிய புரதச்சத்து பெருக்க இயக்கத் திட்டத்தின்மூலம் ரூ.5.05 கோடி செலவில் வெள்ளாடு வளர்ப்பினை ஊக்கப்படுத்த முதல் கட்டமாக 15 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினை பிற மாவட்டங்களிலும் துவக்குவதற்கு துறை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

36. திருநெல்வேலி மாவட்டத்தில் குழு ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது, 2013–2014 ஆம் ஆண்டில் தேசிய புரதச்சத்து வழங்கும் திட்டத்தின் மூலம் வெள்ளாடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 72 நபர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது என்றும், நிதி உதவி கிடைக்கப் பெற்றதும் அவர்களுக்கு வழங்கப்படும் என துறைமூலம் குழுவிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் தற்போதைய நிலையினை குழு அறிய விரும்பியது.

37. இதுதொடர்பாக 2013–2014 ஆம் ஆண்டில் தேசிய புரதச்சத்து வழங்கும் திட்டத்தின்மூலம் வெள்ளாடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 72 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு, அரசுக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதற்கு இசைவாணைப் பெற்றவுடன் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என துறை குழுவிற்கு தெரிவித்தது.

38. 2013–2014 ஆம் ஆண்டில் தேசிய புரதச்சத்து வழங்கும் திட்டத்தின்மூலம் வெள்ளாடு வளர்ப்புத் திட்டத்தில் 72 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு கருத்துரு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதற்கு அரசு ஆணை வெளியிட்டவுடன் விரைவாக பயனாளிகளுக்கு நிதி உதவியினை அளிக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

(VIII) தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் தீவன அபிவிருத்தி:

39. 2012–2013 ஆம் ஆண்டில் ரூ.13.17 கோடி செலவில் கீழ்க்கண்ட தீவன அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

40. விவசாயிகள் தீவனப் பயிர் சாகுபடி செய்வதை ஊக்கப்படுத்த இத்திட்டத்தின்மூலம் விவசாயிகளின் 2000 ஏக்கர் நிலப்பரப்பில் கம்பு நேப்பியர் ஒட்டுப்புல் சாகுபடி ரூ.2.40 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் விவசாயிகளுக்கு 25 சென்ட் நிலத்தில் செயல்படுத்துவதற்காக 100 விழுக்காடு மானியமாக ரூ.3,000/– வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், சேலம், கரூர், நாமக்கல், தருமபுரி, திண்டுக்கல், விழுப்புரம் மற்றும் மதுரை ஆகிய 10 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் ஆண்டுதோறும் 2 இலட்சம் மெட்ரிக் டன் பசுந்தீவனம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது என்று துறை குழுவிற்கு விளக்கியது.

41. 2012–2013 ஆம் ஆண்டில் ரூ.13.17 கோடி செலவில் தீவன அபிவிருத்திப் பணிகள் 10 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் 2 இலட்சம் மெட்ரிக் டன் பசுந்தீவனம் உற்பத்தி செய்யப்படுவதை குழு அறிந்தது. 2013–2014 இல் இத்திட்டத்தினை பிற மாவட்டங்களில் கூடுதலாக துவக்குவதற்கு துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

(IX) குறைந்த காலத்தில் தீவனப் பயிர் தேவையைப் பூர்த்தி செய்யும் திட்டங்கள்:

(i) பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை பண்ணைகள்மூலம் ஊறுகாய்புல் தயாரித்தல்:

42. தீவனப் பயிர் பற்றாக்குறையைத் தீர்க்கும் வகையில் கிருஷ்ணகிரி, விழுப்புரம், திருச்சி, திருநெல்வேலி மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 2 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் ரூ.5 இலட்சம் செலவில் ஊறுகாய்புல் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது போலவே சின்ன சேலம், முகுந்தராயபுரம், ஒசூர் மற்றும் கொற்கை அரசுப் பண்ணைகளிலும் ரூ.10 இலட்சம் செலவில் ஊறுகாய்புல் உற்பத்தி செய்து அருகிலுள்ள கிராம விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதை குழுவிடம் துறை தெரிவித்தது.

43. தீவனப் பயிர் பற்றாக்குறையைத் தீர்க்கும் வகையில் ஊறுகாய்புல் உற்பத்தியை அதிகரிக்க மாநிலத்தில் கூடுதலாக பிற மாவட்டங்களில் ஆய்வு செய்து பயிரிடுவதற்கு துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

(ii)அசோலா பயிர் ஊக்குவித்தல்:

44. அசோலா பயிர் சாகுபடிக்கு 100 விழுக்காடு மானியத்தில் ரூ.1.01 கோடி செலவில் சென்னை, நீலகிரி, கன்னியாகுமரி, ஈரோடு மற்றும் திருநெல்வேலி மாவட்டங்கள் நீங்கலாக மீதமுள்ள 27 மாவட்டங்களிலும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ளது என்று துறை தெரிவித்தது.

(iii) பசுந்தீவனப் பயிர் விதைகள் உற்பத்திப் பண்ணை மற்றும் உழவர் பயிற்சி மையம் அமைத்தல்:

45. மேலும் அதிக பரப்பளவிலான நிலப்பகுதியை தீவனப் பயிர் உற்பத்திக்குக் கொண்டு வருவதற்காக 350 ஏக்கர் பரப்பளவில் மேற்கண்ட திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ.9.6 கோடி செலவில் ஒரத்தநாடு கால்நடை பண்ணையில் தீவன விதை உற்பத்தி அலகு மற்றும் தீவன உற்பத்தியில் நவீன தொழில்நுட்பம் பற்றிய பயிற்சியை விவசாயிகளுக்கு அளிப்பதற்காக, ஒரத்தநாடு மாவட்ட கால்நடைப் பண்ணையில் ஒரு உழவர் பயிற்சி மையமும் தோற்றுவிக்கப்பட்டு வருகிறது என்பதை குழுவிடம் துறை விளக்கியது.

46. தமிழகத்தில் உள்ள 27 மாவட்டங்களில் 100 விழுக்காடு மானியத்தில் ரூ.1.01 கோடி செலவில் அசோலா பயிர் உற்பத்தியை அதிகரிக்கவும் ஒரத்தநாடு கால்நடை பண்ணையில் ரூ.9.6 கோடி மதிப்பீட்டில் தீவன விதை உற்பத்தி அலகு மற்றும் உழவர் பயிற்சி மையம் அமைக்கும் பணிகளை முடிக்க துறை விரைவாக நடவடிக்கையினை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

(X) பசுந்தீவன அபிவிருத்தியை விரைவுபடுத்தும் திட்டம்:

47. 2012–2013 ஆம் ஆண்டில் பசுந்தீவன அபிவிருத்தியை விரைவுபடுத்தும் திட்டத்தின்கீழ் ரூ.10 கோடி செலவில் 8 டெல்டா மாவட்டங்களில் 4,166 ஏக்கர் பரப்பில் கூடுதல் மகசூல் தரக்கூடிய கம்பு நேப்பியர் ஒட்டுப்புல் சாகுபடிக்கு 100 விழுக்காடு மானியமாக 0.25 ஏக்கர் பயிரிடுவதற்கு ரூ.3,000 வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இதர மாவட்டங்களில் 5,376 ஏக்கர் நிலம், சோளம் மற்றும் தட்டைப் பயிறு சாகுபடியின்கீழ் கொண்டு வரப்பட்டு வருகிறது. இதற்கு 0.25 ஏக்கர் பயிரிடுவதற்கு 100 விழுக்காடு மானியமாக ரூ.2,000/– வழங்கப்பட்டு வருகிறது எனவும் துறை குழுவிற்கு தெரிவித்தது.

(XI) ஊறுகாய் புல் தயாரிப்பு அலகினை நிறுவுதல்:

48. சோளம், மக்காச்சோளம் மற்றும் வீணாகப்போகும் அல்லது எரிக்கப்படும் கரும்புத் தோகையினை ஊறுகாய்ப்புல்லாக மாற்றி, தீவனப் பற்றாக்குறை காலங்களில் கால்நடைகளுக்குத் தீவனமாக அளிக்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

49. இத்திட்டத்தின்கீழ், 160 அலகுகள் நிறுவப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு அலகிற்கும் குழி தோண்டுதல், யூரியா மற்றும் இதர இடுபொருட்கள் வழங்குவதற்கு 100 விழுக்காடு மானியமும், மின்சாரத்தால் இயங்கும் புல்வெட்டும் கருவிக்கு 75 விழுக்காடு மானியமும், மொத்தம் ரூ.25,000/– மானியமாக வழங்கப்பட்டு வருகிறது என்று குழுவிடம் துறை தெரிவித்தது.

50. ஊறுகாய் புல் தயாரிப்பு அலகினை நிறுவும் திட்டத்தின்கீழ் 160 அலகுகள் நிறுவும் பணி நடைபெற்று வருகிறது. இந்த அலகுகளை நிறுவும் பணியை துரிதப்படுத்தி நிறைவு செய்வதற்கு துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

(XII) உதகமண்டலம் மாவட்ட கால்நடைப் பண்ணையில் தீவன அபிவிருத்திப் பணி மேற்கொள்ளுதல்:

51. உதகமண்டலத்தில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணை, உறைவிந்துக் குச்சிகள் உற்பத்தி செய்வதில் தேசிய தரச் சான்று (ISO) பெற்ற ஒரு நிலையம் ஆகும். இப்பண்ணையில் உள்ள கால்நடைகளுக்கு ஆண்டு முழுவதும் தீவனம் கிடைப்பதை உறுதி செய்வதற்காக, பண்ணையில் உள்ள 42 ஏக்கர் நிலப்பரப்பை ரூ.20.00 இலட்சம் செலவில் ஓட்ஸ் மற்றும் மக்காச்சோளம் சாகுபடியின்கீழ் கொண்டு வரப்பட்டு வருகிறது என துறை குழுவிற்குத் தெரிவித்தது.

52. தீவன அபிவிருத்திப் பணி மேற்கொள்ளும் திட்டத்தின்கீழ் உதகமண்டலத்தில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையில் 42 ஏக்கர் நிலப்பரப்பை ரூ.20 இலட்சம் செலவில் ஓட்ஸ் மற்றும் மக்காச்சோளம் சாகுபடியின்கீழ் கொண்டுவர மேற்கொள்ளப்பட்டுவரும் பணியை முடிக்க துறை நடவடிக்கை எடுக்க குழு பரிந்துரை செய்கிறது.

(XIII) அரசு தரிசு நிலங்களை தேர்வு செய்து புல் வளர்க்க நடவடிக்கை எடுத்தல்

53. ஆடு, மாடுகளுக்கு முக்கியமான தீவனம் பசுமைத் தீவனங்கள்தான். அதனை துறைமூலம் தமிழகத்தில் உள்ள பல அரசு தரிசு நிலங்களை தேர்வு செய்து அங்கே பயிர் செய்து அவற்றை குறைந்த விலைக்குக் கொடுக்க துறை நடவடிக்கை ஏன் மேற்கொள்ளக் கூடாது என குழு கோரியதற்கு, அரசுச் செயலாளர் தமிழகத்தில் புல் உற்பத்தி 487 இலட்சம் மெட்ரிக் டன் தேவை இருக்கிறது. ஆனால் இங்கு 100 மெட்ரிக் டன் வரை பசுந்தீவனம் பற்றாக்குறை நிலவுகிறது. குழு தெரிவித்ததுபோல், அரசு தரிசு நிலங்களை தேர்வு செய்து அங்கே பயிர் செய்ய நடவடிக்கை எடுக்கலாம். அதனை, அடுத்த ஆண்டு முதல் மேற்கொள்ளலாம் என்ற நிலையில் துறை தற்போது உள்ளது என தெரிவித்தார்.

54. குழு துறையிடம் சூபாபுல் என்ற வகை புல்லினை உற்பத்தி செய்தால் அது நன்றாக வளர்கிறது. அதன் மரமும் நன்றாக வளர்கிறது. மற்ற வேலைகளுக்கும் அந்த மரம் பயன்படுகிறது. எனவே, அதனை உற்பத்தி செய்யலாம். முக்கியமாக எல்லா இடங்களிலும் தண்ணீர் இல்லாமலே அந்த வகைப் புல் வளர்கிறது. இதனை துறை ஆய்வு செய்ய வேண்டும் என குழு துறையிடம் தெரிவித்தது.

55. தமிழகத்தில் கால்நடைகளுக்குத் தேவையான புல் உற்பத்தியை அதிகரிக்க அரசு தரிசு நிலங்களை தேர்வு செய்து, அந்த நிலங்களில் புல் பயிர் செய்வதற்கு துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

(XIV) மத்திய அரசு சிறுதளைகள் வழங்கும் திட்டம்:

56. இத்திட்டத்தின்கீழ் சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ள மேம்படுத்தப்பட்ட தீவன ரகங்களை விவசாயிகளின் மத்தியில் பரப்பி தரமான தீவன விதையினை உற்பத்தி செய்யும்பொருட்டு பல்வேறு தீவன ஆதார விதைகள் விவசாயிகளுக்கு விலையில்லா திட்டமாக வழங்கப்பட்டுள்ளது. 2012–2013 ஆம் ஆண்டில், காரீப் பருவத்திற்கு 3,485 எண்ணிக்கையில் பல்வேறு வகைப் பயிர்களின் தீவன விதைகள் கொண்ட சிறுபைகள் மற்றும் 2013–2014 காரீப் மற்றும் ராபி பருவங்களுக்காக 3,485 மற்றும் 5,341 எண்கள் தீவன விதை சிறுதளைகள் முறையே விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது என துறை குழுவிற்கு விளக்கியது.

(XV) கோமாரி நோய் தடுப்புத் திட்டம்:

57. தமிழ்நாட்டில் விலையில்லா கறவை பசுக்கள், வெள்ளாடுகள்/செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட மாடுகளை கோமாரி நோய் தாக்கியிருக்கிறது ஆடு, மாடுகளை இந்நோய் தாக்குதலிலிருந்து காப்பாற்ற, மத்திய மற்றும் மாநில அரசின் திட்டங்களின்மூலம் தடுப்பு ஊசி போடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டம் முழுமையாக போய்ச் சேராத காரணத்தினால் தான் இந்நோயின் தாக்கம் அதிகமாகியிருப்பதாக மாவட்ட ஆய்வுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது என குழு தெரிவித்தது.

58. மேலும், தடுப்பு ஊசி போட்ட பிறகு அந்த மாட்டின் பால் கொடுக்கும் திறன் குறைந்துவிடும் என்ற காரணத்தால்தான் சில கிராமங்களில் மக்கள் மாடுகளுக்குத் தடுப்பு ஊசி போடுவதைத் தவிர்க்கிறார்கள் என்றும் தெரியவருகிறது. நோய்த் தடுப்பு ஊசி போடாமல் தவிர்ப்பதால் அவை இறக்க நேரிடலாம் என்பதையும், அதனால் தடுப்பு ஊசி போடுவதன் அவசியத்தையும் பொது மக்களுக்கு துறைமூலம் ஒவ்வொரு மாவட்டத்திலும் கிராம அளவிலும், பஞ்சாயத்து அளவிலும் கூட்டங்கள் நடத்தி, அவர்களுக்கு எடுத்துக் கூறலாம். இந்த நோயின் தாக்கம் பற்றி அறியப்பட்டவுடனேயே ஆடு, மாடுகளுக்கு 100% தடுப்பு ஊசி போட்டிருந்தால் அவற்றின் இறப்பு விகிதம் உயர்ந்திருக்காது என்று குழு கருதுகிறது.

59. இதற்கு அரசுச் செயலாளர், 30–12–2013 அன்று சென்னையில் நடைபெற்ற குழுக் கூட்டத்தில், மத்திய, மாநில அரசுகளின் திட்டங்களின்படி மாடுகளுக்கும், ஆடுகளுக்கும் 6 மாத கால இடைவெளியில் ஆண்டிற்கு இரண்டு முறை தடுப்பு ஊசி போட வேண்டும். அதன்படி மார்ச் மாதத்தில் ஒரு முறையும், செப்டம்பர் மாதத்தில் ஒரு முறையும் போடுகிறோம். இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 15 ஆம் நாள் இரண்டாம் முறை தடுப்பு ஊசி போடத் தொடங்கப்பட்டது. கருவுற்ற மாடுகளுக்கு முதல் மூன்று கட்டங்களில்தான் தடுப்பு ஊசி போட வேண்டும்.

60. மேலும், கோமாரி நோய் தாக்கும்போது மாட்டினுடைய நோய் எதிர்ப்பு சக்தியை நோய்க் கிருமிகள் குறைத்துவிடும். கருவுற்ற மாடுகளுக்கு தடுப்பு ஊசி போட்டால் பால் உற்பத்தி குறைந்துவிடும் மற்றும் சிசு மரணம் ஏற்படும் என்றும் பொது மக்கள் எண்ணுகிறார்கள் என்று குழுவிடம் தெரிவித்தார்.

61. இந்த நோய் குறித்து வட இந்தியாவில் பொதுமக்களிடையே விழிப்புணர்வு இருப்பதால் அந்தந்த கால கட்டத்தில் தடுப்பு ஊசி போடுகிறார்கள். தென்னிந்தியாவைப் பொறுத்தவரையில் மார்ச் மாதத்தில் 97% தடுப்பு ஊசி போடப்பட்டிருக்கிறது. ஒரே காலகட்டத்தில் மாநிலம் முழுவதுமாக தடுப்பு ஊசி போடும் பணியை முடிக்கும் நோக்கத்தோடு செப்டம்பர் மாதம் 15 ஆம் நாள் இரண்டாம் கட்டமாக தடுப்பு ஊசி போடும் பணியைத் தொடங்கி வைக்கப்பட்டது எனவும் தெரிவித்தார்.

62. தடுப்பூசி போடப்பட்ட மாடுகளுக்கும் அந்த நோயின் தாக்கம் ஏற்பட்டபோதும் அந்த மாடுகள் இறக்கவில்லை. நாகப்பட்டினம் மாவட்டத்திலே இந்த நோய் தாக்குதல் மட்டுமன்றி, தொண்டை அடைப்பான் நோயும் பரவியுள்ளது. தடுப்பூசி போடவில்லை என்றால், தொண்டை அடைப்பான் போன்ற நோய்களும் வரக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன.

63. கிராமங்களில் கோமாரி நோய் தாக்கப்பட்டு இறந்த மாடுகளில் 50 சதவிகித மாடுகள் தொண்டை அடைப்பான் நோயின் பாதிப்பினாலும் இறந்திருக்கின்றன என்று தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது. அந்த நோயை கட்டுப்படுத்த தமிழகம் முழுவதும் துறையினால் தடுப்பூசி போடவிருக்கிறது . அந்த நோயின் தாக்குதல் காஞ்சிபுரம் மாவட்டத்தில் அதிகமாக இருப்பதால், அம் மாவட்டத்தில் மட்டும்தான் அந்நோய்க்கான தடுப்பூசி போடப்படுவதாகவும், மத்திய அரசின் அறிவுரையின்படி தடுப்பூசி போடப்படும் என அரசுச் செயலாளர் மேலும் குழுவிடம் தெரிவித்தார்.

64. கால்நடை பராமரிப்புத் துறையில் நடவடிக்கை எடுக்கவில்லை என்று குழு கருதவில்லை. மேலும், கவனத்துடன் செயல்பட வேண்டும் என்றும் அந்நோயின் தாக்கத்தினை கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்றும் குழு கருதுகிறது.

65. கோமாரி நோயை கட்டுப்படுத்துவது குறித்து சென்னையில் நடைபெற்ற குழுவின் கலந்துரையாடல் கூட்டத்தில் விவாதித்தபோது, அந்நோயினை கண்டவுடன் அனைத்துக் கிராமங்களிலும் துறைமூலம் கிராம சபை கூட்டங்கள் நடத்தப்பட்டன. அதன் பயனாக, மக்கள் தாமாகவே முன்வந்து தமது கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டுக் கொள்வதற்கு முன்வந்துள்ளனர்.. தற்போது தடுப்பூசிகளைப் போடுவதற்கு மத்திய, மாநில அரசுகளிடம் நிதி ஒதுக்கீடு செய்யக்கோரியும் , தடுப்பூசி போடப்பட்ட மாடுகள் எது என்பதை அறிந்து கொள்வதற்கு ஏதுவாக, அவற்றின் கொம்புகளில் அடையாளக் குறி ஒன்றினை பெயின்ட் மூலமாகக் குறிப்பிடலாம் என்று துறை எண்ணியுள்ளதாக துறையின் அரசுச் செயலர் தெரிவித்தார்.

66. தமிழகத்தைப் பொறுத்தவரையில், கால்நடைகளின் எண்ணிக்கை 93 இலட்சம் என்றும், அதில் 24 ஆயிரம் மாடுகளுக்குத்தான் நோயின் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அதில் நிறைய மாடுகள் சிகிச்சைக்குப் பின் உடல்நலம் நன்றாக தேறி வருகிறது. இறந்துபோன 1123 மாடுகளில் 797 மாடுகள், மீதியுள்ளவை கன்றுகள். நான்கு மாதங்களுக்கு குறைவான வயதையுடைய கன்றுகளுக்கு தடுப்பூசி போடப்படுவதில்லை. எனவே, இறந்து போன கன்றுகளில் பெரும்பாலானவை நான்கு மாதங்களுக்குக் குறைவான வயதையுடைய கன்றுகள்தான். அதே போன்று அந்தத் தொற்றுநோய் பரவிய மாடுகளிடம் சென்று பால் குடித்த கன்றுகள் பெரும்பாலும் இறந்திருக்கின்றன. ஆடு, மாடுகள் இறந்துவிட்டால் அவற்றை சரியான முறையில் புதைத்துவிட வேண்டும். அவ்வாறில்லாமல் சில இடங்களில் இறந்த மாடுகளை ஆற்று நீரில் போட்டுவிடுவதால் நோய்த் தொற்று உண்டாகி, நோய் பரவும் அபாயம் இருக்கிறது என்று அரசுச் செயலாளர் குழுவிற்குத் தெரிவித்தார்.

67. திருவண்ணாமலை மாவட்டத்தில் இறப்பு எண்ணிக்கை குறித்து குழு அறிய விரும்பியது.

68. குழு கோரியதற்கு , அரசுச் செயலாளர் கூறும்போது, ஒரு இறந்த மாட்டினை ஆற்றுப்படுகையில் தள்ளிவிட்டதன் காரணமாக இந்த நோய் வேகமாகப் பரவியதற்குக் காரணம் என்றும், இறப்பு எண்ணிக்கை அதிகமாக இருந்திருந்தால் மாடுகளுக்கு பாதிப்புகள் இன்னும் அதிகமாக இருந்திருக்கும் . நாங்கள் எதற்காக கால்நடை மருத்துவர்களைச் சென்று இறந்த மாடுகளைப் பரிசோதிக்கச் சொன்னோம் என்றால், அந்த இறப்பிற்கான காரணத்தை அறிவதற்காகத்தான் என்பதை குழுவிடம் தெரிவித்தார்.

69. கால்நடை பராமரிப்புத் துறைமூலம் கால்நடைகளின் எண்ணிக்கையை உயர்த்த மாடுகளை அண்டை மாநிலங்களான ஆந்திராவிலேயிருந்தும், கர்நாடகாவிலேயிருந்தும் வாங்கப்படுகிறது என்றும், அவற்றை நம்மாநில எல்லைக்கு வருவதற்கு முன் பரிசோதித்து தடுப்பூசி போட்டால் நோய் பரவ வாய்ப்பிருக்காது என குழு தனது கருத்தினை தெரிவித்தது.

70. மேலும், ஒரு முக்கியமான கருத்து என்னவென்றால், விலையில்லா மாடுகள் திட்டத்தில் வழங்கப்பட்ட மாடுகள் எதுவும் இறக்கவில்லை. காரணம் என்னவென்றால், இத்திட்டத்தில் வழங்கப்படுகிற மாடுகள் அனைத்துமே இன்சூரன்ஸ் செய்யப்படுகின்றன. அப்படி இன்சூரன்ஸ் செய்ய வேண்டுமென்றால், முதற்கட்டமாக இந்த மாடுகளுக்கு தடுப்பூசி போடப்பட்டிருக்க வேண்டும் என்பதுதான் நிபந்தனை. அப்படி தடுப்பூசி போடப்படாத மாடுகள் இன்சூரன்ஸ் செய்யப்படுவதில்லை எனவும் அரசுச் செயலாளர் குழுவிற்குத் தெரிவித்தார்.

71. 2012–2013 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின்கீழ் மத்திய அரசால் ரூ.6.85 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2013–2014 ஆம் ஆண்டிற்கு மத்திய அரசால் ரூ.5.05 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என துறை குழுவிடம் தெரிவித்தது.

72. இந்நிலையில் துறை கோமாரி நோய் குறித்து ஆய்வு செய்து, மக்களிடம் கோமாரி நோயின் தன்மை குறித்தும், தடுப்பூசி போடுவதின் நன்மைகள் குறித்தும் மக்களின் தவறான எண்ணப்போக்குகளை அகற்றுவதற்கும், மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

73. சென்னையில் நடைபெற்ற குழுக் கூட்டத்தில், மாட்டு சந்தைகளின் மூலமாகவே மாடுகளுக்கு நோய் அதிகமாகப் பரவ வாய்ப்பு இருக்கிறது என்ற தகவல் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. உதாரணமாக ஈரோடு மாவட்டம், அந்தியூரில் நடைபெறும் மாட்டு சந்தை, திருவாரூரில் திருவிழா நடைபெறும் காலங்களில் நடத்தப்பெறும் மாட்டு சந்தை போன்றவற்றில் பல்வேறு வகையான மாடுகளும் ஒரே இடத்தில் கூடுவதால் மாடுகளிடையே நோய் எளிதில் பரவுகிறது. நாங்கள் கால்நடைகளின் உயிர் பாதுகாப்பு நலனைக் கருதி மானாமதுரை மாட்டுச் சந்தை மூடிவிட்டதாகவும் இடைக்காலத் தடை அதற்கு விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த நோய் காற்றிலும் பரவும், தண்ணீரிலும் பரவும். எனவே, இந்த நோயைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றால், இதுபோன்ற சந்தையை கொஞ்சம் காலத்திற்கு மூடிவைக்க வேண்டியிருக்கிறது என அரசுச் செயலாளர் குழுவிற்கு விளக்கினார்.

74. இதுகுறித்து துறை உரிய முறையில் ஆய்வினை மேற்கொண்டு, சந்தை நடக்கும் இடங்களை வகைப்படுத்தி அங்கு தற்காப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

75. விலையில்லா கால்நடைகளுக்கு தடுப்பூசி போடுவது போன்று, தனியார்மூலம் பிற மாநிலங்களிலிருந்து தமிழகத்திற்கு கொண்டு வரும்போது கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டிருக்கிறதா என்பதை ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு துறையிடம் வலியுறுத்தியது.

76. இதற்கு அரசுச் செயலாளர் இப்போது அதைக் கட்டாயம் வலியுறுத்துகிறோம் என குழுவிடம் தெரிவித்தார்.

77. பிற மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு கொண்டுவரும் அனைத்து கால்நடைகளையும் தனியார் உள்பட சோதனை சாவடியில் கால்நடை மருத்துவரைக் கொண்டு, தடுப்பூசி போடப்பட்டிருக்கிறதா என்று ஆய்வு செய்ய வேண்டும். பின்னர்தான் அவற்றை உரிய இடத்திற்கு கொண்டு செல்ல அனுமதிக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

(XVI) தேசிய ஆட்டுக்கொல்லி நோய் தடுப்புத் திட்டம் (NCPPPR):

78. இந்நோயைக் கட்டுப்படுத்த மத்திய அரசின் 100 விழுக்காடு நிதியுதவியுடன் தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் செம்மறி மற்றும் வெள்ளாட்டினங்களுக்கு தடுப்பூசிப் பணி மேற்கொள்ளப்பட்டது. மேலும், விலையில்லா வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் வழங்கும் ஆடுகளுக்கு 2012–2013 ஆம் ஆண்டில் இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்த மாநில அரசு ரூ.3.83 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. நடப்பாண்டில் 57 இலட்சம் ஆட்டினங்களுக்கு ரூ.1.50 கோடி செலவினத்தில் ஆட்டுக் கொல்லி தடுப்பூசி போடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை துறை குழுவிற்குத் தெரிவித்தது.

79. ஆடுகள் அம்மை போன்ற நோய்களால் பாதிப்புக்குள்ளாகின்றன என்பதையும், எத்தனை சதவிகித ஆடுகளுக்கு தடுப்பூசி போடப்பட்டிருக்கின்றன என்பதையும், ஆடுகளுக்கு ஒரு வருடத்திற்கு எத்தனை முறை தடுப்பூசி போடப்படுகிறது என்பதையும் குழு அறிய விரும்பியது.

80. இதுகுறித்து கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் பின்வருமாறு தெரிவித்தார்:–

81. மாநிலம் முழுவதும் தடுப்பூசி போடப்படுகிறது. மத்திய, மாநில அரசு இணைந்து தடுப்பூசி போடும் திட்டத்தை செயல்படுத்திவருகிறது. இந்த நோய் தென் மாவட்டங்களான தூத்துக்குடி போன்ற மாவட்டங்களில் நிறைய இருக்கின்றன. 125 இலட்சம் தடுப்பூசி போட வேண்டும் என்று நிர்ணயம் செய்து அவற்றில் 122 இலட்சம் ஆடுகளுக்கு போட்டிருக்கிறோம். பருவகாலத்திற்கு ஏற்றாற்போல் தடுப்பூசி போட வேண்டும். சிலவகையான தடுப்பூசிகள் 6 மாதத்திற்கு ஒரு முறை போட வேண்டும். சிலவற்றை வருடத்திற்கு ஒரு முறைதான் போட வேண்டும். கிட்டத்தட்ட 90 சதவிகிதத்திற்கு மேல் தடுப்பூசி போடப்பட்டுள்ளன.

82. ஆடுகளைப் பொறுத்தவரையில் மூன்று விதமான தடுப்பு ஊசி இருக்கிறது. ஒரு இடத்தில் குறிப்பிட்ட பகுதியில் நோய் பாதிக்கப்பட்டு, அந்தப் பகுதி முழுவதும் 6 மாதத்திற்கு ஒரு முறை தடுப்பு ஊசி போடுகிறோமோ அதேமாதிரி இந்த நோய்களுக்கான 3 விதமான தடுப்பு ஊசிகளையும் ஒரு வருடம் முழுவதற்கும் ஆடுகளுக்குப் போடுவதற்கு துறையினுடைய கருத்து என்ன என்றும் **'வரும் முன் காப்போம்'** என்கிற அடிப்படையில் துறை செயல்பட வேண்டும் என்று குழு வலியுறுத்தியது.

83. நோய் வருவதற்கு முன்னால் கோமாரி நோய் தடுப்பூசி போடுகிறோம். ஒரு கிராமத்தில் உள்ள ஆடுகளுக்கு நோய் வந்தபிறகுதான் ஆந்திராக்ஸ் ஊசி போடுகிறோம். இந்த ஆந்திராக்ஸ் தடுப்பூசியை, நோய் வராத நேரத்தில் போட வேண்டிய அவசியம் கிடையாது. தடுப்பூசி போடுவதில் உள்ள நன்மை, தீமைகளை கவனத்தில் கொண்டுதான் தடுப்பூசி போடப்படுவதாக அரசுச் செயலாளர் குழுவிற்கு விளக்கினார்.

84. ஆடுகளுக்கு தடுப்பூசி போடுவதினால் ஏற்படும் நன்மைகள், தீமைகள் குறித்து மக்களிடையே முகாம்கள் நடத்துதன் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தி, துறையும் முறையாக தடுப்பூசிகளின் அவசியத்தை கருத்திற்கொண்டு உரிய நேரத்தில் தடுப்பூசி போட்டு ஆடுகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

(XVII) தேசிய கன்று வீச்சு நோய் தடுப்புத் திட்டம்:

85. இத்திட்டத்தின்கீழ் தமிழகத்தில் மேற்குத்தொடர்ச்சி மலைக்குட்பட்ட 9 மாவட்டங்களில் இளம் கிடேரிக் கன்றுகளுக்கு கன்று வீச்சு நோய்க்கான தடுப்பூசிப் பணி மேற்கொள்ளப்படுகிறது. மீதமுள்ள 23 மாவட்டங்களில் இந்நோய் உள்ளதா என கண்டறிய நிணநீர் கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2011–2012 ஆம் ஆண்டில் தடுப்பூசிப் பணி மேற்கொள்ள இத்திட்டத்தின்கீழ் மத்திய அரசால் ரூ.92.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்நோயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக 70 கால்நடை மருத்துவர்களுக்கு ஒரு நாள் விழிப்புணர்வு பயிற்சி முகாமும், 20 கால்நடை மருத்துவர்களுக்கு இரு நாள் பயிற்சி முகாமும் நடத்தப்பட்டது. ஆறு மாவட்டங்களில் நோயின் தாக்கம் உள்ளது என கண்டறியப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதர மாவட்டங்களில் இந்நோய் தாக்கம் உள்ளதா என்றும் குழு அறிய விரும்பியது.

86. இதற்கு துறை 23 மாவட்டங்களில் தேசிய கன்றுவீச்சு நோய் தடுப்புத் திட்டத்தின்கீழ் நிணநீர் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டதில் கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், கரூர் மற்றும் திருவாரூர் ஆகிய 6 மாவட்டங்களில் இந்நோயின் தாக்கம் உள்ளதாக அறியப்பட்டது என துறை குழுவிடம் தெரிவித்தது.

87. தேசிய கன்றுவீச்சு நோய் தடுப்புத் திட்டத்தின்கீழ் 23 மாவட்டங்களில் நிணநீர் கண்காணிப்பு மேற்கொண்டதில் கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், கரூர் மற்றும் திருவாரூர் ஆகிய 6 மாவட்டங்களில் இந்நோயின் தாக்கம் உள்ளதாக குழு அறிகிறது. இம்மாவட்டங்களில் இந்நோயின் தாக்கத்தை நீக்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும், எஞ்சிய மாவட்டங்களில் நிணநீர் கண்காணிப்புப் பணியை மேற்கொள்ள வேண்டுமெனவும் குழு பரிந்துரை செய்கிறது.

(XVIII) தேசிய வெக்கை நோய் ஒழிப்புத் திட்டம்:

88. தேசிய வெக்கை நோய் ஒழிப்புத் திட்டம் 1992 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு முழுவதும் உலக வெக்கை நோய் ஒழிப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக மத்திய அரசின் வழிமுறைகளைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. மார்ச் 1998 ஆம் ஆண்டு இம்மாநிலம் தற்காலிகமாக வெக்கை நோய் இல்லாத மாநிலமாக அறிவிக்கப்பட்டது. இறுதியாக 2002 ஆம் ஆண்டு மே மாதம் முதல் வெக்கை நோய் இல்லாத மாநிலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. 2012–2013 மற்றும் 2013–2014 ஆம் ஆண்டுகளில் நிணநீர் ஆய்வு மற்றும் தொடர் மருத்துவ கண்காணிப்புப் பணிகளுக்காக ரூ.15.00 இலட்சம் மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது என குழுவிற்கு துறை தெரிவித்தது.

(XIX) தேசிய கால்நடை நோய் தெரிவிக்கும் அமைப்பு (NADRS):

89. இத்திட்டத்தின் மூலம் கால்நடைகளில் ஏற்படும் நோய்கள் குறித்த தகவல் பரிமாற்றத்தில் தாமதம் ஏற்படாவண்ணம் உடனுக்குடன் களத்திலிருந்து மாநில தலைமையிடத்திற்கும், பின்னர் நாட்டின் மத்திய பிரிவிற்கும் தெரிவிக்கும் நோக்குடன் செவ்வனே செயல்படுத்தப்பட்டு வருகிறது. கணிப்பொறி வலைதளத்தின்மூலம் ஒரு மாவட்டத்தின் அனைத்து வட்டாரங்கள், மாவட்டத் தலைமையகம், மாநில தலைமையகம் ஆகியவை முறையே இணைக்கப்பட்டு, பின்னர் நாட்டின் மைய அலகுடன் இணைக்கப்படும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதனால் தொடரமைவு வாயிலாக கணிப்பொறிகளை இணைப்பதால் தகவல் பரிமாற்றத்திற்கான நேரம் குறைக்கப்படுவதோடு, தகவல் ஒருங்கிணைப்பு மற்றும் தகவல் உருவாக்க நேரமும் குறைக்கப்படுகிறது என துறை தெரிவித்தது.

(XX) கால்நடை மருத்துவ நிலையங்களுக்கு புதிய கட்டடம் கட்டுதல் மற்றும் பழைய மருந்தகக் கட்டடங்களைப் புதுப்பித்தல் (ESVHD):

90. இத்திட்டத்தின் மூலம் கால்நடைகளுக்கு நோய் தாக்கம் குறைந்து ஒட்டுமொத்த கால்நடை உற்பத்தித் திறன் அதிகரிக்க வழிவகை செய்கிறது.

91. மாநிலத்தில், கால்நடை மருத்துவ நிலையங்களில் பல கட்டடங்கள் சிதிலமடைந்த நிலையிலும் பல கால்நடை நிலையங்களை வாடகைக் கட்டடத்தில் நடத்துவதால் அதிக செலவினம் ஏற்படுவதோடு, விரிவுபடுத்த வசதியில்லாமல் ஒரு முழுமையான கால்நடை நிலையத்திற்குரிய கட்டமைப்பு வசதிகள் ஏதும் இல்லாமலும் இருக்கின்றன.

92. எனவே, உடனடியாக புனரமைப்பு தேவைப்படும் கால்நடை நிலையங்களைக் கண்டறிந்து **2012–2013** ஆம் ஆண்டில் **3** கால்நடை மருத்துவமனைகள், **32** கால்நடை மருந்தகங்கள் மற்றும் **107** ஊரக கால்நடை மருந்தகங்களை புதிதாக கட்டுவதற்காக மத்திய அரசு வழங்கிய ரூ.**16.57** கோடி நிதியிலிருந்து கட்டுமானப் பணிகள் நடைபெற்றுவருகின்றன என்பதை குழுவிற்கு துறை தெரிவித்தது.

(XXI) கால்நடை கணக்கெடுப்பு:

93. கால்நடை கணக்கெடுப்பு **100** விழுக்காடு மத்திய அரசின் நிதி உதவியுடன் நடத்தப்பட்டு வருகிறது. நமது நாட்டில் கால்நடை கணக்கெடுப்பு **1919–1920** ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. அன்றிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை இது நடத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் **19**–வது அகில இந்திய ஐந்தாண்டு கால்நடைக் கணக்கெடுப்பு **15–9–2012** அன்று தொடங்கி **14–10–2012** அன்று வரை நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

94. 19–வது கால்நடை கணக்கெடுப்பிற்காக ரூ.**15.00** கோடி இதுவரை மத்திய அரசினால் வழங்கப்பட்டுள்ளது. இந்த கணக்கெடுப்பு அரசின் கொள்கைகளை வகுக்கவும், விவசாயிகளுக்கு பயன்தரும் பல்வேறு திட்டங்களைத் தீட்டவும் தேவையான புள்ளிவிவரங்களை அளிக்கின்றது. மேலும் கால்நடைகள் இனம் மற்றும் வயது வாரியாகவும், கால்நடை வளர்ப்பு சம்பந்தப்பட்ட கருவிகள் உட்பட கணக்கெடுக்கப்படுகின்றன.

95. 19–வது கால்நடை கணக்கெடுப்பின் இனவாரியான கால்நடை கணக்கெடுப்பு தமிழ்நாட்டில் **15** விழுக்காடு கிராமங்களில் மட்டும் நடைபெற்று **31–8–2013** அன்று முடிவடைந்து அதன் பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களும் மத்திய அரசின் அறிவுரைப்படி பெங்களூரு புள்ளிவிவர நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டு புள்ளிவிவரம் பதியும் பணி நடைபெற்று வருவதாக குழுவிற்கு துறை தெரிவித்தது.

96. 19–வது கால்நடை கணக்கெடுப்பு **15** விழுக்காடு கிராமங்களில் மட்டும் நடைபெற்று **31–8–2013** அன்று முடிவடைந்து பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் பெங்களூரு புள்ளிவிவர நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டு, புள்ளிவிவரம் பதியும் பணி நடைபெற்று வருவதை முழுமையாக நிறைவேற்ற துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

(XXII) கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு மாநிலங்களுக்கு உதவிடும் திட்டம்:

97. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், கால்நடைகளுக்கு குறிப்பிட்ட இடங்களில் தோன்றும் நோய்களிலிருந்து காப்பாற்றுவதேயாகும். இத்திட்டத்தை **2012–2013** ஆம் ஆண்டில் செயல்படுத்துவதற்காக மத்திய அரசு ரூ.**4.61** கோடியும் **2013–2014** இல் செயல்படுத்த ரூ.**4.00** கோடியும் அளித்தது. **2012–2013** மற்றும் **2013–2014** இல்

இதன்மூலம் அடைப்பான் நோய், சப்பை நோய், தொண்டை அடைப்பான் நோய், ஆட்டம்மை நோய் ஆகிய நோய்களுக்கு தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை குழுவிடம் தெரிவித்தது.

(XXIII) ஒருங்கிணைந்த மாதிரி வரைவுத் திட்டம்:

98. மத்திய அரசின் 50 விழுக்காடு நிதியுதவியுடன் செயல்படும் மாதிரி வரைவுத் திட்டத்தின்மூலம் 1977–1978 முதல் ஒவ்வொரு ஆண்டும் மாதிரி கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்மூலம் மத்திய அரசின் கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறையின் வழிகாட்டுதலின்படி பால், முட்டை, இறைச்சி மற்றும் கம்பளி இவற்றின் உற்பத்தி அளவு மதிப்பீடு செய்யப்படுகிறது என்பதை துறை குழுவிற்கு தெரிவித்தது.

(XXIV) திட்டங்கள்:

99. கால்நடை உற்பத்தியைப் பெருக்க சிறந்த தேசிய கொள்கையை செயல்படுத்தி, புரதச் சத்து தேவையை நிறைவு செய்யவும், மக்களின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவதற்காகவும், கால்நடை பராமரிப்புத் துறையில் சிறந்த திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன என துறை தெரிவித்தது.

(i) விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டம்:

100. 2011–2012 ஆம் ஆண்டு முதல் ஊரகப் பகுதிகளில் வாழும் தகுதியுள்ள ஏழை குடும்பங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் 12,000 கலப்பின கறவைப் பசுக்கள் வழங்கி வருகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளில் 24,000 பயனாளிகளுக்கு 24,000 கறவைப் பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன என குழுவிடம் துறை தெரிவித்தது.

(ii) இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்:

(அ) இத்திட்டம் பால் உற்பத்தியும், பால் கூட்டுறவுச் சங்கங்களும் குறைவாக உள்ள கிராமங்களுக்கு முன்னுரிமை கொடுத்து செயல்படுத்தப்படுகிறது.

(ஆ) தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாத கிராமங்களில் கறவைப் பசுக்கள் வழங்கப்படுகின்றன. இதனால் இக்கிராம ஊராட்சிகளில் தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்படுகின்றன.

(இ) முதல் மற்றும் இரண்டாவது ஈற்றில் உள்ள, 5 வயதிற்குட்பட்ட கறவைப் பசுக்கள் மட்டுமே கொள்முதல் செய்யப்படுகின்றன.

(ஈ) குடும்பத்தில் உள்ள பெண்களே பயனாளிகளாகும். மேலும் பயனாளிகளுக்கு ஒரு ஏக்கர் நிலத்திற்குமேல் இருக்கக்கூடாது.

(உ) பசுக்கள் மாநிலத்திற்கு வெளியே இருந்து பயனாளிகளாலேயே கொள்முதல் செய்யப்படுகின்றன.

(ஊ) ஒரு பயனாளிக்கு ஒரு பசு கொள்முதல் செய்ய ரூ.30,000/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(எ) அந்தப் பயனாளி கறவைப் பசு கொள்முதலுக்காக சந்தைக்குச் சென்றுவர ரூ.1,000/– வழங்கப்படுகிறது. மேலும், தன்னுடைய கிராமத்திற்குக் கொண்டு வருவதற்கான செலவினமாக, தொலைவுக்கு ஏற்ப ரூ.2,000/–, ரூ.3,000/– வழங்கப்படுகிறது.

(ஏ) கால்நடைகளுக்கான காப்பீடு அரசு செலவிலேயே செய்யப்படுகிறது.

(ஐ) அக்கறவைப் பசுக்களுக்கு சிகிச்சை, இனவிருத்தி சேவைகளை கால்நடை பராமரிப்புத் துறைமூலம் அளிக்கப்படுகிறது.

(iii) விலையில்லா வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கும் திட்டம்:

101. தமிழ்நாட்டில் ஏழ்மை நிலையில் உள்ள நிலமில்லாத மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த விலையில்லா வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. ஒரு குடும்பத்திற்கு 4 வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வீதம் விலை ஏதுமின்றி கடந்த இரண்டு ஆண்டுகளில் 2.5 இலட்சம் பயனாளிகளுக்கு 10 இலட்சம் ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன என குழுவிற்கு துறை தெரிவித்தது.

(iv) இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்:

(அ) ஒவ்வொரு பயனாளிக்கும் வழங்கப்படும் 6 மாத வயதுடைய வெள்ளாடுகள் / செம்மறியாடுகளில் ஒன்று ஆணாகவும், இதர மூன்றும் பெட்டையாகவும் வழங்கப்படுகின்றன.

(ஆ) பயனாளிகள் மாநிலத்தில் உள்ள உள்ளூர் சந்தைகளில் இருந்தும், எல்லையோர மாவட்டங்களைப் பொறுத்தவரை அண்டை மாநில சந்தைகளில் இருந்தும் வெள்ளாடுகள் / செம்மறியாடுகளை வாங்கிக் கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர்.

(இ) குடும்பத்தில் உள்ள பெண்களே உண்மையான பயனாளியாகும். மேலும் பயனாளிகள் நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளியாக இருக்க வேண்டும்.

(ஈ) ஒரு வெள்ளாடு / செம்மறியாடு கொள்முதல் செய்வதற்கு ரூ.2,500/– வீதம் 4 ஆடுகளுக்கு மொத்தம் ரூ.10,000/– நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(உ) கொட்டகை கட்டுதல், ஊட்டச்சத்து வழங்குதல் ஆகியவற்றிற்காக ஆடு ஒன்றுக்கு ரூ.500/– வீதம் மொத்தமாக ரூ.2,000/– நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(ஊ) மேலும், சந்தையிலிருந்து ஆடுகளை தன்னுடைய கிராமத்திற்குக் கொண்டு செல்வதற்காக ஒரு பயனாளிக்கு ரூ.150 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(எ) ஆடுகளுக்கு அரசு செலவிலேயே காப்பீடு செய்யப்படுகின்றன.

(v) விலையில்லா கறவை மாடுகள் மற்றும் ஆடுகளை பயனாளிகள் விற்பதைத் தடுத்தல்

102. வெள்ளாடுகளுக்கு நல்ல நோய் எதிர்ப்பு சக்தி இருப்பதால், துறைமூலம் நிறைய பயனாளிகளுக்கு வெள்ளாடுகளை வழங்கலாம் என குழு துறையிடம் தெரிவித்தது.

103. இதற்கு, கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் குழுவிடம் உள்நாட்டு இனம் **(Local breed)** நன்றாக இருக்கும், நோய் தாங்கும். பயனாளிகள் என்ன விரும்புகிறார்களோ அவற்றை வழங்கிவிடுகிறோம். வெள்ளாடு கேட்பவர்களுக்கு வெள்ளாடுகளும், செம்மறி ஆடு கேட்பவர்களுக்கு செம்மறி ஆடும் வழங்கப்படுகிறது. இதில் தடை ஏதும் இல்லை. கிருஷ்ணகிரியில் வெள்ளாடுகள் தான் அதிகம் விரும்புகிறார்கள் என தெரிவித்தார்.

104. விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தில் தொடர்ந்து 4 ஆடுகள் வைத்திருக்கிறார்களா, அவற்றைப் பராமரிக்கிறார்களா என்பதைத் தொடர்ந்து துறைமூலம் கண்காணிக்கப்படுகிறதா என்பதை குழு அறிய விரும்பியது.

105. இதற்கு கால்நடை பராமரிப்புத் துறையின் இயக்குநர், கால்நடை பராமரிப்புத் துறை மூலம் மாதத்திற்கு ஒரு முறை இறுதி சனிக்கிழமையில் ஆய்வு செய்து அவற்றிற்கு அடையாளக் குறி அளிக்கப்படுகிறது. துறையிலிருந்து வழங்கப்பட்ட ஆடுகளின் உடல் நலம் சரியாக இருக்கிறதா என்பதை ஆராய்ந்தும், காணாமல் போன ஆடுகளுக்கு, காவல் துறையின் மூலமாக நடவடிக்கை எடுத்து அவற்றிற்குண்டான பணத்தினை உரிய பயனாளிகளிடமிருந்து வசூலித்துவிடுகிறோம். இதுவரையிலும் காணாமல் போன 92 மாடுகள் தொடர்பாக எப்.ஐ.ஆர். போடப்பட்டிருக்கிறது. 104 மாடுகள் காணாமல் போனதற்கு, அதனுடைய பயனாளிகளிடமிருந்து பணம் திரும்ப வசூலிக்க இருக்கிறோம். இவ்வாறு இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் கால்நடைகளை கண்காணிக்கப்படுகிறது என குழு முன் தெரிவித்தார்.

106. இவ்வாறு துறைமூலம் எத்தனை கிராமங்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என குழு கோரியது.

107. இதற்கு, தமிழ்நாட்டில் மொத்தம் 133 கிராமங்களில் அதுபோன்று நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் குழுமுன் தெரிவித்தார். மேலும், இது தொடர்பாக சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று அரசுச் செயலாளர் குழுவிற்குத் தெரிவித்தார்.

108. இப்போது அந்த அளவுக்கு விலையில்லாத கறவை மாடுகள், ஆடுகள் வழங்கும் திட்டத்தில் பெறும் ஆடு, மாடுகளை பயனாளிகள் விற்பனை செய்வதில்லை. மக்களிடையே இது தொடர்பாக என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பது குறித்த விழிப்புணர்வு ஏற்பட்டிருக்கிறது என கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் குழுவிற்குத் தெரிவித்தார்.

109. தற்போது விலையில்லாத கறவை மாடுகள் மற்றும் ஆடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் பெறும் ஆடு மற்றும் மாடுகளை பயனாளிகள் விற்பனை செய்யாதவாறும், வெண்மைப் புரட்சிக்கு வழிகாட்டும் இத்திட்டம் குறித்தும் பயனாளிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

<u>(XXV) கிராமப்புற புழக்கடை கோழி அபிவிருத்தித் திட்டம்:</u>

110. கிராமப்புற புழக்கடை கோழி அபிவிருத்தித் திட்டம், ஏழை விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக காஞ்சிபுரம், தருமபுரி, தஞ்சாவூர், திருவாரூர், சிவகங்கை, திருநெல்வேலி மற்றும் திருவள்ளூர் ஆகிய 7 மாவட்டங்களில் ரூ.45.60

இலட்சம் மொத்த செலவில், மத்திய அரசின் 100 விழுக்காடு மானியத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் தலா 300 பயனாளிகள் வீதம் 2,100 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, ஒவ்வொரு பயனாளிக்கும் 4 வார கோழிக் குஞ்சுகள் தலா 45 எண்ணிக்கையில் வழங்கப்பட்டுள்ளன என்று குழுவிற்கு துறை மூலம் தெரிவிக்கப்பட்டது.

111. கோழி வளர்ப்பு பற்றி பயனாளிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டு, கூண்டுகள், தீவனக்கலன்கள் மற்றும் நீர்க்கலன்கள் வாங்குவதற்காக ஒவ்வொரு பயனாளிக்கும் தலா ரூ.750/– அளிக்கப்படுகிறது எனவும், எந்த ஒரு முதலீடும் இல்லாமல் தங்கள் புழக்கடையில் நாட்டுக் கோழிகளை அவர்களை வளர்க்கச் செய்ததன் மூலம் அவர்களின் அன்றாட வருமானம் ஈட்டுவதற்கு இத்திட்டம் வழிவகை செய்துள்ளதை குழு அறிகிறது.

112. கிராமப்புற புழக்கடை கோழி அபிவிருத்தித் திட்டம் 2012–2013 ஆம் ஆண்டில் மேலும் 24 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்துவதற்குரிய கருத்துரு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது என துறை மேலும் குழுவிடம் தெரிவித்தது.

113. கிராமப்புற புழக்கடை கோழி வளர்ப்பு திட்டத்தினை செயல்படுத்தாத 24 மாவட்டங்களில் விரிவுபடுத்த கருத்துரு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, கருத்துருவுக்கு ஒப்புதல் கிடைத்தவுடன் இம்மாவட்டங்களில் இத்திட்டத்தினை செயல்படுத்த வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

(i) கறிக்கோழிப் பண்ணைகள் அமைத்தல் :

114. கறிக்கோழி வளர்ப்பு ஒருங்கிணைப்பு மூலமாக நடைமுறைப்படுத்தப் படுவதுடன், ஒருங்கிணைப்பாளர்கள் அவர்களின் சொந்த வழிமுறைகளிலேயே கறிக்கோழிகள் விற்பனை செய்வதை உறுதிப்படுத்துகிறார்கள். 5,000 கோழிகள் கொண்ட கறிக்கோழிப் பண்ணை ஒரு குடும்பத்தினுடைய உழைப்பை மட்டுமே கொண்டு இலாபகரமாக செயல்பட முடியும். ஆதலால், கூடுதலாக மனித உழைப்பு தேவைப்படுவதை தவிர்க்கிறது.

115. 2012–2013 ஆம் ஆண்டில் 7 மாவட்டங்களில், அதாவது சங்கரன்கோவில் மண்டலம் மற்றும் விழுப்புரம் மண்டலத்தில் கறிக்கோழி வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதைத்தவிர 2013–2014 ஆம் ஆண்டில் இத்திட்டம் 10 மாவட்டங்களில் விரிவுபடுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

116. நாட்டுக் கோழி உற்பத்தி செய்வது மற்றும் நாட்டுக் கோழி வளர்ப்பு முறை பற்றி எந்தெந்த வழிகளில் நடைமுறை பின்பற்றப்படுகிறது. பண்ணைகளில் மட்டும் தான் செயல்படுத்தப்பட்டு வருகிறதா என்பது குறித்து குழுவிற்குத் தெரிவிக்கவும்.

117. கடந்த இரண்டு வருடங்களாகத்தான் துறை கோழி வளர்ப்பில், அதாவது நாட்டுக் கோழியாக இருந்தாலும், பிராய்லர் கோழியாக இருந்தாலும் அதனுடைய வளர்ப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள். இத்திட்டத்திற்காக தமிழக அரசு 25 விழுக்காடு மான்யம் வழங்குகிறது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் கடனுதவி அளித்து உதவுகின்றன. இத்திட்டம் மத்திய அரசின் "கோழி துணிகர முதலீட்டு நிதி" திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. அதன் வாயிலாக விவசாயிகள் கோழிக் கொட்டகைகள் அமைக்க நபார்டு வங்கி மூலம் 25 விழுக்காடு மான்யம் வழங்கப்படுகிறது. மீதமுள்ள தொகையினை தனி நபர், விவசாயிகள் அல்லது தொழில் முனைவோர் தங்கள் சொந்தப் பணத்தின் மூலமாகவோ அல்லது வங்கிக் கடன் உதவி மூலமாகவோ பணிகளை மேற்கொள்ளலாம் என அரசுச் செயலாளர் குழு முன் விளக்கினார்.

118. 25 சதவிகிதம் மானியத்தை அரசு அளிப்பதாகவும், இதில் மத்திய அரசு வழங்கும் மானியம் மற்றும் மாநில அரசு வழங்கும் மானியம் குறித்து குழு அறிய விரும்பியது.

119. இதற்கு மாநில அரசு 25 சதவிகிதம் முன்மானியம் வழங்குகிறது. மத்திய அரசு கடன் பெற்று , நபார்டு வங்கி மூலமாகப் பின்மானியமாக வழங்குகிறது என்று குழுவிடம் அரசுச் செயலாளர் விவரித்தார்.

120. மத்திய அரசின் மானியம் சரிவர பயனாளிகளுக்குக் கிடைத்து வருகிறதா என துறையிடம் குழு கோரியது.

121. இதற்கு, மத்திய அரசின் முழு மானியமும் கிடைக்கிறது. மேலும், இதிலே முக்கிய கருத்து என்னவென்றால், மாநில அரசின் முன்மானியத்தை வைத்துக் கொண்டுதான், ஏழை விவசாயிகள் கோழிகளை வளர்க்கத் தேவையான கொட்டகை போன்றவற்றை அமைத்துக்கொள்ள உதவியாக உள்ளது என்று துறை குழுவிற்கு விளக்கியது.

122. கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர், கோழி வளர்ப்பை ஊக்குவிக்க 2012–2013 ஆம் ஆண்டில் ரூ.22.35 கோடியும், 2013–2014 ஆம் ஆண்டில் ரூ.25.00 கோடியும் ஆக மொத்தம் ரூ.47 கோடியே 35 இலட்சத்தை அரசு வழங்கியுள்ளது என்று சென்னையில் நடைபெற்ற குழு கூட்டத்தில் தெரிவித்தார்.

123. மேலும், கோழி வளர்ப்புக்கு மத்திய அரசிடமிருந்து 30 கோடி ரூபாய் நிதியினை வாங்கி முழுமையாகப் பயன்படுத்தியிருக்கிறோம். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு 1,058 கறிக்கோழிப் பண்ணைகள் கட்டவேண்டும் என்ற இலக்கு வைத்துள்ளோம். அவற்றில் 419 கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மார்ச் மாதத்திற்குள் மீதமுள்ள பண்ணைகள் கட்டி முடிக்கப்பட்டுவிடும் என்று துறையின் அரசுச் செயலாளர் 30.12.2013 அன்று சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் குழுவிற்குத் தெரிவித்தார்.

124. கோழி வளர்ப்புக்கு மத்திய அரசிடமிருந்து 30 கோடி ரூபாய் நிதியைப் பெற்று அதன்மூலம் 419 கறிக்கோழிப் பண்ணைகள் கட்டப்பட்டுள்ளது. சீக்கிரம் மீதமுள்ள 639 பண்ணைகளை கட்டி முடிக்க குழு கேட்டுக்கொள்வதுடன், 25 சதவிகிதம் முன்மானியம் செப்டம்பர் மாதம் தான் வந்திருக்கிறது என குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது. மார்ச் மாதத்திற்குள் அந்த நிதி முழுவதும் செலவழிக்கப்பட்டு பணிகள் முடிக்கப்படுவதற்கு துறை விரைவான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

(ii) நாட்டுக்கோழி வளர்ப்பு:

125. நாட்டுக்கோழி வளர்ப்பு 250 நாட்டுக்கோழிகள் என்ற சிறிய அளவில் இலாபகரமாக வளர்க்கவும் மற்றும் விவசாயியே அதனை விற்பனை செய்யவும் ஊக்குவிக்கப்படுகின்றனர். நாட்டுக்கோழி இறைச்சி மற்றும் முட்டைக்கு மாநிலமெங்கும் நல்ல விற்பனை வாய்ப்பு இருப்பதால், பயனாளி, நாட்டுக்கோழி குஞ்சு பொரிப்பகங்கள் / உற்பத்தி செய்பவர் ஆகியோருடன் மனமொத்த ஒப்பந்தம் மூலம் ஒப்புக்கொள்ளப்பட்ட விலைகளில் அவர்கள் தொடர்ந்து நாட்டுக்கோழிக் குஞ்சுகளை பயனாளிகளுக்கு விநியோகிக்கவும் மற்றும் பயனாளிகளே வளர்க்கவும், விற்பனை செய்யவும் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

126. 2012–2013 ஆம் ஆண்டில் 560 நாட்டுக்கோழிப் பண்ணை குறியீட்டிற்கு 555 பண்ணைகள் கட்டி முடிக்கப்பட்டு 536 பண்ணைகளில் கோழிக்குஞ்சுகள் பராமரிக்கப்படுகின்றன மற்றும் 2013–2014 ஆம் ஆண்டில் 4,080 நாட்டுக்கோழிப் பண்ணை

குறியீட்டிற்கு இதுவரை 1,387 பயனாளிகளுக்கு வங்கியிலிருந்து ஒப்புதல் பெறப்பட்டு பயனாளிகளுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது என்றும் துறையின் செயலர் தெரிவித்தார்.

127. 2013–2014 ஆம் ஆண்டில் 4,080 நாட்டுக்கோழிப் பண்ணை குறியீட்டில் 1,387 பயனாளிகளுக்கு மட்டுமே வங்கியிலிருந்து ஒப்புதல் பெறப்பட்டு பயனாளிகளுக்கு பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. எஞ்சியுள்ள 2,693 பயனாளிகளுக்கு வங்கிமூலம் ஒப்புதல் பெற துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

(iii) தமிழக எல்லைக்குள் கோழிகளை கொண்டுவரும் வாகனங்கள் மீது மருந்து தெளித்தல்

128. தமிழக எல்லைக்குள் வெளி மாநிலங்களிலிருந்து வாகனங்களின் மூலம் கொண்டு வரப்படும் கோழி இனங்களுக்கு சான்றிதழ் வாங்குவது நடைமுறையில் உள்ளதா அல்லது அவைகளை கொண்டுவருகின்ற வாகனங்கள் மீது பூச்சிக்கொள்ளியினை தெளிப்பான்கள் மூலம் தெளித்து வாகனங்களை பரிசோதித்து அனுப்பி வைக்கப்படுகின்றதா என்றும் கேரளா மாநிலத்தில் இவ்வாறு பரிசோதித்த பின்னர் அனுப்பி வைக்கப்படுகிறதா என்பதை குழு அறிய விரும்பியது.

129. இதற்கு துறையின் அரசுச் செயலாளர் தற்போது இது போன்ற நோயின் தாக்கம் ஏதும் இல்லாததால் மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளை துறையால் பின்பற்றப் படுவதில்லை என்றும், கேரளா மாநிலத்தில் பின்பற்றுவதைப்போல் தேவைப்பட்டால் தமிழ்நாட்டிலும் அத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ளப்படும் என்று குழுவிற்கு தெரிவித்தார்.

130. கோழிகளுக்கு நோயின்மை சான்றிதழ் வழங்குவதில் ஏதேனும் இடர்பாடுகள் உள்ளதா என்பதை குழு அறிய விரும்பியது.

131. கோழிகளுக்கு நோயின் தாக்கம் இல்லாத நிலையில் இதனை பின்பற்ற வேண்டிய அவசியம் இல்லை என்றும் கோழிகளை பறவை காய்ச்சல் நோய் தாக்காமல் இருப்பதற்கு தேவையான முன் எச்சரிக்கை நடவடிக்கையையும், கண்காணிப்பும் துறையால் மேற்கொள்ளப்படுகிறது என அரசுச் செயலாளர் குழுவிடம் விளக்கினார்.

132. கோழிகள் எப்பகுதியில் இருந்து கொண்டு வரப்படுகின்றன என்பதற்கான (Zoning Certificate) வழங்குவதற்கான பணிகளை மத்திய அரசு தான் பரிந்துரை செய்கிறது. அவர்கள் ஒவ்வொரு மாதமும் அதனை ஆய்வு செய்து அதனை கால்நடை நோய் புலனாய்வு பிரிவிற்கு அனுப்பிவைப்பார்கள். (animal disease intelligence unit) எனவே, சான்றிதழ் வழங்குவதில் பிரச்சினைகள் எதுவும் இல்லை என கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் குழுவிற்குத் தெரிவித்தார்.

133. பிறமாநிலங்களில் நடைமுறையில் உள்ளது போல் வெளிமாநிலங்களிலிருந்து வரும் கோழி இனங்களும் தமிழக எல்லையில் சான்றிதழ்கள் வழங்கவும் மற்றும் வாகனங்கள் மீது தெளிப்பான்கள்மூலம் மருந்துகளை தெளிப்பதற்கும் துறை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

(XXVI) மாநில தீவன அபிவிருத்தித் திட்டம் 2012–2013:

134. இத்திட்டத்தின்கீழ் 2012–2013 ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதிலும் ரூ.20 கோடி செலவில் 44,363 விவசாயிகள் பயனடையும் வகையில் 16,000 எக்கர் நீர்ப்பாசன வசதியுடன் கூடிய விவசாயிகளின் நிலங்கள் உயர்விளைச்சல் தீவனப்புல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதனால் ஒவ்வொரு ஆண்டும் 16 இலட்சம் மெட்ரிக் டன் கூடுதல் தீவனம் உற்பத்தி செய்யப்படும்.

135. இத்திட்டத்தின்கீழ் அனைத்து பயனாளிகளுக்கும் தீவனப் பயிர் சாகுபடி மற்றும் பயன்பாட்டினை மேம்படுத்துவது குறித்த பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது எனவும் துறை தெரிவித்தது.

136. மேலும், இத்திட்டத்தின் கீழ் 2013–2014 ஆம் ஆண்டில், மாநிலம் முழுவதிலும் ரூ.25 கோடி செலவில் விவசாயிகள் பயனடையும் வகையில் நவம்பர் 2013 முடிய, 4,800 ஏக்கர் நீர்ப்பாசன வசதியுடன் கூடிய விவசாயிகளின் நிலங்கள் உயர்விளைச்சல் தீவனப்புல் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் தீவனப்புல் சாகுபடி முறைகள் குறித்து அனைத்து பயனாளிகளுக்கும் மற்றும் கால்நடை மருத்துவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது என்றும், நீர்த்தெளிப்பான் நிறுவும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும் 30 இலட்சம் அகத்தி மர நாற்றுகள் மாநிலம் முழுவதும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன என்பதை குழுவிற்கு துறை விளக்கியது.

(XXVII) மாநில தீவன அபிவிருத்தித் திட்டம் 2013–2014:

137. இவ்வாண்டில் (2013–2014) மாநிலத் தீவன அபிவிருத்தித் திட்டத்தினை செயல்படுத்திட ரூ.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(i) நீர் வசதியுடனான விவசாய நிலங்களில் உயர்ரக தீவனப் பயிர் சாகுபடி:

138. நீலகிரி மற்றும் சென்னை மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் 12,000 ஏக்கர் உயர் ரக தீவன சாகுபடியின்கீழ் கொண்டு வரப்படும் என்றும் ஓர் அலகான கால் ஏக்கர் பரப்பிற்கு 100 சதவீதம் மானியமாக ரூ.3,000/– நிலம் மேம்பாடு, உழவு, தீவனக் கரணை, நடவு, பின்செய் நேர்த்தி மற்றும் உரங்களுக்காக வழங்கப்படும் என்றும் துறை தெரிவித்தது.

(ii) நீர் தெளிப்பான் கருவி நிறுவுதல்:

139. நீரினை எவ்வித இழப்பும் இல்லாமல் முழுமையாக பயன்படுத்திட, 3,000 ஏக்கர் பரப்பளவில் 75 சதவீதம் மானிய விலையில் நீர் தெளிப்பான் கருவிகள் ரூ.562.50 இலட்சத்தில் தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமையின் மூலம் ஒப்புதல் செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள் மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மொத்த விற்பனை விலை ரூ.25,000/– (75 சதவிகித மானியமாக ரூ.18,750/– விவசாயிக்கு கருவி ஒன்றுக்கு வழங்கப்படும்) என துறை தெரிவித்தது.

(iii) விசை தீவன நறுக்கும் கருவி விநியோகம்:

140. 2,550 எண்கள் விசை தீவன நறுக்கும் கருவி 75 சதவிகிதம் மானிய விலையில் ரூ.382.5 இலட்சம் செலவினத்தில் தமிழ்நாடு கால்நடை வளர்ச்சி முகமையின் மூலம் ஒப்பந்தப்புள்ளி முறையில் கொள்முதல் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படும் என்று துறை தெரிவித்தது.

(iv) அகத்தி மரக் கன்றுகள் விநியோகம்:

141. 7 துறையின் பண்ணைகளில் மொத்தம் 30 இலட்சம் அகத்தி மரக் கன்றுகள் பாலித்தீன் பைகளில் வளர்க்கப்பட்டு அனைத்து மாவட்டங்களில் தேர்வு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு மொத்தம் ரூ.83.85 இலட்சம் செலவினத்தில் விநியோகம் செய்யப்படும். விலையில்லா கறவை பசு மற்றும் ஆடு வழங்கும் திட்ட பயனாளிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்பதை குழுவிற்கு துறை விளக்கியது.

(v) தீவன உற்பத்தி மற்றும் அதன் பயன்பாடு குறித்து தகவல் கல்வி தொடர்பு ரீதியான முகாம்கள் நடத்துதல்:

142. தீவன சாகுபடி தொழில்நுட்பங்கள் மற்றும் புதிய தொழில் நுணுக்கங்கள் விவசாயிகளின் மத்தியில் கொண்டு செல்ல களப்பணி அலுவலர்களுக்கு ரூ.20 இலட்சம் செலவினத்தில் பயிற்சி அளிக்கப்படும் எனவும் குழுவிற்கு துறை விளக்கம் அளித்தது.

(XXVIII) கால்நடை மருந்தகம் அமைத்தல்

143. திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் தொகுதியில் பச்சைமலை என்ற இடத்தில் ஒரு கால்நடை மருந்தகம் அமைக்கும் கருத்துருவின் தற்போதைய நிலை என்ன என்பதை குழு அறிய விரும்பியது.

144. இது குறித்து ஆய்வினை துறையால் மேற்கொள்ளப்படும் என அரசுச் செயலாளர் உறுதியளித்தார்.

145. திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் தொகுதி, பச்சைமலையில் கால்நடை மருந்தகம் அமைக்கும் கருத்துருவினை ஆய்வு செய்து, கால்நடை மருந்தகம் அமைத்திட துறை விரைவாக நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

(XXIX) கால்நடை கிளை நிலையம் துவக்குதல்

146. தேனி மாவட்டத்தில் குழுவின் ஆய்வுப் பயணத்தின் போது, 2013–2014 ஆம் ஆண்டில் புதியதாக கால்நடை கிளை நிலையம் துவங்க 19 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, இயக்குநர், கால்நடை பராமரிப்புத் துறை, சென்னை அவர்களுக்கு 6–5–2013 அன்று கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது. அதன் தற்போதைய நிலையை குழு அறிய விரும்பியது.

147. 2013–2014 ஆம் ஆண்டு கால்நடை கிளை நிலையம் மற்றும் கால்நடை மருந்தகம் தரம் உயர்த்தும் திட்டம் மட்டுமே இடம் பெறறுள்ளது. புதிய கால்நடை கிளை நிலையம் துவங்கும் திட்டம் ஏதும் அரசின் செயற்குறிப்பில் இல்லை. வரும் ஆண்டில் இத்திட்டம் இடம் பெறும் பொழுது இக்கோரிக்கை பரிசீலிக்கப்படும் எனவும் துறைமூலம் குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது.

148. தேனி மாவட்டத்தில் 2013–2014 ஆம் ஆண்டில் புதியதாக கால்நடை கிளை நிலையம் துவங்க 19 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, இதற்கான கருத்துரு 6–5–2013 அன்று சென்னை, கால்நடை பராமிப்புத் துறை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதை குழு அறிந்தது. இப்புதிய கால்நடை கிளை நிலையம் துவக்குவதற்கு துறை மூலம் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

149. திருநெல்வேலி மாவட்டத்தில் குழு ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது, 2013–2014 ஆம் ஆண்டில் சேதுராயன்புதூர் கிராமத்தில் கிளை நிலையம் துவங்க இயக்குநர், கால்நடை பராமரிப்புத் துறை, சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது. அக்கருத்துருவின் தற்போதைய நிலை குறித்து குழு அறிய விரும்பியது.

150. திருநெல்வேலி மாவட்டம், சேதுராயன்புதூர் கிராமத்தில் உரிய நடவடிக்கை மேற்கொண்டு புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

(XXX) கால்நடை மருத்துவமனை அமைத்தல்

151. விருதுநகர் மாவட்டத்தில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது, ஸ்ரீவில்லிபுத்தூரில் கால்நடை மருத்துவமனை அமைப்பதற்கான கருத்துருவை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அரசுக்கு அனுப்பி வைக்க குழு கோரியவாறு துறையிடமிருந்து கருத்துரு பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளதா என குழு அறிய விரும்பியது.

152. இதற்கு துறை கருத்துரு விருதுநகர் மண்டல இணை இயக்குநரிடமிருந்து பெற்று விரைவில் அரசுக்கு அனுப்பிவைக்கப்படும் என குழுவிற்குத் தெரிவித்தது.

153. விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிப்புத்தூரில் கால்நடை மருத்துவமனை அமைப்பதற்கான கருத்துருவை அரசுக்கு விரைவில் அனுப்பி ஒப்புதல் பெற்று அங்கு கால்நடை மருத்துவமனை அமைக்க துறை நடவடிக்கை மேற்கொள்ளுமாறு குழு பரிந்துரை செய்கிறது.

154. குழு, சென்னை மாவட்டத்தில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது, 2011–2012 மற்றும் 2012–2013 ஆம் ஆண்டுகளில் ஏன் புதிய கால்நடை மருந்தகங்கள் துவங்கப்படவில்லை என குழு கேட்டறிந்தபோது, சைதாப்பேட்டை பன்முக மருத்துவமனையின் முதன்மை மருத்துவர் அவர்கள் சென்னை மாவட்டத்தின் எல்லையினை விரிவுபடுத்தியதால் 5 கால்நடை மருத்துவமனைகள் தேவைப்படுகிறது என்றும், இது தொடர்பாக ஆணையரைத் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கையினை மேற்கொள்வதாக குழுவிடம் தெரிவித்தார். இதன் தொடர்பாக, கருத்துரு ஏதேனும் துறையிடமிருந்து அரசுக்கு வரப்பெற்றுள்ளதா அல்லது துறையிடம் இத்தகைய கருத்துரு ஏதேனும் உள்ளதா என குழு துறையிடம் கோரியது.

155. இதற்கு துறை கருத்துரு ஏதும் பெறப்படவில்லை **என்றும்,** கருத்துரு விரைவில் பெற்று அனுப்பி வைக்கப்படும் என குழுவிடம் தெரிவித்தது.

156. சென்னையில் ஐந்து கால்நடை மருத்துவமனைகள் தேவைப்படுகிறது என்பதை குழு அறிகிறது. எனவே இது தொடர்பாக கருத்துருவை அரசுக்கு அனுப்பி புதிதாக 5 கால்நடை மருத்துவமனைகள் அமைக்க துறை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

(XXXI) சைதாப்பேட்டை கால்நடை பன்முக மருத்துவமனைக்கு தேவையான அடிப்படை வசதிகளைச் செய்தல்

157. சைதாப்பேட்டை கால்நடை பன்முக மருத்துவமனைக்கு நவீன எக்ஸ்ரே கருவி, டிஜிட்டல் கலர் கருவி, நவீன அல்ட்ரா சவுண்டு ஸ்கேன் கருவி, நவீன இசிஜி கருவி, ஐசியு யூனிட், குழந்தை அடைகாக்கும் பேழை, எண்டாஸ்கோப் கருவி, நவீன தசை வலி நீக்கம் கருவிகள், நவீன ஆய்வுக்கூடம், நவீன அறுவை சிகிச்சைக் கூடம், கணினிமயமாக்கம் மற்றும் அவசர சிகிச்சைக்கான வசதிகள் போன்றவை தேவையாக உள்ளது என்றும், குளிர்சாதன வசதியுடன் கூடிய பெரிய வாகனம் மற்றும் 24 மணி நேரமும் பணிபுரிய ஓட்டுநர்கள் தேவையெனவும் குழுவிடம் கோரிக்கை வைக்கப் பெற்றது.

158. இதற்கான கருத்துருவை உருவாக்கி துறை பரிசீலிக்கலாம் என குழு கருதுகிறது. இதற்கு துறையின் கருத்தினை குழு அறிய விரும்பியது.

159. இதற்கு துறை சைதாப்பேட்டை கால்நடை பன்முக மருத்துவமனை, பிரதம மருத்துவரிடமிருந்து கருத்துரு பெறப்பட்டு விரைவில் அரசின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்படும் என குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது.

160. சைதாப்பேட்டை கால்நடை பன்முக மருத்துவமனைக்குத் தேவையான வசதிகளை மேம்படுத்திட கருத்துருவை அரசுக்கு அனுப்பி ஆணை பெற்று பணிகளை மேற்கொள்ள துறை நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

161. சைதாப்பேட்டை கால்நடை பன்முக மருத்துவமனை பணியாளர்களுக்கு குடியிருப்பு கட்டப்பட வேண்டும் என துறை சார்பாக குழுவிடம் கோரிக்கை வைக்கப் பெற்றது. இதற்கு துறையிடம் ஏதேனும் கருத்துரு உள்ளதா என்று குழு கோரியது. இதற்கு துறை கருத்துரு பெற்றவுடன், நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என குழுவிடம் தெரிவித்தது.

162. சைதாப்பேட்டை கால்நடை பன்முக மருத்துவமனையின் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுவதற்குரிய கருத்துருவை அரசுக்கு அனுப்பி ஆணையினை பெற துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

XXXII) செங்கல்பட்டு கால்நடை பெருமருத்துவமனையை பன்முக மருத்துவமனையாகத் தரம் உயர்த்துதல்

163. குழு, காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது, 2013–2014 ஆம் ஆண்டில் செங்கல்பட்டு கால்நடை பெருமருத்துவமனையை 24 மணிநேரம் இயங்கும் கால்நடை பன்முக மருத்துவமனையாகத் தரம் உயர்த்த எடுக்கப்பட்ட நடவடிக்கையின் தற்போதைய நிலையினை குழு அறிய விரும்பியது.

164. இதற்கு துறை காஞ்சிபுரம் மண்டல இணை இயக்குநரிடமிருந்து கருத்துரு பெறப்பட்டு விரைவில் அரசுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று குழுவிற்குத் தெரிவித்தது.

165. செங்கல்பட்டு கால்நடை பெருமருத்துவமனையை 24 மணி நேரம் இயங்கும் கால்நடை பன்முக மருத்துவமனையாகத் தரம் உயர்த்திட கருத்துருவை அரசுக்கு அனுப்பி ஆணை பெற்று, உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

(XXXIII) கட்டமைப்பை வலுப்படுத்துதல் மற்றும் கட்டடங்களைப் புதுப்பித்தல் திட்டம்:

166. 2012–2013 ஆம் ஆண்டில் கட்டமைப்பை வலுப்படுத்துதல் மற்றும் கட்டடங்களைப் புதுப்பித்தல் திட்டத்தின்கீழ் சிறந்த கால்நடை மருத்துவ சேவைகளை வழங்குவதற்காக 402 கால்நடை நிலையங்கள் / அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல் மற்றும் புனரமைப்புப் பணிகளுக்காக ரூ.22 கோடியும், புதிய அறையணிகள் வாங்குவதற்காக ரூ.3 கோடியும் அரசு ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன என துறை தெரிவித்தது.

167. வேப்பேரியில் உள்ள 110 ஆண்டுகள் கடந்து பழமை வாய்ந்த கால்நடை மருத்துவக் கல்லூரியில் உள்ள பழைய கட்டடங்களைப் புதுப்பிப்பதற்காக ரூ.15 கோடி நிதி தேவைப்படுவதாக குழுவிடம் கோரிக்கை வைக்கப்பட்டது. இது குறித்து துறையிடம் ஏதேனும் கருத்துரு உள்ளதா என்றும், அவ்வாறு கருத்துரு இல்லை என்றால், அப்பணிகளை துறையால் மேற்கொள்ள இயலுமா என குழு அறிய விரும்பியது.

168. 110 ஆண்டுகள் கடந்து பழமை வாய்ந்த வரலாற்றுச் சிறப்புமிக்க வேப்பேரி கால்நடை மருத்துவக் கல்லூரி உள்ள கட்டடங்களை புதுப்பிக்க மதிப்பீடு தயார் செய்து ஆணையினை பெற்று பணியை துவக்க துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

169. 2012–2013 ஆம் ஆண்டில் 20 புதிய கால்நடை மருந்தகங்களுக்கு கட்டடங்கள் கட்டுவதற்காக ரூ.6 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருவதாக குழு அறிகிறது. அப்பணிகளின் தற்போதைய நிலை குறித்து குழு அறிய விரும்பியது.

170. இதற்கு துறை ரூ.6 கோடி செலவில் 20 புதிய கால்நடை மருந்தகம் கட்டும் பணிகளுக்கு அரசாணை பெற்று (ஒரு கால்நடை மருந்தகம் ரூ.27.99 இலட்சம் மதிப்பீட்டில்) பணிகள் நடைபெற்று வருகின்றன. அதில் விழுப்புரம் மாவட்டத்தில் எல்லோடு கால்நடை மருந்தகப் பணி முடிவுற்று ஒப்படைக்கப்பட்டுவிட்டது. மேலும், மீதமுள்ள 19 கால்நடை மருந்தக கட்டடப் பணிகள் நடைபெற்று வருகிறது என்பதையும் துறை குழுவிற்கு விளக்கியது.

171. 2012–2013 ஆம் ஆண்டில் 20 புதிய கால்நடை மருந்தகங்களுக்கு ரூ.6 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் விழுப்புரம் மாவட்டத்தில் எல்லோடு கிராமத்தில் கால்நடை மருந்தகப் பணி நிறைவுபெற்றது. மீதமுள்ள 19 கால்நடை மருந்தக கட்டடப் பணிகளை முடிக்க துறை துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

172. குழு, திருநெல்வேலி மாவட்டத்தில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது, 2013–2014 ஆம் ஆண்டில் மண்டல இணை இயக்குநர் அலுவலகம், உறைவிந்து வங்கி, கால்நடை மருந்தகங்கள், வெங்கடாம்படி, அயன்சிங்கம்பட்டி, பாப்பான்குளம், ஏர்வாடி, தென்காசி, ஊத்துமலை, ஆலங்குளம், சுரண்டை, ஆவுடையானூர், பாவூர்சத்திரம், சங்கரன்கோவில் மற்றும் வள்ளியூர் ஆகிய கால்நடை நிலைய கட்டடங்களுக்கு நிதி ஒதுக்கீடு கோரி கருத்துரு தலைமை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என துறை தெரிவித்துள்ளது. அதன் தற்போதைய நிலை குறித்து குழுவிற்கு விளக்க துறையிடம் கேட்கப்பட்டது.

173. 2013–2014 ஆம் ஆண்டில் ரூ.418.00 இலட்சம் மதிப்பீட்டில் 19 கால்நடை மருந்தகங்கள் திருநெல்வேலி மாவட்டத்தில், நபார்டு XIX திட்டம்மூலம் புதியதாக கட்டுவதற்கு கருத்துரு அனுப்பப்பட்டு நபார்டு வங்கியின் ஒப்புதலை எதிர்நோக்கியுள்ளது என குழுவிடம் துறை தெரிவித்தது.

174. 2013–2014 இல் நபார்டு XIX திட்டத்தின்கீழ் 19 கால்நடை மருந்தகங்களுக்கு திருநெல்வேலி மாவட்டத்தில் புதிதாக கட்டடங்கள் கட்டுவதற்கான கருத்துருக்கு ஒப்புதல் பெற்று விரைவாக நடவடிக்கை எடுக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

175. 2012–2013 ஆம் ஆண்டு திருவள்ளூர் மாவட்டத்தில், 1 கோடியே 49 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் தேவதானம், ஞாயிறு, அத்திமாஞ்சேரிப்பேட்டை, ஆற்காடுகுப்பம், நரசிங்கபுரம் ஆகிய 5 கால்நடை மருந்தகம் மற்றும் பூந்தமல்லி கால்நடை மருத்துவமனை ஆகிய பணிகளின் தற்போதைய நிலை, பணிகள் துவங்கப்பட்ட நாள் மற்றும் பணிகள் நிறைவடையும் நாள் ஆகியவற்றை குழு அறிய விரும்பியது.

176. புதிய கட்டடம் கட்டுதல் மற்றும் புதுப்பித்தல் திட்டத்தில் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள கீழ்குறிப்பிடப்பட்டுள்ள கால்நடை மருந்தகங்கள் மற்றும் கால்நடை மருத்துவமனையில் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை துறை குழுவிற்கு தெரிவித்தது.

வ.எண்	இடம்	பணியின் நிலை
1	கால்நடை மருந்தகம், தேவதானம்	ஒப்பந்தம் முடிவடைந்த நிலை
2	கால்நடை மருந்தகம், ஞாயிறு	ஒப்பந்தம் முடிவடைந்த நிலை
3	கால்நடை மருந்தகம், அத்திமாஞ்சேரிப் பேட்டை	ஒப்பந்தம் முடிவடைந்த நிலை
4	கால்நடை மருந்தகம், ஆற்காடுகுப்பம்	ஒப்பந்தம் முடிவடைந்த நிலை
5	கால்நடை மருந்தகம், நரசிங்கபுரம்	ஒப்பந்தம் முடிந்து பணிகள் நடைபெற்று வருகிறது.
6	கால்நடை மருத்துவமனை, பூந்தமல்லி	கூரை (Roof) அமைக்கப்பட்டுள்ளது.

177. 2012–2013 ஆம் ஆண்டு புதிய கட்டடம் கட்டுதல் மற்றும் புதுப்பித்தல் திட்டத்தில் திருவள்ளூர் மாவட்டத்தில் தேவதானம், ஞாயிறு, அத்திமாஞ்சேரிபேட்டை, ஆற்காடுகுப்பம் மற்றும் நரசிங்கபுரம் ஆகிய கால்நடை மருந்தகக் கட்டடங்கள் மற்றும் பூந்தமல்லி கால்நடை மருத்துவமனை கட்டடம் ஆகியவற்றை விரைவில் கட்டித்தர உரிய நடவடிக்கை எடுத்து, பயன்பாட்டிற்கு கொண்டுவரவேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

178. திருவள்ளூர் மாவட்டத்தில் **2012–2013** ஆம் ஆண்டில் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ரூ.45 இலட்சம் செலவில் பூரிவாக்கம், ஒபசமுத்திரம் மற்றும் திருவாலங்காடு ஊரக கால்நடை மருந்தகங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளின் தற்போதைய நிலை குறித்து குழு அறிய விரும்பியது.

179. தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்மூலம் பூரிவாக்கம் ஊரக கால்நடை மருந்தக நிலம் தொடர்பாக **18–12–2013** அன்று திருவள்ளூர் நீதிமன்றத்தில் வழக்கு முடியும் நிலையில் உள்ளது. ஒபசமுத்திரம் ஊரக கால்நடை மருந்தகம் கட்டடப் பணிகள் முடிந்து திறக்கும் நிலையில் உள்ளது. திருவாலங்காடு ஊரக கால்நடை மருந்தகம் தளம் போடப்பட்டநிலையில் உள்ளது என துறைமூலம் குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது.

180. 2012–2013 ஆம் ஆண்டில் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்மூலம் பூரிவாக்கம் ஊரக கால்நடை மருந்தகத்திற்கு தேர்வு செய்யப்பட்ட நிலம் தொடர்பாக திருவள்ளூர் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ள வழக்கினை முடிக்கப்பெற்று ஊரக பூரிவாக்கம் கால்நடை மருந்தக நிலம் தொடர்பான வழக்கு முடிவுற்றதும் அங்கு கால்நடை மருந்தகம் அமைக்க துறை விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

181. திருவள்ளூர் மாவட்டத்தில் **2011–2012** ஆம் ஆண்டு தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் உள்கட்டமைப்பு அபிவிருத்தி நிதி திட்டத்தின்கீழ், 293 கோடியே 26 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பணிகளின் தற்போதைய நிலையை குழு அறிய விரும்பியது.

182. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் உள்கட்டமைப்பு அபிவிருத்தி நிதி (17) திட்டம், **2011–2012** இன்கீழ் திருவள்ளூர் மாவட்டத்தில் ரூ.293 கோடியே 26 இலட்சம் மதிப்பீட்டில் கால்நடை நிலையங்கள் மற்றும் மாவட்ட கால்நடை பண்ணைகளில் பின்வரும் இடங்களில் மட்டும் பணிகள் நிலுவையில் உள்ளன என்பதை குழு அறிந்தது.

	கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ள கால்நடை நிலையங்கள் விவரம்	தொகை (ரூ.இலட்சத்தில்)	கட்டுமானப் பணிகளின் தற்போதைய நிலை
1.	கால்நடை மருந்தகம், உளுந்தை	26.6	பணிகள் துவக்கப்பட்டுள்ளது
2.	கால்நடை மருந்தகம், வேப்பம்பட்டு	26.6	கூரை (Roof) அமைக்கப்பட்டுள்ளது
3.	கால்நடை மருந்தகம், சோழவரம்	26.6	சிறிய பணிகள் நிலுவை
4.	கால்நடை மருந்தகம், பெரும்சேரி	26.6	பணிகள் துவக்கப்பட்டுள்ளது
5.	கால்நடை மருந்தகம், மேலக்கொண்டையார்	26.6	பணிகள் துவக்கப்பட்டுள்ளது

183. திருவள்ளூர் மாவட்டத்தில் 2011–2012 ஆம் ஆண்டு தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் உள்கட்டமைப்பு அபிவிருத்தி நிதி திட்டத்தின் கீழ் உளுந்தை, வேப்பம்பட்டு, சோழவரம், பெருஞ்சேரி மற்றும் மேலக்கொண்டையார் ஆகிய இடங்களில் நடைபெற்றுவரும் கால்நடை மருந்தகக் கட்டுமானப் பணிகளை விரைவாக முடிக்க துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

184. தேசிய வேளாண் மற்றும் ஊரக அபிவிருத்தி வங்கி (நபார்டு ஆர்ஐடிஎஃப் XVII) (Rural Infrastructure Development fund) நிதியில் ரூ.122.24 கோடி மொத்த செலவில் கீழ்க்காணும் கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என துறை குழுவிற்குத் தெரிவித்தது.

(அ) 337 கால்நடை மருந்தகங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுதல்
(ஆ) 13 கால்நடை மருத்துவமனைகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுதல்
(இ) 2 பன்முக மருத்துவமனைகளுக்குப் புதிய கட்டடம் கட்டுதல்
(ஈ) 3 கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுதல்
(உ) 5 உறைவிந்து வங்கிகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுதல்
(ஊ) கால்நடை பராமரிப்பு இயக்குநர் அலுவலகத்தில் ஒரு திட்டக் கண்காணிப்புப் பிரிவு தோற்றுவித்தல்
(எ) 12 கால்நடைப் பண்ணைகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.

185. 360 புதிய கால்நடை மருந்தகங்கள் கட்டுவதற்கும் மற்றும் 12 மாவட்ட கால்நடை பண்ணைகளின் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக அரசு ரூ.122.24 கோடி நிதி ஒதுக்கீடு செய்து இதில் 299 கால்நடை மருந்தகங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் மீதமுள்ள கால்நடை மருந்தகங்கள் கட்டி முடிக்கப்படும் தருவாயில் உள்ளது. 12 மாவட்ட கால்நடைப் பண்ணைகளின் உள்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணியில் 7 பண்ணைகள் முடிக்கப்பட்டு, 5 பண்ணைகள் முடிக்கப்படும் தருவாயில் உள்ளது எனவும் துறை குழுவிடம் தெரிவித்தது.

186. மேற்காணும் தேசிய வேளாண் மற்றும் ஊரக அபிவிருத்தி வங்கி நிதிமூலம் மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகளில் எஞ்சிய 61 கால்நடை மருந்தகங்கள், 5 கால்நடை பண்ணைகளின் உள்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளை விரைவில் முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டுவர துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

187. 2013–2014 ஆம் ஆண்டில் ரூ.99 கோடி மதிப்பீட்டில் 450 கால்நடை மருந்தகங்கள் நபார்டு XIX திட்டம்மூலம் புதிதாக கட்டடங்கள் கட்டுவதற்கு கருத்துரு அனுப்பப்பட்டு நபார்டு வங்கியின் ஒப்புதலை எதிர்நோக்கி உள்ளது எனவும் குழுவிடம் துறை தெரிவித்துள்ளது.

188. 2013–2014 இல் நபார்டு XIX திட்டம் மூலம் 450 கால்நடை மருந்தகங்களுக்கு ரூ.99 கோடி மதிப்பீட்டில் கட்டடங்கள் கட்டுவதற்குரிய கருத்துருவிற்கு நபார்டு வங்கியின் ஒப்புதலைப் பெறுவதற்கு துரித நடவடிக்கை துறை எடுத்து கட்டடங்களை கட்டி முடிக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

189. குழு, திருவள்ளூர் மாவட்டத்தில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது, வாடகைக் கட்டடத்தில் இயங்கும் திருவொற்றியூர் கால்நடை மருந்தகத்திற்குச் சொந்த கட்டடம் கட்ட சம்பந்தப்பட்ட நகராட்சியிடம் இடம் கோரப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. இதன் தொடர்பாக துறை எடுத்த நடவடிக்கையினை குழு அறிய விரும்பியது.

190. திருவொற்றியூர் கால்நடை மருந்தக நிலம் வட்டாட்சியரின் பரிந்துரைக்காக துறை காத்திருக்கிறது என்பதை குழுவிற்கு துறையால் தெரிவிக்கப்பட்டது.

191. திருவொற்றியூரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் கால்நடை மருந்தகத்திற்குரிய இடத்திற்கு திருவொற்றியூர் வட்டாட்சியரின் பரிந்துரையை உடனடியாகப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்து, கட்டடப் பணியை விரைவாக முடிப்பதற்கு துறை நடவடிக்கை எடுக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

192. குழு, காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது, 2012–2013 தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், மேற்கொள்ளப்படும் கட்டடப் பணிகளின் நிலை குறித்து குழு அறிய விரும்பியது.

193. இது தொடர்பாக துறை தேசிய வேளாண்மைத் திட்டத்தின்மூலம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2012–2013 ஆம் ஆண்டில் கரும்பாக்கம் கால்நடை மருந்தகம் கட்டும் பணிகள் முடிவுற்று மின்சாரப் பணிகள் மட்டும் முடிவுறாத நிலையில் உள்ளது. புத்தகரம், கால்நடை மருந்தக மேல்தளநிலை வரை முடிந்துள்ளது மற்றும் நடுவீரம்பட்டு கால்நடை மருந்தகம் தூண் கட்டப்பட்ட நிலையில் உள்ளது என குழுவிற்கு விளக்கியது.

194. 2012–2013 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டம், கரும்பாக்கம், புத்தகரம் மற்றும் நடுவீரம்பட்டு ஆகிய இடங்களில் கட்டப்பட்டுவரும் கால்நடை மருந்தகக் கட்டடப் பணிகளை விரைவில் முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

195. குழு, விருதுநகர் மாவட்டத்தில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது, தேசிய வேளாண்மை ஊரக அபிவிருத்தி வங்கி நிதி உதவிமூலம் கால்நடை நிலைய கட்டடங்கள் கட்ட கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதன் தற்போதைய நிலையினை குழு அறிய விரும்பியது.

196. 2013–2014 ஆம் ஆண்டில் நபார்டு XIX திட்டத்தின்கீழ் விருதுநகர் மாவட்டத்தில் அசிலாபுரம், மரநேரி, தையல்பட்டி, மேலையூர், நல்லூர், சிறுகுளம், இருசுன்சிரி ஆகிய 7 கால்நடை மருந்தகங்கள் ரூ.144.00 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டுவதற்கு கருத்துரு அனுப்பப்பட்டு நபார்டு வங்கியின் ஒப்புதலை எதிர்நோக்கி உள்ளது என குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது.

197. விருதுநகர் மாவட்டத்தில் தேசிய வேளாண்மை ஊரக அபிவிருத்தி வங்கி நிதி உதவிமூலம் கால்நடை மருந்தக கட்டடங்கள் கட்டுவதற்குரிய கருத்துரு நபார்டு வங்கியின் ஒப்புதலுக்காக காத்திருக்கிறது என்பதை குழு அறிகிறது.

198. நபார்டு வங்கியின் ஒப்புதலைப் பெற்றவுடன், விருதுநகர் மாவட்டத்தில் நபார்டு XIX திட்டத்தின் கீழ் 7 மருந்தக கட்டடப் பணிகளை விரைவில் முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டுவர துறை நடவடிக்கையினை மேற்கொள்ளப்பட வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

199. திருநெல்வேலி மாவட்டத்தில் குழு ஆய்வுப் பயணம் மேற்கொண்ட போது, 2013–2014 ஆம் ஆண்டில் தேசிய வேளாண் மற்றும் ஊரக அபிவிருத்தி வங்கி, நிதி உதவிமூலம் 3 கால்நடை மருந்தகங்கள் 15 ஊரக கால்நடை மருந்தகங்கள் மற்றும் 7 தரம் உயர்த்தப்பட்ட கிளை நிலையங்களுக்கு புதிய கட்டடம் கட்டப்படவுள்ளது என துறை தெரிவித்துள்ளது. அப்பணிகளின் கருத்துருவின் தற்போதைய நிலையினை குழு அறிய விரும்பியது.

200. நபார்டு XVII திட்டம்மூலம் 2013–2014 ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் 19 கால்நடை மருந்தகங்கள் ரூ.462.00 இலட்சம் மதிப்பீட்டில் (ரூபாய் 22.00 இலட்சம் / நிலையம்) வடக்கன்குளம், முக்குளம், திசையன்விளை, பணகுடி, மேல்சேவல், சிங்கிகுளம், அலங்காரபேரி, சிவந்திபட்டி, சொக்கம்பட்டி ஆகிய கிராமங்களில் 9 கால்நடை மருந்தகங்கள், செட்டிகுளம், பரப்பாடி, கீழம்பூர், இலஞ்சி, பத்மனேரி, புதுப்பட்டி ஆகிய கிராமங்களில் 6 ஊரக கால்நடை மருந்தகங்கள் மற்றும் விக்கிரமசிங்கபுரம், செங்காளகுறிச்சி, அத்தாளநல்லூர், அரியநாயகிபுரம் ஆகிய 4 தரம் உயர்த்தப்பட்ட கால்நடை கிளை நிலையங்கள் புதிதாகக் கட்டுவதற்கு கருத்துரு அனுப்பப்பட்டு நபார்டு வங்கியின் ஒப்புதலை எதிர்நோக்கியுள்ளது எனவும் துறை குழுவிடம் தெரிவித்தது.

201. திருநெல்வேலி மாவட்டத்தில் நபார்டு XVII திட்டத்தின்கீழ் மேற்குறிப்பிட்ட 9 கால்நடை மருந்தகங்கள், 6 ஊரக கால்நடை மருந்தகங்கள் மற்றும் 4 தரம் உயர்த்தப்பட்ட கால்நடை கிளை நிலையங்கள் புதிதாக கட்டுவதற்குரிய கருத்துருக்கு ஒப்புதல் பெற்று, விரைவாக அமைக்க துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

202. இராமநாதபுரம் மாவட்டத்தில் 2013–2014 ஆம் ஆண்டில் தேசிய வேளாண் மற்றும் ஊரக அபிவிருத்தி வங்கி நிதி உதவிமூலம் 21 இடங்களில் கால்நடை மருந்தக கட்டடம் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது என்று துறை தெரிவித்துள்ளது. அப்பணிகளின் தற்போதைய நிலை குறித்து குழு விவரம் கோரியது.

203. 2013–2014 ஆம் ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் நபார்டு XIX திட்டம்மூலம் 21 கால்நடை மருந்தகங்கள், மேலாய்குடி, பெருவாக்கோட்டை, இடையர்வலசை, காக்கூர், திருவொற்றியூர், தொருவளூர், வட்டாணம், வெள்ளையாபுரம், கீரனூர், மூவலூர், மேலாக்கிடாரம், வண்ணான்குண்டு, கொம்பூதி, வாலாந்தரவை, சோழந்தூர், பெரையூர், தெரிருவெலி, காமன்கோட்டை, அமிராமம், வீரவனூர், அனந்தூர் ஆகியவை புதியதாக கட்டுவதற்கு கருத்துரு அனுப்பப்பட்டு நபார்டு வங்கியின் ஒப்புதலை எதிர்நோக்கி உள்ளது என துறை குழுவிடம் தெரிவித்தது.

204. 2013–2014 இல் இராமநாதபுரம் மாவட்டத்தில், தேசிய வேளாண் மற்றும் ஊரக அபிவிருத்தி வங்கி நிதி உதவிமூலம் 21 கால்நடை மருந்தகங்கள் கட்டுவதற்குரிய கருத்துருவிற்கு நபார்டு வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டவுடன் விரைவில் கட்டடங்களைக் கட்டி பயன்பாட்டிற்குக் கொண்டுவர துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

205. குழு, இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது, 2012–2013 ஆம் ஆண்டில் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் உச்சிநத்தம் கால்நடை மருந்தகம் மற்றும் பாண்டியூர் ஊரக கால்நடை மருந்தக கட்டடப் பணிகளின் தற்போதைய நிலையினை குழு அறிய விரும்பியது.

206. இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது, 2012–2013 ஆம் ஆண்டில் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் உச்சிநத்தம் கால்நடை மருந்தகம் மற்றும் பாண்டியூர் ஊரக கால்நடை மருந்தகம் ஆகியவை தலா ரூ.15.00 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருவதாக துறை குழுவிடம் தெரிவித்தது.

207. இராமநாதபுரம் மாவட்டம், உச்சிநத்தம் கால்நடை மருந்தகம் மற்றும் பாண்டியூர் ஊரக கால்நடை மருந்தகக் கட்டடப் பணிகளை விரைவில் முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

208. இராமநாதபுரம் மாவட்டத்தில் குழு ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது, வேதாளை கால்நடை துணை நிலையத்திற்கு சென்றபோது வழியில் தண்ணீர் தேங்கி நின்றதையும் சுற்றுசுவர் இல்லாததாலும், கல்வெட்டு இல்லாததையும் குழு பார்வையிட்டது. அதற்கான காரணத்தை குழு கேட்டபோது, 2013–2014 ஆம் ஆண்டில் தரம் உயர்த்துவதற்கான கருத்துரு அனுப்பப்பட்டுள்ளதாகவும், தரம் உயர்த்தப்படும் போது மேற்படி அனைத்து குறைகளை நிவர்த்தி செய்ய இயலும் என தெரிவிக்கப்பட்டது. அக்கருத்துருவின் தற்போதைய நிலை குறித்து குழு அறிய விரும்பியது.

209. 2013–2014 ஆம் ஆண்டில் தரம் உயர்த்துவதற்கான கருத்துருவிற்கு நபார்டு XIX திட்டம்மூலம் நபார்டு வங்கியின் ஒப்புதல் பெற்றவுடன், இராமநாதபுரம் மாவட்டம், வேதாளை கால்நடை துணை நிலையத்திற்குச் செல்லும் வழியில் தண்ணீர் தேங்காமல் தடுப்பதற்கும், சுற்றுச்சுவர் கட்டுவதற்கும் மற்றும் கல்வெட்டு அமைப்பதற்கும் துறை விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

210. குழு, திண்டுக்கல் மாவட்டத்தில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது 2012–2013 ஆம் ஆண்டு கட்டடங்கள் நிலையானதாக மேம்படுத்துதல் திட்டத்தில் ரூ.104.40 இலட்சம் செலவில் நடைபெறும் பணிகளின் தற்போதைய நிலையினை குழு அறிய விரும்பியது.

211. 2012–2013 ஆம் ஆண்டில் திண்டுக்கல் மாவட்டத்தில் கட்டடம் புதுப்பித்தல் மற்றும் வலுப்படுத்துதல் திட்டத்தின்கீழ் 9 கால்நடை மருந்தகங்கள் கட்டும் பணிக்கு ரூ.104.40 இலட்சம் செலவில் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை குழுவிற்கு துறை விளக்கியது.

வ.எண்	இடம்	பணியின் நிலை
1	அம்பாத்துறை	பணி முடியும் நிலையில் உள்ளது
2	இடையக்கோட்டை	ஒப்பந்தம் முடிக்கப்பட்ட நிலை
3	மரம்பாடி	ஒப்பந்தம் முடிக்கப்பட்ட நிலை
4	சிலுவத்தூர்	தரைமட்டப் பணி நிலை
5	பாலசமுத்திரம்	ஒப்பந்தம் முடிக்கப்பட்ட நிலை
6	சத்திரப்பட்டி	பூசுவேலை முடிக்கும் நிலை
7	மனூர்	ஒப்பந்தம் முடிக்கப்பட்ட நிலை
8	அயம்பாளையம்	நிறைவு பெறும் நிலை
9	ஜம்புதுரைக்கோட்டை	ஒப்பந்தம் முடிக்கப்பட்ட நிலை

212. திண்டுக்கல் மாவட்டத்தில் 2012–2013 ஆம் ஆண்டில் கட்டடம் புதுப்பித்தல் மற்றும் வலுப்படுத்துதல் திட்டத்தின்கீழ் மேற்காணும் 9 கால்நடை மருந்தகங்கள் கட்டும் பணிகளில் பெரும்பாலும் துவக்க நிலையில் உள்ளதை குழு அறிகிறது. இப்பணிகளை நிறைவு செய்வதற்கு துறை விரைவு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

213. 2011–2012 ஆம் ஆண்டு நபார்டு திட்டத்தின்கீழ் 6 புதிய கட்டடங்கள் ரூ.176.80 இலட்சம் செலவில் திண்டுக்கல் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் அனைத்தும் நிறைவு பெற்றுள்ளதா என்றும், பயனீட்டுச் சான்று (Utilisation Certificate) துறையால் வழங்கப்பட்டுள்ளதா என்றும், இனம் வாரியான விவரங்களை குழு அறிய விரும்பியது.

214. 2011–2012 ஆம் ஆண்டு நபார்டு திட்டத்தின்கீழ் 6 புதிய கட்டடங்கள் ரூ.176.80 இலட்சம் செலவில் கட்டப்பட நிதி ஒதுக்கப்பட்டது. இவற்றில் பாடியூர், பொருளூர் மற்றும் கள்ளிமந்தையம் கால்நடை மருந்தகக் கட்டடப் பணி நிறைவடைந்துள்ளது. ஆனால் சிறுகுடி, கன்னிவாடி மற்றும் திண்டுக்கல் கால்நடை மருந்தகக் கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றது. பணி நிறைவுற்றவுடன் மேற்கூறிய 3 கால்நடை மருந்தகங்களுக்காக பயனீட்டுச் சான்று பெறப்படும் எனவும் துறை குழுவிற்கு விளக்கியது.

215. 2011–2012 ஆம் ஆண்டு நபார்டு திட்டத்தின்கீழ் திண்டுக்கல் மாவட்டத்தில் சிறுகுடி, கன்னிவாடி மற்றும் திண்டுக்கல் ஆகிய இடங்களில் நடைபெற்று வரும் கால்நடை மருந்தகக் கட்டடப் பணிகளை முடித்திட துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

(XXXIV) கால்நடை பாதுகாப்புத் திட்டம்:

216. மாநிலத்தில், கால்நடை பாதுகாப்புத் திட்டம் ஜனவரி 2000 முதல் நடத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒரு முகாமுக்கு ரூ.4,200 செலவில், மாதத்திற்கு ஒன்று என்ற வீதத்தில் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் சிறப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன.

217. 2012–2013 ஆம் ஆண்டில், 5,500 முகாம்கள் நடத்தப்பட்டு, 67.08 இலட்சம் கால்நடைகளும், 8.31 இலட்சம் விவசாயிகளும் பயனடைந்துள்ளனர். 2013–2014 ஆம் ஆண்டில், ரூ.2.31 கோடி மொத்த செலவில் 5,500 முகாம்கள் நடத்தப்படும் எனவும், 2013–2014 ஆம் ஆண்டில் நவம்பர் 2013 முடிய 1,893 கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்கள் துறைமூலம் நடத்தப்பட்டுள்ளன என்பதை குழுவிற்குத் தெரிவித்தது.

(XXXV) பகுதி–2 திட்டம்:

218. 2012–2013 ஆம் ஆண்டில் பகுதி–2 திட்டத்தின்கீழ் நிருவாகத்தை மேம்படுத்த, 9 இணை இயக்குநர்களுக்கு ரூ.54.00 இலட்சம் செலவில் 9 புதிய வாகனங்களும், 15 உதவி இயக்குநர்களுக்கு ரூ.93.00 இலட்சம் செலவில் 15 புதிய வாகனங்களும் வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

219. இயக்குநர் அலுவலகத்திற்கு மொத்தம் 7 கணினிகள் ரூ.3.50 இலட்சத்திலும், 2 நகல் எடுக்கும் கருவிகளும், திருப்பூர் மற்றும் நாமக்கல் இணை இயக்குநர் அலுவலகங்களுக்கு முறையே இரண்டு நகல் எடுக்கும் கருவிகளும் ரூ.4 இலட்சம் செலவில் வாங்கி வழங்கப்பட்டுள்ளன என்று துறை தெரிவித்தது.

220. 2013–2014 ஆம் ஆண்டில் இத்திட்டத்தில் பின்வரும் பணிகள் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது:

(i) கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய ஐந்து பன்முக மருத்துவமனைகளுக்கு ரூ.40 இலட்சம் செலவில் நுண்ணொலி நுண்ணாய்வுக் கருவிகள் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின்மூலமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ii) கோயம்புத்தூரில் உள்ள கால்நடை பன்முக மருத்துவமனைக்கு ரூ.5 இலட்சம் செலவில், ஊடுகதிர் கருவி தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின்மூலமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(iii) உம்பளாச்சேரி, காங்கேயம், பர்கூர், புலிகுளம் போன்ற உள்நாட்டினங்களைப் பாதுகாத்திட கருத்தரங்கம் மற்றும் கண்காட்சிகள் நடத்திட ரூ.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை குழுவிற்கு துறை விளக்கியது.

221. 2013–2014 இல் ரூ.40 இலட்சம் செலவில் 5 கால்நடை பன்முக மருத்துவமனைகளுக்கு நுண்ணொலி கருவிகள், கோயம்புத்தூர் கால்நடை பன்முக மருத்துவமனைக்கு ரூ.5 இலட்சம் செலவில் ஊடுகதிர் கருவி மற்றும் உள்நாட்டினங்களைப் பாதுகாக்க கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி நடத்த ரூ.10 இலட்சம் என ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இப்பணிகளை நிறைவு செய்து இதுகுறித்து அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்பி வைக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

(XXXVI) மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம்:

222. குழு, தேனி மாவட்டத்தில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது, 2012–2013 ஆம் ஆண்டு மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் வைகை அணையில் குஞ்சு பொரிப்பக கட்டடம் கட்ட ரூ.16,65,000/– திட்ட இயக்குநர், ஊரக வளர்ச்சி முகமை அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு பெரியகுளம் ஊராட்சி ஒன்றிய உதவி செயற்பொறியாளர்மூலம் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது என்றும், இது தொடர்பாக தலைமை அலுவலகத்தில் 27–6–2013 அன்று நடைபெற்ற கூட்டத்தில் கருத்துரு கோரப்பட்டுள்ளது என்றும், கட்டடப் பணி முடிந்தவுடன் குஞ்சு பொரிப்பக இயந்திரங்கள் வாங்குவதற்கு ரூ.21,40,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று துறைமூலம் குழுவிடம் தெரிவிக்கப்பட்டது. அதன் தற்போதைய நிலை குறித்து குழு அறிய விரும்பியது.

223. இதற்கு துறை மேற்கு தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் வைகை அணையில் குஞ்சு பொரிப்பக கட்டடப் பணி நடைபெற்று வருகிறது. அப்பணி நிறைவுற்றவுடன் குஞ்சு பொரிப்பக இயந்திரங்கள் வாங்கி அமைக்கப்படும் என குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது.

224. மேற்கு தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் வைகை அணையில் குஞ்சு பொரிப்பக கட்டடப் பணி நிறைவுற்றவுடன் குஞ்சு பொரிப்பக இயந்திரங்கள் அமைத்து பயன்பாட்டிற்கு கொண்டுவர துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

225. தேர்வு செய்யப்பட்ட நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் உள்ள கிராமங்களில் 1000 பயனாளிகளுக்கு கிரிராஜா கோழிகளும், 70 பயனாளிகளுக்கு வெள்ளாடுகளும், 50 சதவீத மானியத்தில் வாங்கி வழங்கப்படவுள்ளது என்பதை குழு அறிந்தது. அதன் தற்போதைய நிலையினை குழு அறிய விரும்பியது.

226. இது குறித்து தேர்வு செய்யப்பட்ட நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் உள்ள கிராமங்களில் 1000 பயனாளிகளுக்கு கிரிராஜா கோழிகளும், 70 பயனாளிகளுக்கு வெள்ளாடுகளும், 50 சதவீத மானியத்தில் வாங்கி வழங்கப்பட்டுள்ளது என குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது. குழு இதற்கு தனது பாராட்டுதலை தெரிவித்துக் கொண்டது.

227. 2012–2013 ஆம் ஆண்டில் மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் திண்டுக்கல் மாவட்டத்தில் நடைபெறும் பணிகள் குறித்தும் குழு துறைமூலம் அதன் விவரங்கள் தொடர்பாகவும் அறிய விரும்பியது.

228. 2012–2013 ஆம் ஆண்டில் மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் திண்டுக்கல் மாவட்டத்தில் ரூ.0.80 இலட்சம் செலவில் 20 பயனாளிகளுக்கு 50 சதவிகித மானியத்தில் கலப்பின கிடேரிக் கன்றுகள் வாங்கி வழங்கப்பட்டது. ரூ.5.67 இலட்சம் செலவில் 40 பயனாளிகளின் கலப்பின கிடேரி கன்றுகளுக்கு அடர் தீவனம் 100 சதவிகித மானியத்திலும் சாதாரண தீவனம் 75 சதவிகித மானியத்திலும் வழங்கப்பட்டது மற்றும் ரூ.0.08 இலட்சம் செலவில் கிடேரி கன்றுகளுக்கு காப்பீடு செய்யப்பட்டது. ரூ.0.72 இலட்சம் செலவில் 240 பயனாளிகளுக்கு 50 சதவிகித மானியத்தில் 6 முதல் 8 வார வயதுடைய தலா 10 கிரிராஜா கோழிகளும் வழங்கப்பட்டது. ரூ.0.14 இலட்சம் செலவில் இரண்டு மலடு நீக்க சிகிச்சை மருத்துவ முகாம்கள் நடைபெற்றது.

229. மேலும் ரூ.46.71 இலட்சம் மதிப்பீட்டில் கொடைக்கானலில் குஞ்சு பொரிப்பகம் அமைத்திட பணிகள் நடைபெற்று வருகிறது என துறைமூலம் குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது.

230. திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் ரூ.46.71 இலட்சம் மதிப்பீட்டில் குஞ்சு பொரிப்பகம் அமைக்கும் பணியை முடிப்பதற்கு துறை விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

231. 2012–2013 இல் திருநெல்வேலி மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கால்நடை வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள துறை எடுத்துள்ள நடவடிக்கையினை குழு அறிய விரும்பியது.

232. விஸ்வநாதபேரி கிராமத்தில் மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 10 பயனாளிகளுக்கு கிடேரிக் கன்றுகள் வழங்கப்பட்டது என்றும், அம்பாசமுத்திரம் கோட்டத்தில் உள்ள நாங்குநேரி கால்நடை மருந்தக வளாகத்தில் கோழிக் குஞ்சு பொரிப்பகம் நிறுவிட ரூ.25,31,200/– திருநெல்வேலி மாவட்ட நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமையிலிருந்து நிதி விடுவிக்கப்பட்டு, மேற்படி தொகை கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளும்பொருட்டு திருநெல்வேலி ஊரக வளர்ச்சி முகமைக்கு வழங்கப்பட்டுள்ளது என குழுவிடம் துறை தெரிவித்தது.

233. மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி கால்நடை மருந்தக வளாகத்தில் கோழிக் குஞ்சு பொரிப்பகம் அமைக்கும் பணியை விரைவில் முடிப்பதற்கு துறை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

234. மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 2013–2014 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர், திண்டுக்கல், திருப்பூர், தேனி, திருநெல்வேலி, மதுரை, விருதுநகர் ஆகிய 7 மாவட்டங்களில் பல்வேறு கால்நடை வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள அரசு ரூ.72.90 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிட்டு, இப்பணிகள் செயல்படுத்தப்படவுள்ளது என துறை குழுவிற்கு தெரிவித்தது.

(i) 290 பயனாளிகளுக்கு 50 விழுக்காடு மானியத்தில் கலப்பின கிடாரிக் கன்றுகள் வழங்குதல்.

(ii) 320 பயனாளிகளின் கலப்பின கிடாரிக் கன்றுகளுக்கு 100 விழுக்காடு மற்றும் 75 விழுக்காடு மானியத்தில் அடர் தீவனம் மற்றும் கால்நடை தீவனம் வழங்குதல்.

(iii) 1,140 பயனாளிகளுக்கு 50 விழுக்காடு மானியத்தில் தலா 10 கிரிராஜா கோழிக் குஞ்சுகள் வழங்குதல்.

(iv) 36 பயனாளிகளுக்கு செம்மறி ஆடு அலகுகள் (4+1) 50 விழுக்காடு மானியத்தில் வழங்குதல்.

(v) 13 மலட்டு நீக்க சிகிச்சை முகாம்கள் நடத்துதல்.

235. மேற்கண்ட திட்டங்களை ரூ.72.90 இலட்சம் செலவில் தமிழ்நாடு நீர்ப்பிடிப்பு மேம்பாட்டு முகமை மூலமாக மேற்கொள்ளப்படும். இப்பணிகளை விரைவாக முடித்து குழுவிற்கு இது குறித்து அறிக்கை ஒன்றை அனுப்பி வைக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

(XXXVII) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்:

236. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2012–2013 ஆம் ஆண்டில் நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு கால்நடை வளர்ச்சி திட்டப் பணிகளை மேற்கொள்ள ரூ.32.83 இலட்சம் ஒதுக்கீடு செய்து அரசு ஆணை பெறப்பட்டுள்ளது. இதன்மூலம் 480 பயனாளிகளுக்கு தலா 10 கோழிக் குஞ்சுகள் வீதம் 4,800 கோழிக் குஞ்சுகள் மற்றும் 300 பழங்குடியின பயனாளிகளுக்கு 50 சதவீதம் மானியத்திலும், 180 இதர பின்தங்கிய பயனாளிகளுக்கு 25 சதவீதம் மானியத்திலும், கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டன என்பதை துறை குழுவிடம் தெரிவித்தது.

(XXXVIII) ஆடுகளுக்கான தீவிர சுகாதார சிகிச்சைத் திட்டம்:

237. இத்திட்டத்தின் மூலம் சென்னை மாவட்டம் தவிர்த்து, ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் 3 மாதங்களுக்கு ஒரு முறை வீடு வீடாகச் சென்று அங்குள்ள ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்யப்பட்டு வருகிறது. 2012–2013 நிதியாண்டில் ரூ.40.00 இலட்சம் மதிப்புள்ள குடற்புழு நீக்க மருந்துகள் வாங்கி இத்திட்டத்தின் மூலம் விநியோகம் செய்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. 2013–2014 ஆம் ஆண்டில் ரூ.38.00 இலட்சம் மதிப்புள்ள குடற்புழு நீக்க மருந்துகள் வாங்கி விநியோகப்படுத்தப்பட்டு வருகின்றன என துறை தெரிவித்தது.

(XXXIX) கிராமப்புற பெண்களின் பொருளாதார மேம்பாட்டினை எருமை வளர்ப்பின்மூலம் உறுதிப்படுத்தும் திட்டம்:

238. 2013–2014 ஆம் ஆண்டில் "கிராமப்புற பெண்களின் பொருளாதார மேம்பாட்டினை எருமை வளர்ப்பின்மூலம் உறுதிப்படுத்தும்" திட்டத்திற்கென ரூ.102.50 இலட்சம் அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்தின்மூலம் ஒரு மாவட்டத்திற்கு 5 மகளிர் சுய உதவிக் குழுவிலிருந்து தகுதியான 25 பயனாளிகள் வீதம் 10 மாவட்டத்திற்கு 250 பயனாளிகள் பயனடைகிறார்கள். ஒவ்வொரு பயனாளிக்கும் 2 எருமை மற்றும் கன்று, 3 மாதத்திற்குத் தேவையான அடர் தீவனம், போக்குவரத்து, காப்பீடு போன்றவை 50 சதவீதம் மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது என துறை குழுவிடம் தெரிவித்தது.

(XL) தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்:

239. உலக வங்கி உதவியுடன் கூடிய தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம் ரூ.2,547 கோடி நிதி ஒதுக்கீட்டில் 8 துறைகளை ஒருங்கிணைத்து 2007 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வேளாண்மை மற்றும் சார்பு தொழில்களில் ஒவ்வொரு அலகு நீரின் பயன்பாட்டையும் மேம்படுத்தி, இறுதியில் பண்ணை வருவாயை அதிகரிப்பதே இத்திட்டத்தின் முதன்மையான நோக்கமாகும்.

240. திட்டத்தின் குறிக்கோள் "ஒவ்வொரு துளி நீரிலும் அதிக வருமானம் ஈட்டுவதே" ஆகும். மேற்படி நிதி ஒதுக்கீட்டில் கால்நடை பராமரிப்புத் துறையின் செயல்பாட்டிற்காக ரூ.41.40 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. திட்டம் தற்போது 30–9–2014 வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதையும் குழுவிற்கு துறை விளக்கியது.

241. நீர்வள நிலவளத் திட்டம் 2007–2008 ஆம் ஆண்டில் பகுதி–I ஆக 9 உபவடிநிலப் பகுதிகளிலும், 2008–2009 ஆம் ஆண்டில் பகுதி–II ஆக 15 உபவடிநிலப் பகுதிகளிலும், 2009–2010 ஆம் ஆண்டில் பகுதி–III ஆக 20 உபவடிநிலப் பகுதிகளிலும், பகுதி–IV ஆக 2011–2012 ஆம் ஆண்டில் 5 உபவடிநிலப் பகுதிகளிலும் மற்றும் 2012–2013 இல் மேலும் ஒரு உபவடிநிலப் பகுதியும் துவக்கப்பட்டு மொத்தம் 50 உபவடிநிலப் பகுதிகள் நீர்வள நிலவளத் திட்டத்தில் கால்நடை பராமரிப்புப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என மேலும் துறை தெரிவித்தது.

(XLI) செயற்கைமுறை கருவூட்டல்:

242. அயலின மற்றும் கலப்பின உறைவிந்துக் குச்சிகளை பயன்படுத்தி செயற்கைமுறை கருவூட்டல் செய்து, உள்ளூர் பசு மற்றும் எருமைகளின் தரத்தை உயர்த்தவும், செயற்கைமுறை கருவூட்டல் வெற்றி இலக்கினை (Success Rate) உயர்த்தவும் துறை எடுத்துவரும் நடவடிக்கைகளை குழு அறிய விரும்பியது.

243. இதற்கு துறை அயலின மற்றும் கலப்பின உறைவிந்துக் குச்சிகளை பயன்படுத்தி செயற்கைமுறை கருவூட்டல் செய்து, உள்ளூர் பசு மற்றும் எருமைகளின் தரத்தை உயர்த்துதல் பணி, மாற்றியமைக்கப்பட்ட இனப்பெருக்க கொள்கையின்படி மேற்கொள்ளப்படுகிறது.

244. உள்நாட்டின பசுக்களை அயலின காளைகளின் விந்தினைக் கொண்டு இனப்பெருக்கம் செய்யும்போது, அயலின பாரம்பரியத்தின் அளவு 50 சதவீதத்திலேயே வரையறுக்கப்படுகிறது.

245. ஜெர்சி கலப்பினம் / தரம் உயர்த்தப்பட்ட பசுக்கள் 50 சதவீத ஜெர்சி பாரம்பரியம் கொண்ட பொலிகாளைகளுடன் இனப்பெருக்கம் செய்யப்படுகிறது. ஹோல்ஸ்டைன் பிரிசியன் கலப்பினம் / தரம் உயர்த்தப்பட்ட பசுக்களை 50 சதவீத ஹோல்ஸ்டைன் பிரிசியன் பாரம்பரியம் கொண்ட பொலிகாளைகளுடன் இனப் பெருக்கம் செய்யப்படுகிறது. இதன் வெற்றி இலக்கு 42 சதவீதமாக உள்ளது என்பதை குழுவிடம் துறை விளக்கியது.

246. உறைவிந்து உற்பத்தி நிலையங்களை பலப்படுத்துதல், உறைவிந்து வங்கிகளை பலப்படுத்துதல், சிறந்த மரபு தன்மை கொண்ட பொலிகாளைகளை / கன்றுகளை கொள்முதல் செய்தல் போன்ற பணிகளை துறை மேற்கொண்டு வருகிறது என துறை தெரிவித்தது.

(XLII) கரு மாற்று தொழில்நுட்பத்தை பிற மாவட்டங்களில் விரிவுபடுத்த நடவடிக்கை:

247. 2013–2014 ஆம் ஆண்டு முதல் கரு மாற்று தொழில்நுட்பம் ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்களுக்கும் மாவட்ட கால்நடை பண்ணை, அபிஷேகப்பட்டி மற்றும் அயலின கால்நடை பெருக்குப் பண்ணை, ஈச்சங்கோட்டை ஆகியவற்றுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது என குழு அறிகிறது. அதற்காக துறை மேற்கொண்டுள்ள நடவடிக்கையினை குழு அறிய விரும்பியது.

248. இதுதொடர்பாக துறை கருமாற்று தொழில்நுட்ப திட்டம் ஒசூர் மாவட்ட கால்நடை பண்ணையை மையமாகக் கொண்டு சேலம், நாமக்கல், தோமமபூத்தூர், மதுரை, திருவண்ணாமலை, வேலூர், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் வாயிலாக இதுவரை 28 உயரின காளைக் கன்றுகள் பெறப்பட்டு அவை ஒசூர் மாவட்ட கால்நடை பண்ணை மற்றும் ஈச்சங்கோட்டை உயரின கால்நடை பெருக்கப் பண்ணையில் வைத்து வளர்க்கப்படுகின்றன.

249. 2016–2017 ஆம் ஆண்டு துறையின் உயரின காளை தேவையினை பூர்த்தி செய்யும் விதமாக இத்திட்டத்தின் மூலம் உயரின காளைக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. திட்டத்தின் முதல் கட்டம் ரூ.50 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது. நடப்பாண்டில் இத்திட்டம் ரூ.2.50 கோடி செலவில் ஏற்கெனவே பட்டியலிடப்பட்ட 8 மாவட்டங்களுடன் கூடுதலாக ஈரோடு, கரூர் மாவட்டங்களிலும் மேலும் அபிஷேகப்பட்டி, செட்டிநாடு மற்றும் ஈச்சங்கோட்டை கால்நடை பண்ணைகளிலும் செயல்படுத்தப்ப உள்ளது.

250. இதற்கென தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை, தமிழ்நாடு கால்நடை அறிவியல் மருத்துவ பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் ஆகியவற்றின் வல்லுநர்களை அங்கத்தினர்களாகக் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டு இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. திட்டத்தின் முடிவில் மேலும் 130 உயரின காளைக் கன்றுகள் பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று துறை குழுவிற்கு விளக்கியது.

251. 2012–2013 ஆம் ஆண்டு கருமாற்று தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி முதல் கட்டமாக ரூ.50 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது. 2013–2014 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.2.50 கோடி செலவில் ஏற்கெனவே தெரிவித்த 8 மாவட்டங்களுடன் கூடுதலாக ஈரோடு, கரூர் மாவட்டங்களிலும், மேலும் அபிஷேகப்பட்டி செட்டிநாடு மற்றும் ஈச்சங்கோட்டை கால்நடை பண்ணைகளிலும் செயல்படுத்தி உயரின காளைக் கன்றுகள் உற்பத்தியைப் பெருக்க துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

(XLIII) இராணிப்பேட்டையிலுள்ள நுண்ணுயிர் தடுப்பு மருந்துப் பிரிவுகளைத் தரம் உயர்த்த நடவடிக்கை:

252. இராணிப்பேட்டையிலுள்ள கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்திற்கு தேசிய வேளாண்மை திட்டத்தின்கீழ் ரூ.7.52 கோடி வழங்கப்பட்டுள்ளதாகவும், அடைப்பான் நோய் தடுப்பூசி உற்பத்தியை உலக சுகாதார நிறுவனத்தின் வழிகாட்டுதலுக்கு உட்பட்டு நவீன ஆய்வகம் நிறுவுவதற்கு ரூ.11.31 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் குழு அறிகிறது. ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிமூலம் திட்டத்தினை செயல்படுத்த மத்திய அரசு நிர்ணயித்த கால அளவு மற்றும் மேற்படி பணிகளின் தற்போதைய நிலை குறித்தும் குழு அறிய விரும்பியது.

253. இதன் தொடர்பாக மேற்படி இரண்டு திட்டங்களுக்காக பெறப்பட்ட நிதியான ரூ.7.52 கோடி மற்றும் 11.31 கோடி ஆகியவை தமிழ்நாடு மருத்துவப் பணி கழகத்திடம் முழுமையாக இத்துறைமூலம் வழங்கப்பட்டு, ஒதுக்கப்பட்ட தொகை முழுவதும் செலவிடப்பட்டது.

254. இராணிப்பேட்டையிலுள்ள கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்திற்கு தேசிய வேளாண்மைத் திட்டத்தின்கீழ் ரூ.7.52 கோடி நிதி பெறப்பட்டு, நுண்ணுயிர் தடுப்பு மருந்துப் பிரிவுகளை தரம் உயர்த்துவதற்குரிய பணியை மேற்கொள்ள 1-4-2013 அன்று ஆணையை தமிழ்நாடு மருத்துவப் பணி கழகத்தின்மூலம் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டு பணியும் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் நிறைவுபெற கூடுதலாக ரூ.4.5 கோடி நிதி கேட்டு புதிய கருத்துரு ஒன்று தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும், 2014 இல் கூடுதல் நிதி பெறப்படும் என்றும் துறை தெரிவித்தது. மேலும், 2014 ஆம் ஆண்டில் இப்பணிகள் நிறைவுபெற்று புதிய தரம் உயர்த்தப்பட்ட கூடத்தில் நுண்ணுயிர் தடுப்பு மருந்து தயாரிப்புப் பணி Fermentor தொழில்நுட்ப முறையில் துவங்கும் என குழுவிற்கு துறை உறுதி அளித்தது.

255. இராணிப்பேட்டையிலுள்ள கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்திற்கு தேசிய வேளாண்மைத் திட்டத்தின்கீழ் நுண்ணுயிர் தடுப்பு மருந்துப் பிரிவுகளைத் தரம் உயர்த்த ரூ.7.52 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, தமிழ்நாடு மருத்துவப் பணி கழகத்தின்மூலம் இப்பணியை செய்வதற்காக ஒப்பந்ததாரர் அமர்த்தப்பட்டு பணி நடைபெற்று வரும் வேளையில் கூடுதலாக ரூ.4.5 கோடி நிதி பெற்று இப்பணியை முழுமையாக நிறைவு செய்வதற்குரிய கருத்துரு தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதற்கு அனுமதியைப் பெற்று விரைவில் நிறைவு செய்து நுண்ணுயிர் தடுப்பு மருந்து தயாரிப்புப் பணியைத் துவக்க துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

256. மேலும் இந்நிலையத்தில் உள்ள அடைப்பான் நோய் தடுப்பு உற்பத்தியை சுகாதார வழிகாட்டுதலுக்கு உட்பட்டு நவீன ஆய்வகமான BSL-3 ஆய்வுக்கூடத்தை உருவாக்கி அடைப்பான் நோய் தடுப்பு மருந்து உற்பத்தியை அதில் மேற்கொள்ள ஏதுவாக தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ரூ.11.31 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, அத்தொகை தமிழ்நாடு மருத்துவப்பணி கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு ஒப்பந்தம் தயாரிப்புக்கென வரைபடங்கள், கட்டடங்கள் கட்டுவதற்கும், கருவிகள் வாங்கிட, தொழில்நுட்ப தரங்களை வரையறை செய்வதற்குரிய பணிகளை மேற்கொள்ள மத்திய பிரதேசத்திலுள்ள திருவாளர்கள் டோஷி மற்றும் டோஷி நிறுவனம் ஒப்பந்தம் செய்யப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு மருத்துவப் பணி கழகம் டிசம்பர் 2013 இல் ஒப்பந்தத்தை வெளியிட்டுள்ளது என துறை குழுவிடம் தெரிவித்தது.

257. இராணிப்பேட்டையிலுள்ள கால்நடை தடுப்பு மருந்து நிலையத்திலுள்ள அடைப்பான் நோய் தடுப்பு மருந்து உற்பத்தியை சுகாதார வழிகாட்டுதலுக்குட்பட்டு நவீன ஆய்வகமான BSL-3 ஆய்வுக்கூடத்தை உருவாக்கிட ரூ.11.31 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தமிழ்நாடு மருத்துவப் பணி கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப்பணியை நிறைவேற்றி இந்த ஆய்வுக்கூடத்தின்மூலம் அடைப்பான் நோய்க்கான தடுப்பு மருந்து உற்பத்தியைத் துவக்குவதற்கு துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

(XLIV) கால்நடை பராமரிப்புத் துறையில் விளம்பரப் பிரிவு அமைக்க நடவடிக்கை எடுத்தல்

258. மத்திய மற்றும் மாநில அரசின் திட்டங்கள் மக்களைச் சென்றடைவதற்கு விளம்பரக் கண்காட்சிகள் நடத்தவும், நடமாடும் விளம்பர பிரிவு வைத்து விளம்பரப்படுத்த வேண்டும் என்றும், ஏற்கெனவே நல்ல நிலையில் இயங்கும் பண்ணைகளைப் பார்வையிடவும் வழிவகை செய்யலாம் என்றும், இதன் விவரங்கள் பாமர மக்களுக்கும் சென்றடையும்வகையில் விளம்பரக் கண்காட்சிகள் நடத்தப்பட வேண்டும் என்றும், அதற்குத் தேவையான விளம்பரப் பலகைகள் வைக்கவும், தேவையான உபகரணங்கள் மற்றும் கருவிகள் வாங்குவதற்கும் அரசிடம் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா என்றும், தேவைப்பட்டால் இது குறித்து குழு அரசுக்கு பரிந்துரை செய்யும் என்றும் துறை குழுவிடம் தெரிவித்தது.

259. இதற்கு, சென்னையில் நடந்த குழுக் கூட்டத்தில் மக்களிடம் கால்நடைகளுக்கு வரும் நோய் குறித்து எடுத்துச் சொல்ல வேண்டியது அவசியம் ஏற்பட்டுள்ளது. தற்போது கால்நடை பராமரிப்புத் துறையில் விளம்பரத்திற்கென்று தனியாக பணம் ஒதுக்கப்படுவதில்லை. தற்போது இலவச ஆடுகள் வழங்கும் திட்டத்திற்கென்று பணம் அதிக அளவு ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. அதேபோன்று, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்திற்கென நிறைய விரிவாக்கப் பணிகள் வந்திருக்கின்றது. எனவே, இவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து, வானொலி வாயிலாக பொது மக்களுக்கு அவர்களின் கால்நடைகளுக்கு வரும் நோய் தொடர்பான விவரங்களையும், தடுப்பு நடவடிக்கைகளையும் தெரிவிப்பதற்கு முதற்கட்டமாகத் திட்டமிட்டிருப்பதாகவும், இதற்கான விவரங்களைத் தெரிவிப்பதற்கு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் மூலமாகவே பயிற்சி அளிக்கப்படுவதாகவும் வானொலி மூலமாக இந்த விவரங்களை அவ்வப்போது எடுத்துச் சொல்வதற்கு தற்போது துறையால் முதற்கட்ட நடவடிக்கையை துறை வசம் இருப்பதாக குழுவிற்கு அரசுச் செயலாளர் விளக்கினார்.

260. பெரும்பாலான மத்திய மற்றும் மாநில அரசுத் திட்டங்கள் குறித்த விவரங்கள், கால்நடைகளுக்கு வரும் நோய்கள் தொடர்பான விவரங்களை பொது மக்களிடம் கொண்டு சேர்க்கும் பணியினைச் செம்மையாகச் செய்ய வேண்டிய நிலைமை இருப்பதன் காரணமாக, கால்நடை பராமரிப்புத் துறையில் ஒரு விளம்பரப் பிரிவு விரைவில் அமைக்கப்பட வேண்டும் என்றும், அவ்வாறு அமைக்கப்பட்டது குறித்த விவரத்தை குழுவிற்கு அறிக்கையாக அனுப்பி வைக்கப்பெற வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

(XLV) கால்நடை மருத்துவப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள்மூலம் விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கல்

261. துறைமூலம் கால்நடை மருத்துவ பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள் (VURTC) எவ்வாறு செயல்படுகின்றன என்பதை குழு அறிய விரும்பியது.

262. கால்நடை மருத்துவ பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள் நன்றாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. தற்போது 25 மையங்கள் நடைமுறையில் இருக்கின்றன. கடந்த வருடம் 3 மையங்கள் துவங்கப்பட்டன. நாகப்பட்டினம், இராமநாதபுரம், பெரம்பலூர் ஆகிய இடங்களில் தற்போது செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இம்மையங்களில் எவ்வாறு பராமரிப்பது குறித்து பயிற்சி அளிக்கின்றன. மேலும், அவர்களுக்குத் தேவையான அறிவுரைகளையும் அவ்வப்போது கொடுக்கிறார்கள். இதுகுறித்து இயக்குநரகம் மூலம் சுற்றறிக்கைகள் அனுப்புகிறோம். அவ்வப்போது எந்தெந்த நோய்கள் தாக்குகின்றனவோ அதற்குத் தகுந்தாற்போல் என்னென்ன நோய்த் தடுப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், மருந்துகள் என்னென்ன கொடுக்க வேண்டும் என்றும் அறிவுறுத்துகிறோம். மேலும், அந்தந்தப் பகுதியில் உள்ள கால்நடை உதவி மருத்துவர்கள் மூலமும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று அரசுச் செயலாளர் குழுவிற்குத் தெரிவித்தார்.

263. கால்நடை மருத்துவ பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள்மூலம் கிராமப்புறங்களில் விவசாயிகளுக்கு எந்தெந்த பருவகாலங்களில் எந்த வகையான நோயின் தாக்கம் கால்நடைகளுக்கு ஏற்படும் என்றும், இந்த நோய்களைத் தடுப்பதற்கு தகுந்தாற்போல் என்னென்ன மருந்துகள் கொடுக்க வேண்டும் என்பது குறித்து அதிக அளவில் விழிப்புணர்வு ஏற்படுத்தி கால்நடைகளைப் பாதுகாக்க துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

(XLVI) வெளியூர் செல்வோர் நாய்களைப் பாதுகாப்பாக விட்டுச் செல்ல நவீன நாய்ப் பராமரிப்பு பிரிவு அமைத்தல்

264. சென்னை மாவட்டத்தில் வெளியூர் செல்லும்போது தங்கள் செல்லப் பிராணிகளை பாதுகாப்பாக விட்டுச் செல்வதற்காக நவீன நாய்ப் பராமரிப்பு பிரிவு அமைக்க குழு பரிந்துரை செய்ய வேண்டும் என துறை சார்பாக கோரிக்கை வைக்கப்பட்டது. இத்தகைய வசதியினை உருவாக்க துறையிடம் கருத்துரு ஏதேனும் உள்ளதா என குழு அறிய விரும்பியது.

265. இதுதொடர்பாக தற்போதைய நிலையில் கருத்துரு ஏதும் இல்லை என குழுவிற்கு துறை தெரிவித்தது.

266. சென்னை நகரில் செல்லப் பிராணிகளின் பாதுகாப்பைக் கருதியும் வெளியூர் செல்வோர் தங்களது நாய்களை பாதுகாப்பாக விட்டுச் செல்ல நவீன நாய்ப் பராமரிப்பு பிரிவு அமைக்க துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

(XLVII)அரிய வகை நாய் இனங்களை காப்பாற்றிட நடவடிக்கை எடுத்தல்

267. சென்னையில் சைதாப்பேட்டை பன்முக மருத்துவமனையின் முதன்மை மருத்துவர் சென்னையில் மட்டும் 23 வகையான நாய்கள் இனப்பெருக்கத்திற்காக வளர்க்கப்படுகிறது என்று குழுவிடம் தெரிவித்தார். சென்னை நீங்கலாக இதர மாவட்டங்களில் செல்லப் பிராணிகளின் வளர்ப்போர் நலன் கருதி தமிழ்நாட்டில் வேறு மாவட்டங்களில் இம்மையம் போலவே துவங்குவதற்கு துறை நடவடிக்கையினை மேற்கொள்ளலாம் என குழு கருதுகிறது. இது குறித்து துறையின் கருத்தினை குழு அறிய விரும்பியது.

268. இதுதொடர்பாக கோயம்புத்தூர், மதுரை, சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய முக்கிய நகரங்களில் நாய் வளர்ப்புப் பிரிவு ஏற்படுத்த அரசிற்கு துறையினால் கருத்துரு அனுப்பி ஆய்வு செய்யப்படலாம் என குழுவிற்கு துறை தெரிவித்தது.

269. தமிழகத்தில் இராஜபாளையம், கோம்பை, சிப்பிப்பாறை போன்ற அரியவகை சிறப்பு இன நாய்கள் அழிந்து வருகிறது. இதுபோன்ற அரிய வகையான நாய் இனங்களை காப்பாற்றிட நாய் வளர்ப்புப் பிரிவு முக்கிய நகரங்களில் ஏற்படுத்த உரிய நடவடிக்கையினை துறை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

(XLVIII) மத்திய அரசின் உதவியுடன் கால்நடை காப்பீட்டுத் திட்டத்தை பிற மாவட்டங்களில் செயல்படுத்த நடவடிக்கை

270. சென்னை மாவட்டத்தில் குழு ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது, மத்திய அரசு நிதி உதவியுடன் கால்நடை காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்த உதவி இயக்குநர்களின் கருத்துரு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது என்கிற விவரம் குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது. 2011–2012 முதல் இத்திட்டம் செயல்பாட்டில் உள்ள நிலையில் துறை தற்போதுதான் கருத்துரு கோரப்பட்டுள்ளது என்பதால் துறை இதற்கான நடவடிக்கையினை மிகவும் தாமதமாக மேற்கொண்டுள்ளது என குழு கருதுகிறது. இது குறித்து துறையின் கருத்தினை குழு அறிய விரும்பியது.

271. இதற்கு துறையானது மத்திய அரசு நிதி உதவியுடன் கால்நடை காப்பீட்டுத் திட்டம் 15 மாவட்டங்களில் மேற்கொள்ள அனுமதி வழங்கியுள்ளது. பிற மாவட்டங்களிலும் செயல்படுத்த கருத்துரு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, அது நிராகரிக்கப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் பிற மாவட்டங்களிலும் செயல்படுத்த கருத்துரு மீண்டும் அனுப்பி கால்நடை காப்பீட்டுத் திட்டம் பெற வலியுறுத்தப்படும் என குழுவிற்கு விளக்கியது.

272. தமிழகத்தில் கால்நடைகளை கோமாரி நோய், தொண்டை அடைப்பான் போன்ற கொடிய நோய்களிலிருந்து காப்பாற்றுவதற்கும் விவசாயிகளை இழப்பீடுகளிலிருந்து விடுவிக்கவும் பயனளிக்கக்கூடிய மத்திய அரசு நிதி உதவியுடன் கூடிய கால்நடை காப்பீட்டுத் திட்டத்தினை அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்த துறை அவசிய அவசரம் கருதி விரைவு நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

(XLIX) விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் பரண்மேல் ஆடு வளர்ப்பினை செயல்படுத்த நடவடிக்கை:

273. பரண்மேல் ஆடு வளர்ப்பு குறித்தும், கால்நடை வளர்ப்பவர்களுக்கு அதனால் ஏற்படும் நன்மை பெறப்படும் வருவாய் மற்றும் பராமரிப்புச் செலவு, நோயின் தாக்கம் எத்தகைய நிலவியற் பிரிவில் வளரும் என்பன குறித்தும் குழு துறையிடம் கோரியது.

274. இதற்கு துறை ஆடு மற்றும் மாடுகளின் மேய்ச்சல் நிலங்கள் விவசாயம், குடியிருப்புகள் மற்றும் தொழிற்சாலைகளுக்கான பயன்பாட்டுக்கு சென்றுவிட்டதால் மேய்ச்சல் நிலங்களின் அளவும், தரமும் வெகுவாரியாகக் குறைந்துவிட்டன. எனவே, பண்ணையாளர்கள் ஆடுகளை கொட்டிலில் வைத்து தீவிர முறையில் வளர்க்க ஆரம்பித்திருக்கின்றனர். இவ்வாறு ஆடுகளை குறைவான இட வசதியில் வளர்க்கும்போது ஆடுகளில் குறிப்பாக குட்டிகளில் கழிச்சல், நிமோனியா போன்ற நோய்களின் தாக்கத்தினால் அதிக அளவு இழப்பு ஏற்பட நேரிடுகிறது.

275. கொட்டில் முறையில் ஆடுகளை நோய்களின் தாக்கம் இன்றி வளர்க்க வேண்டுமெனில் ஆடுகளுக்கு மரப்பலகையிலான சல்லடைத்தரை அமைத்து பரண்மேல் பராமரிப்பது இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. இவ்வாறு பரண் மேல் ஆடுகளை வளர்க்கும்போது ஆடுகளின் கொட்டகையில் தேவையான அளவு காற்றோட்ட வசதி உறுதி செய்யப்படுகிறது. மேலும், ஆடுகளின் சாணம் மற்றும் சிறுநீர் கொட்டகையில் தங்காமல் சல்லடைத்தரையின் வழியாகச் சென்று விடுவதால் ஆடுகளை எந்த நேரத்திலும் சுகாதாரமான சூழ்நிலையில் பராமரிக்க ஏதுவாகிறது. இதனால் ஆடுகளில் அதிக அளவு இறப்பை ஏற்படுத்தும் கழிச்சல் மற்றும் நிமோனியா போன்ற நோய்களின் தாக்கம் இன்றி ஆடுகள் ஆரோக்கியமாக வளர ஏதுவாகிறது. மேலும் கொட்டில் முறையில் வளர்க்கப்படும் ஆடுகள் சாதாரண மண் தரையில் வளர்க்கப்படும் ஆடுகளை விட துரிதமாக உடல் எடை அடைய ஏதுவாகிறது. இதனால் வருமானம் பெருக வழிவகை ஏற்படுகிறது என்று குழுவிற்கு துறை விளக்கியது.

276. வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கும் திட்டத்தின் பயனாளிகளுக்கு பரண்மேல் ஆடு வளர்ப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தி, சுகாதாரமான முறையில், குறைந்த செலவில் அதிகமாக இலாபம் ஈட்டவும், இறப்பு போன்ற இழப்பீடுகளைக் குறைக்கும் வகையில் விலையில்லாத ஆடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் இதனை செயல்படுத்த துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

சென்னை – 600 009,
நாள்: 4.8.2014
ஆடி 19, திருவள்ளுவர் ஆண்டு 2045

அ.பாப்பாசுந்தரம்,
தலைவர்
மதிப்பீட்டுக் குழு

TRUTH ALONE TRIUMPHS

பாகம்–2

நிகழ்ச்சி பகுதி

2013 ஜூன் 4, செவ்வாய்க்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 4 ஆம் நாள், செவ்வாய்க்கிழமை, காலை 11.00 மணியளவில், சென்னை–600 002, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்ற உறுப்பினர்கள் இல்லக் குடியிருப்பு வளாக உபவசதிக் கட்டிடத்தில் உள்ள குழுக் கூட்ட அறை–1ல் குழு கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர்:–

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திரு. செ. காமராஜ்
திரு. கு. குணசேகரன்
திரு. ஆர். சாமி
திரு. ஆர். சீனிவாசன்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு.வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
செல்வி. கே. பாலபாரதி
திரு. எஸ். ஜாண் ஜேக்கப்
முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா

செயலகம்

திரு அ.மு.பி. ஜமாலுதீன் . . செயலாளர்
திரு. க. பாலசுப்பிரமணியன் . . இணைச் செயலாளர்
திரு. ரு. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, 2013–2014 ஆம் ஆண்டு எந்தெந்த துறைகளை தனது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம் என விவாதிக்க கூடியது.

பின்னர், குழு கீழ்க்கண்ட துறைகளின் மதிப்பீடுகளை தனது ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதென முடிவு செய்தது :

1. பள்ளிக் கல்வித் துறை
2. சுற்றுலா (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)
3. சமூக நலன் (மாற்றுத் திறனாளிகள் நலன் தவிர) (சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை)
4. கால்நடை மற்றும் பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும்

மீன்வளத் துறை)

இதைத் தொடர்ந்து குழு தேர்வு செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகள் குறித்து ஆய்வு செய்ய மாவட்டங்களில் ஆய்வுப்பயணம் மேற்கொள்ளலாம் என முடிவு செய்தது.

2013 ஜூலை 3, புதன்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 3 ஆம் நாள், புதன்கிழமை காலை 10.00 மணியளவில், தேனி மாவட்டம், அரசு விருந்தினர் மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
டாக்டர். க. கிருஷ்ணசாமி
திரு. சுகுணசேகரன்
திரு. ஆர். சாமி
திரு. ஆர். சீனிவாசன்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
செல்வி கே. பாலபாரதி
திரு. எஸ். ஜாண் ஜேக்கப்

செயலகம்

திரு. க. பாலசுப்பிரமணியன் . . இணைச் செயலாளர்
திரு. கு. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, தேனியில் உள்ள வீரபாண்டி புதிய கால்நடை மருந்தகக் கட்டிடப் பணிகளை பார்வையிட்டது. தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கிராமப்புற மக்களுக்கு கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் நவீன தொழில்நுட்ப சேவை வழங்குவதற்கு மேற்படி கால்நடை கிளை நிலையத்தை 1.4.2012 முதல் கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்தப்பட்டு அதற்கான புதிய கட்டடப்பணி 10.6.2013 முதல் பொதுப்பணித் துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று மண்டல இணை இயக்குநர் குழுவிற்கு தெரிவித்தார்.

பின்னர் குழு, தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

குழு, தேக்கடி சென்று இரவு தங்கியது.

2013 ஜூலை 4, வியாழக்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 4 ஆம் நாள், வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில், தேக்கடியில் உள்ள தனியார் விருந்தினர் மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
டாக்டர். க. கிருஷ்ணசாமி
திரு. சு.குணசேகரன்
திரு. ஆர். சாமி
திரு. ஆர். சீனிவாசன்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
செல்வி கே. பாலபாரதி
திரு. எஸ். ஜாண் ஜேக்கப்

செயலகம்

திரு.அ.மு.பி. ஜமாலுதீன் . . செயலாளர்
திரு. க. பாலசுப்பிரமணியன் . . இணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, கொடைக்கானலுக்கு செல்லும் வழியில் இவ்வாண்டு ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட இதர துறைகளின் பணிகளை பார்வையிட்டது.

குழு, கொடைக்கானல் சென்று இரவு தங்கியது.

2013 ஜூலை 5, வெள்ளிக்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 5 ஆம் நாள், வெள்ளிக்கிழமை, காலை 9.30 மணியளவில், திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல், கோஹினூர் ஷேக் அப்துல்லா மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
திரு. அர. சக்கரபாணி
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
செல்வி கே. பாலபாரதி
திரு. எஸ். ஜான் ஜேக்கப்

செயலகம்

திரு.அ.மு.பி. ஜமாலுதீன் . . செயலாளர்
திரு. க. பாலசுப்பிரமணியன் . . இணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, மல்லணம்பட்டியில் விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் பயன்பெற்ற பயனாளிகளை சந்தித்தது. மேலும், பட்டிவீரன்பட்டி கால்நடை மருந்தகத்தை பார்வையிட்டது. அம்மருத்துவமனையில் 2011–2012 ஆம் நிதியாண்டில் ரூ.11.6 இலட்சம் மதிப்பீட்டில் 950 சதுர அடி பரப்பளவில் கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது என்கிற தகவலை உதவி இயக்குநர் குழுவிற்கு தகவல் தெரிவித்தார்.

பின்னர் குழு, திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

பின்னர் குழு திண்டுக்கலில் கலைந்தது.

2013 ஆகஸ்ட் 19, திங்கட்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19 ஆம் நாள், திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில், சென்னை–2, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்ற உறுப்பினர் இல்லக் குடியிருப்பு உபவசதி கட்டிடத்திலுள்ள குழு கூட்ட அறை எண்–1ல் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
திரு. ஆர். சாமி
திரு. ஆர். சீனிவாசன்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
திரு. எஸ். ஆர். பார்த்திபன்
செல்வி கே. பாலபாரதி
திரு. எஸ். ஜாண் ஜேக்கப்

செயலகம்

திரு.அ.மு.பி. ஜமாலுதீன் . . செயலாளர்
திரு. க. பாலசுப்பிரமணியன் . . இணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, சென்னை, சைதாப்பேட்டையில் உள்ள கால்நடை பன்முக மருத்துவமனையை பார்வையிட்டது. அம்மருத்துவமனையின் செயல்பாடு குறித்து பிரதம மருத்துவர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. பின்னர், குழு மாத்தூரில் உள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தினை பார்வையிட்டது. அப்பல்கலைக் கழகத்தின் செயல்பாடு குறித்து பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் குழுவிற்கு தகவல் தெரிவித்தார்.

குழு, சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

பின்னர் குழு சென்னையில் இரவு தங்கியது.

2013 ஆகஸ்ட் 20, செவ்வாய்க்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 20 ஆம் நாள், செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில், சென்னை–2, ஒமந்தூரார் அரசினர் தோட்டம் சட்டமன்ற உறுப்பினர் இல்ல குடியிருப்பு உபவசதி கட்டிடத்தில் உள்ள குழுக் கூட்ட அறை எண்.1 இல் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
திரு. சு. குணசேகரன்
திரு. ஆர். சாமி
திரு. ஆர். சீனிவாசன்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
திரு. எஸ். ஆர். பார்த்திபன்
செல்வி கே. பாலபாரதி
திரு. எஸ். ஜாண் ஜேக்கப்

செயலகம்

திரு.அ.மு.பி. ஜமாலுதீன் .. செயலாளர்
திரு. க. பாலசுப்பிரமணியன் .. இணைச் செயலாளர்
திரு. க. பூபதி .. துணைச் செயலாளர்

குழு, திருவள்ளூர் மாவட்டம், மல்லியன்குப்பம் பகுதியில் விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கப்பட்ட பயனாளிகளை நேரில் சந்தித்தது. பின்னர் ஆரணியில் ரூ.26.6 இலட்சம் மதிப்பீட்டில் நபார்டு வங்கி நிதி உதவித் திட்டம் மூலம் கட்டப்பட்ட கால்நடை மருந்தகத்தைப் பார்வையிட்டது.

குழு, திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

பின்னர் குழு காஞ்சிபுரம் சென்று இரவு தங்கியது.

2013 ஆகஸ்டு 21, புதன்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட், திங்கள் 21 ஆம் நாள், புதன்கிழமை காலை 9.00 மணியளவில், காஞ்சிபுரம் மாவட்டம், மாமல்லபுரத்திலுள்ள தனியார் சுற்றுலா மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
திரு. ஆர். சாமி
திரு. ஆர். சீனிவாசன்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
திரு. எஸ். ஆர். பார்த்திபன்
செல்வி கே. பாலபாரதி
திரு. எஸ். ஜாண் ஜேக்கப்

செயலகம்

திரு. க. பாலசுப்பிரமணியன் . . இணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, காஞ்சிபுரம் மாவட்டம், கொட்டமேடு கிராமத்தில் 50 பெண் பயனீட்டாளர்களை தெரிவு செய்து விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் தலா ஒரு கறவை பசு வீதம் வழங்கப்பட்டது.

குழு, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

பின்னர் குழு காஞ்சிபுரத்தில் கலைந்தது.

2013 செப்டம்பர் 19, வியாழக்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 19 ஆம் நாள், வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில், விருதுநகர் அரசு விருந்தினர் மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
திரு. சு. குணசேகரன்
திரு. ஆர். சாமி
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. ச. பழனிச்சாமி
திரு. எஸ். ஜாண் ஜேக்கப்

செயலகம்

திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, விருதுநகர் கால்நடை மருத்துவமனையை பார்வையிட்டது. அம்மருத்துவமனையில் ஊரக கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (RIDE XVII) திட்டத்தின் கீழ் ரூ.26.57 இலட்சம் மதிப்பீட்டில் 220.30 சதுர மீட்டர் பரப்பளவில் 3.12.2012 அன்று புதிய கட்டடம் கட்டி முடிக்கப் பெற்று திறந்து வைக்கப்பட்டதாக துறையின் மண்டல இயக்குநர் குழுவிற்கு தகவல் தெரிவித்தார்.

குழு, விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

குழு, அன்று இரவு குற்றாலத்திற்கு சென்று தங்கியது.

2013 செப்டம்பர் 20, வெள்ளிக்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20 ஆம் நாள், வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில், குற்றாலத்திலுள்ள பொதுப்பணித்துறை அரசு விருந்தினர் மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
திரு. கு. குணசேகரன்
திரு. ஆர். சாமி
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. ச. பழனிச்சாமி
திரு. எஸ். ஜாண் ஜேக்கப்

செயலகம்

திரு. கு. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, திருநெல்வேலி, கால்நடை பன்முக மருத்துவமனை மற்றும் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை பார்வையிட்டது. அம்மருத்துவமனையில் உள்ள பல்வேறு பிரிவின் பணிகள் மற்றும் கால்நடைகளுக்கு வழங்கப்படும் சிகிச்சை குறித்து அக்கல்லூரியின் முதல்வர் குழுவிற்கு விளக்கம் அளித்தார்.

குழு, திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

குழு திருநெல்வேலியில் கலைந்தது.

2013 நவம்பர் 5, செவ்வாய்க்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 5 ஆம் நாள், செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில், இராமேஸ்வரம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தங்கும் விடுதியில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திரு. செ. காமராஜ்
திரு. சு.குணசேகரன்
திரு. ஆர். சாமி
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
செல்வி கே. பாலபாரதி
முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா

செயலகம்

திரு. அ.மு.பி.ஜமாலுதீன் . . செயலாளர்
திரு. க. பாலசுப்பிரமணியன் . . இணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, மண்டபம் கேம்ப், இடையார்வலசை, ஊரக கால்நடை மருந்தகத்தை பார்வையிட்டது. அப்போது அம்மருத்துவமனையில் போதிய மருந்துகள் இருப்பில் உள்ளதாகவும், அம்மருத்துவமனையினை தரம் உயர்த்துவதற்கான கருத்துருவினை அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் கால்நடை மருத்துவர் குழுவிற்கு தகவல் தெரிவித்தார்.

குழு, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

குழு சிவகங்கை சென்று இரவு தங்கியது.

2013 நவம்பர் 6, புதன்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 6 ஆம் நாள், புதன்கிழமை காலை 9.30 மணியளவில், சிவகங்கை வேலுநாச்சியார் அரசு விருந்தினர் மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திரு. செ. காமராஜ்
திரு. சு. குணசேகரன்
திரு. ஆர். சாமி
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
செல்வி கே. பாலபாரதி
முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா

செயலகம்

திரு. அ.மு.பி.ஜமாலுதீன் . . செயலாளர்
திரு. க. பாலசுப்பிரமணியன் . . இணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, ஒக்கூர் கால்நடை மருந்தகத்தை பார்வையிட்டது. அம்மருத்துவமனையில் போதிய மருந்துகள் இருப்பு உள்ளதாகவும், கால்நடை மருத்துவர் சரியாக பணிக்கு வருவதில்லை என்கிற தகவல் குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது.

குழு, சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

குழு சிவகங்கையில் கலைந்தது.

2013, டிசம்பர் 30, திங்கட்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு 2013 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 30 ஆம் நாள், திங்கட்கிழமை காலை 10.30 மணியளவில், சென்னை–2, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு உபவசதிக் கட்டிடத்தில் உள்ள குழுக் கூட்ட அறை எண்.1ல் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்திருந்தனர்:–

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
திரு. சு. குணசேகரன்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
செல்வி. கே. பாலபாரதி
முனைவர். எம்.எச். ஜவாஹிருல்லா

செயலகம்

திரு. அ.மு.பி.ஜமாலுதீன் . . செயலாளர்
திரு. க. பாலசுப்பிமணியன் . . இணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, இவ்வாண்டு தனது ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட "கால்நடை பராமரிப்பு" மதிப்பீடு தொடர்பாக கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறையின் செயலாளர், கால்நடைப் பராமரிப்பு துறையின் இயக்குநர் மற்றும் துறையின் இதர அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

2014 ஜூன் 26, வியாழக்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2014 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 26 ஆம் நாள், வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் வேலூர் அரசு விருந்தினர் மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்திருந்தனர்:–

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திரு. செ. காமராஜ்
திரு. ஆர். சீனிவாசன்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
திரு. எஸ். ஜான் ஜேக்கப்
முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா

செயலகம்

திரு. இரா. பழனிசாமி . . துணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, வேலூர் மாவட்டத்தில் இவ்வாண்டு ஆய்வுக்கு எடுத்துக் கொண்டுள்ள மதிப்பீடுகள் தொடர்பாக இதர துறைகளின் பணிகளை பார்வையிட்டது.

குழு, வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள குழு கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறையின் அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

பின்னர் குழு திருவண்ணாமலை சென்று இரவு தங்கியது.

2014, ஜூன் 27 வெள்ளிக்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2014 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 27 ஆம் நாள்,வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் திருவண்ணாமலை அரசினர் விருந்தினர் மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்திருந்தனர்:–

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திரு. செ. காமராஜ்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
திரு. எஸ். ஜாண் ஜேக்கப்

செயலகம்

திரு. இரா. பழனிசாமி . . துணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, திருவண்ணாமலை மாவட்டத்தில் செங்கம் தொகுதி பாச்சல் கால்நடை மருந்தகம் மற்றும் விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தின் பயனாளிகளை சந்தித்தது. மேற்படி கால்நடை மருந்தகத்திற்கு 2013–2014 ஆம் ஆண்டில் நபார்டு திட்டத்தின் மூலமாக 26.66 இலட்சம் புதிய கட்டடம் கட்டப்பட்டது என்கிற தகவல் குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது.

குழு, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறையின் அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

குழு, திருவண்ணாமலையில் கலைந்தது.

பரிந்துரைகளின் சுருக்கம்

1. 2012–2013 ஆம் ஆண்டில் ஒசூர், புதுக்கோட்டை, முகுந்தராயபுரம் பண்ணைகளில் 312 நபர்களுக்கு 17–10–2013 முதல் நடைபெற்றுவரும் கால்நடை ஆய்வாளர் பயிற்சி நிறைவடைந்தவுடன் நிரப்பப்படாமல் உள்ள கால்நடை ஆய்வாளர் நிலை–1 மற்றும் கால்நடை ஆய்வாளர் நிலை–2 பணியிடங்களை நிரப்பவும், நிரப்பப்படாமல் இருக்கும் 187 கால்நடை அலுவலக உதவியாளர் பணியிடங்களை நிரப்புவதற்கு கால்நடை பராமரிப்புத் துறையின் ந.க. எண் 16398/இஇ2/2006, நாள் 13–12–2013 மூலம் ஆணை வெளியிடப்பட்டதன் தொடர்ச்சியாக துறை துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு மேற்காணும் பணியிடங்களை நிரப்பிட வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.(பத்தி எண். 23)

2. 2012–2013 ஆம் ஆண்டு தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 31 புதிய நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகளுக்கு 31 வாகனங்கள் வாங்கப்பட்டு, அவற்றிற்கு உரிய ஒட்டுநர்கள் அமர்த்தாமல் அந்த வாகனங்கள் செயல்படாமல் உள்ளது. எனவே, காலியாக உள்ள ஒட்டுனர் பணியிடங்களை நிரப்ப அரசு ஆணையினை விரைவில் பெற்று நியமனம் செய்வதற்கு துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண். 26)

3. சைதாப்பேட்டை பன்முக கால்நடை மருத்துவமனைக்கு மேலே தெரிவிக்கப்பட்ட பணியிடங்களைத் தோற்றுவிக்க கருத்துருவை அரசுக்கு அனுப்பி ஆணை பெறுவதற்கு துறை துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.29)

4. 2012–2013 ஆம் ஆண்டில் திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் கோழியின பரிசோதனைக் கூடம் ரூ.2.63 கோடி செலவில் அமைப்பதற்கும் மற்றும் ரூ.13.27 கோடி செலவில் 85 கால்நடை மருந்தகங்களுக்கு கட்டடங்கள் கட்டுவதற்கும் துறை துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.(பத்தி எண்.31)

5. மேலும் 2013–2014 ஆம் ஆண்டில் 22 கால்நடை பெருமருத்துவமனைகள், 20 கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி அலகுகள் மற்றும் 11 பண்ணைகளுக்காக எளிதில் எடுத்துச் செல்லும் நுண்ணாய்வுக் கருவிகள் வாங்குவதற்கு ரூ.881.90 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை குழு அறிந்தது. இக்கருவிகளை வாங்கி பயன்பாட்டிற்குக் கொண்டுவர துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.33)

6. 2011–2012 இல் தேசிய புரதச்சத்து பெருக்க இயக்கத் திட்டத்தின்மூலம் ரூ.5.05 கோடி செலவில் வெள்ளாடு வளர்ப்பினை ஊக்கப்படுத்த முதல் கட்டமாக 15 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினை பிற மாவட்டங்களிலும் துவக்குவதற்கு துறை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.35)

7. 2013–2014 ஆம் ஆண்டில் தேசிய புரதச்சத்து வழங்கும் திட்டத்தின்மூலம் வெள்ளாடு வளர்ப்புத் திட்டத்தில் 72 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு கருத்துரு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதற்கு அரசு ஆணை வெளியிட்டவுடன் விரைவாக பயனாளிகளுக்கு நிதி உதவியினை அளிக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.38)

8. 2012–2013 ஆம் ஆண்டில் ரூ.13.17 கோடி செலவில் தீவன அபிவிருத்திப் பணிகள் 10 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் 2 இலட்சம் மெட்ரிக் டன் பசுந்தீவனம் உற்பத்தி செய்யப்படுவதை குழு அறிந்தது. 2013–2014 இல் இத்திட்டத்தினை பிற மாவட்டங்களில் கூடுதலாக துவக்குவதற்கு துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.41)

9. தீவனப் பயிர் பற்றாக்குறையைத் தீர்க்கும் வகையில் ஊறுகாய்புல் உற்பத்தியை அதிகரிக்க மாநிலத்தில் கூடுதலாக பிற மாவட்டங்களில் ஆய்வு செய்து பயிரிடுவதற்கு துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.43)

10. தமிழகத்தில் உள்ள 27 மாவட்டங்களில் 100 விழுக்காடு மானியத்தில் ரூ.1.01 கோடி செலவில் அசோலா பயிர் உற்பத்தியை அதிகரிக்கவும் ஓரத்தநாடு கால்நடை பண்ணையில் ரூ.9.6 கோடி மதிப்பீட்டில் தீவன விதை உற்பத்தி அலகு மற்றும் உழவர் பயிற்சி மையம் அமைக்கும் பணிகளை முடிக்க துறை விரைவாக நடவடிக்கையினை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.46)

11. ஊறுகாய் புல் தயாரிப்பு அலகினை நிறுவும் திட்டத்தின்கீழ் 160 அலகுகள் நிறுவும் பணி நடைபெற்று வருகிறது. இந்த அலகுகளை நிறுவும் பணியை துரிதப்படுத்தி நிறைவு செய்வதற்கு துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.50)

12. தீவன அபிவிருத்திப் பணி மேற்கொள்ளும் திட்டத்தின்கீழ் உதகமண்டலத்தில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையில் 42 ஏக்கர் நிலப்பரப்பை ரூ.20 இலட்சம் செலவில் ஒட்ஸ் மற்றும் மக்காச்சோளம் சாகுபடியின்கீழ் கொண்டுவர மேற்கொள்ளப்பட்டுவரும் பணியை முடிக்க துறை நடவடிக்கை எடுக்க குழு பரிந்துரை செய்கிறது.(பத்தி எண்.52)

13. தமிழகத்தில் கால்நடைகளுக்குத் தேவையான புல் உற்பத்தியை அதிகரிக்க அரசு தரிசு நிலங்களை தேர்வு செய்து, அந்த நிலங்களில் புல் பயிர் செய்வதற்கு துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது .(பத்தி எண்.55)

14. இந்நிலையில் துறை கோமாரி நோய் குறித்து ஆய்வு செய்து, மக்களிடம் கோமாரி நோயின் தன்மை குறித்தும், தடுப்பூசி போடுவதின் நன்மைகள் குறித்தும் மக்களின் தவறான எண்ணப்போக்குகளை அகற்றுவதற்கும், மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.72)

15. இதுகுறித்து துறை உரிய முறையில் ஆய்வினை மேற்கொண்டு, சந்தை நடக்கும் இடங்களை வகைப்படுத்தி அங்கு தற்காப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.74)

16. பிற மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு கொண்டுவரும் அனைத்து கால்நடைகளையும் தனியார் உள்பட சோதனை சாவடியில் கால்நடை மருத்துவரைக் கொண்டு, தடுப்பூசி போடப்பட்டிருக்கிறதா என்று ஆய்வு செய்ய வேண்டும். பின்னர்தான் அவற்றை உரிய இடத்திற்கு கொண்டு செல்ல அனுமதிக்க வேண்டும். (பத்தி எண்.77)

17. ஆடுகளுக்கு தடுப்பூசி போடுவதினால் ஏற்படும் நன்மைகள், தீமைகள் குறித்து மக்களிடையே முகாம்கள் நடத்துதன் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தி, துறையும் முறையாக தடுப்பூசிகளின் அவசியத்தை கருத்திற்கொண்டு உரிய நேரத்தில் தடுப்பூசி போட்டு ஆடுகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.84)

18. தேசிய கன்றுவீச்சு நோய் தடுப்புத் திட்டத்தின்கீழ் 23 மாவட்டங்களில் நிணநீர் கண்காணிப்பு மேற்கொண்டதில் கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், கரூர் மற்றும் திருவாரூர் ஆகிய 6 மாவட்டங்களில் இந்நோயின் தாக்கம் உள்ளதாக குழு அறிகிறது. இம்மாவட்டங்களில் இந்நோயின் தாக்கத்தை நீக்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும், எஞ்சிய மாவட்டங்களில் நிணநீர் கண்காணிப்புப் பணியை மேற்கொள்ள வேண்டுமெனவும் குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.87)

19. 19–வது கால்நடை கணக்கெடுப்பு 15 விழுக்காடு கிராமங்களில் மட்டும் நடைபெற்று 31–8–2013 அன்று முடிவடைந்து பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் பெங்களூரு புள்ளிவிவர நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டு, புள்ளிவிவரம் பதியும் பணி நடைபெற்று வருவதை முழுமையாக நிறைவேற்ற துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.96)

20. தற்போது விலையில்லாத கறவை மாடுகள் மற்றும் ஆடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் பெறும் ஆடு மற்றும் மாடுகளை பயனாளிகள் விற்பனை செய்யாதவாறும், வெண்மைப் புரட்சிக்கு வழிகாட்டும் இத்திட்டம் குறித்தும் பயனாளிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.109)

21. கிராமப்புற புழக்கடை கோழி வளர்ப்பு திட்டத்தினை செயல்படுத்தாத 24 மாவட்டங்களில் விரிவுபடுத்த கருத்துரு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, கருத்துருவுக்கு ஒப்புதல் கிடைத்தவுடன் இம்மாவட்டங்களில் இத்திட்டத்தினை செயல்படுத்த வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.113)

22. கோழி வளர்ப்புக்கு மத்திய அரசிடமிருந்து 30 கோடி ரூபாய் நிதியைப் பெற்று அதன்மூலம் 419 கறிக்கோழிப் பண்ணைகள் கட்டப்பட்டுள்ளது. சீக்கிரம் மீதமுள்ள 639 பண்ணைகளை கட்டி முடிக்க குழு கேட்டுக்கொள்வதுடன், 25 சதவிகிதம் முன்மானியம் செப்டம்பர் மாதம் தான் வந்திருக்கிறது என குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது. மார்ச் மாதத்திற்குள் அந்த நிதி முழுவதும் செலவழிக்கப்பட்டு பணிகள் முடிக்கப்படுவதற்கு துறை விரைவான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.124)

23. 2013–2014 ஆம் ஆண்டில் 4,080 நாட்டுக்கோழிப் பண்ணை குறியீட்டில் 1,387 பயனாளிகளுக்கு மட்டுமே வங்கியிலிருந்து ஒப்புதல் பெறப்பட்டு பயனாளிகளுக்கு பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. எஞ்சியுள்ள 2,693 பயனாளிகளுக்கு வங்கிமூலம் ஒப்புதல் பெற துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.127)

24. பிறமாநிலங்களில் நடைமுறையில் உள்ளது போல் வெளிமாநிலங்களிலிருந்து வரும் கோழி இனங்களும் தமிழக எல்லையில் சான்றிதழ்கள் வழங்கவும் மற்றும் வாகனங்கள் மீது தெளிப்பான்கள்மூலம் மருந்துகளை தெளிப்பதற்கும் துறை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.133)

25. திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் தொகுதி, பச்சைமலையில் கால்நடை மருந்தகம் அமைக்கும் கருத்துருவினை ஆய்வு செய்து, கால்நடை மருந்தகம் அமைத்திட துறை விரைவாக நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.145)

26. தேனி மாவட்டத்தில் 2013–2014 ஆம் ஆண்டில் புதியதாக கால்நடை கிளை நிலையம் துவங்க 19 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, இதற்கான கருத்துரு 6–5–2013 அன்று சென்னை, கால்நடை பராமிப்புத் துறை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதை குழு அறிந்தது. இப்புதிய கால்நடை கிளை நிலையம் துவக்குவதற்கு துறை மூலம் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.148)

27. திருநெல்வேலி மாவட்டம், சேதுராயன்புதூர் கிராமத்தில் உரிய நடவடிக்கை மேற்கொண்டு புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.150)

28. விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிப்புத்தூரில் கால்நடை மருத்துவமனை அமைப்பதற்கான கருத்துருவை அரசுக்கு விரைவில் அனுப்பி ஒப்புதல் பெற்று அங்கு கால்நடை மருத்துவமனை அமைக்க துறை நடவடிக்கை மேற்கொள்ளுமாறு குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.153)

29. சென்னையில் ஐந்து கால்நடை மருத்துவமனைகள் தேவைப்படுகிறது என்பதை குழு அறிகிறது. எனவே இது தொடர்பாக கருத்துருவை அரசுக்கு அனுப்பி புதிதாக 5 கால்நடை மருத்துவமனைகள் அமைக்க துறை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.156)

30. சைதாப்பேட்டை கால்நடை பன்முக மருத்துவமனைக்குத் தேவையான வசதிகளை மேம்படுத்திட கருத்துருவை அரசுக்கு அனுப்பி ஆணை பெற்று பணிகளை மேற்கொள்ள துறை நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.160)

31. சைதாப்பேட்டை கால்நடை பன்முக மருத்துவமனையின் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுவதற்குரிய கருத்துருவை அரசுக்கு அனுப்பி ஆணையினை பெற துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.162)

32. செங்கல்பட்டு கால்நடை பெருமருத்துவமனையை 24 மணி நேரம் இயங்கும் கால்நடை பன்முக மருத்துவமனையாகத் தரம் உயர்த்திட கருத்துருவை அரசுக்கு அனுப்பி ஆணை பெற்று, உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.165)

33. 110 ஆண்டுகள் கடந்து பழமை வாய்ந்த வரலாற்றுச் சிறப்புமிக்க வேப்பேரி கால்நடை மருத்துவக் கல்லூரி உள்ள கட்டடங்களை புதுப்பிக்க மதிப்பீடு தயார் செய்து ஆணையினை பெற்று பணியை துவக்க துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.168)

34. 2012–2013 ஆம் ஆண்டில் 20 புதிய கால்நடை மருந்தகங்களுக்கு ரூ.6 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் விழுப்புரம் மாவட்டத்தில் எல்லோடு கிராமத்தில் கால்நடை மருந்தகப் பணி நிறைவுபெற்றது. மீதமுள்ள 19 கால்நடை மருந்தக கட்டடப் பணிகளை முடிக்க துறை துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.171)

35. 2013–2014 இல் நபார்டு XIX திட்டத்தின்கீழ் 19 கால்நடை மருந்தகங்களுக்கு திருநெல்வேலி மாவட்டத்தில் புதிதாக கட்டடங்கள் கட்டுவதற்கான கருத்துருக்கு ஒப்புதல் பெற்று விரைவாக நடவடிக்கை எடுக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.174)

36. 2012–2013 ஆம் ஆண்டு புதிய கட்டடம் கட்டுதல் மற்றும் புதுப்பித்தல் திட்டத்தில் திருவள்ளூர் மாவட்டத்தில் தேவதானம், ஞாயிறு, அத்திமாஞ்சேரிபேட்டை, ஆற்காடுகுப்பம் மற்றும் நாசிங்கபுரம் ஆகிய கால்நடை மருந்தகக் கட்டடங்கள் மற்றும் பூந்தமல்லி கால்நடை மருத்துவமனை கட்டடம் ஆகியவற்றை விரைவில் கட்டித்தர உரிய நடவடிக்கை எடுத்து, பயன்பாட்டிற்கு கொண்டுவரவேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.177)

37. 2012–2013 ஆம் ஆண்டில் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்மூலம் பூரிவாக்கம் ஊரக கால்நடை மருந்தகத்திற்கு தேர்வு செய்யப்பட்ட நிலம் தொடர்பாக திருவள்ளூர் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ள வழக்கினை முடிக்கப்பெற்று ஊரக பூரிவாக்கம் கால்நடை மருந்தக நிலம் தொடர்பான வழக்கு முடிவுற்றதும் அங்கு கால்நடை மருந்தகம் அமைக்க துறை விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.180)

38. திருவள்ளூர் மாவட்டத்தில் 2011–2012 ஆம் ஆண்டு தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் உள்கட்டமைப்பு அபிவிருத்தி நிதி திட்டத்தின் கீழ் உளுந்தை, வேப்பம்பட்டு, சோழவரம், பெருஞ்சேரி மற்றும் மேலக்கொண்டையார் ஆகிய இடங்களில் நடைபெற்றுவரும் கால்நடை மருந்தகக் கட்டுமானப் பணிகளை விரைவாக முடிக்க துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.183)

39. மேற்காணும் தேசிய வேளாண் மற்றும் ஊரக அபிவிருத்தி வங்கி நிதிமூலம் மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகளில் எஞ்சிய 61 கால்நடை மருந்தகங்கள், 5 கால்நடை பண்ணைகளின் உள்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளை விரைவில் முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டுவர துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.186)

40. 2013–2014 இல் நபார்டு XIX திட்டம் மூலம் 450 கால்நடை மருந்தகங்களுக்கு ரூ.99 கோடி மதிப்பீட்டில் கட்டடங்கள் கட்டுவதற்குரிய கருத்துருவிற்கு நபார்டு வங்கியின் ஒப்புதலைப் பெறுவதற்கு துரித நடவடிக்கை துறை எடுத்து கட்டடங்களை கட்டி முடிக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.188)

41. திருவொற்றியூரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் கால்நடை மருந்தகத்திற்குரிய இடத்திற்கு திருவொற்றியூர் வட்டாட்சியரின் பரிந்துரையை உடனடியாகப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்து, கட்டடப் பணியை விரைவாக முடிப்பதற்கு துறை நடவடிக்கை எடுக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.191)

42. 2012–2013 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டம், கரும்பாக்கம், புத்தகரம் மற்றும் நடுவீரம்பட்டு ஆகிய இடங்களில் கட்டப்பட்டுவரும் கால்நடை மருந்தகக் கட்டடப் பணிகளை விரைவில் முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.194)

43. நபார்டு வங்கியின் ஒப்புதலைப் பெற்றவுடன், விருதுநகர் மாவட்டத்தில் நபார்டு XIX திட்டத்தின் கீழ் 7 மருந்தக கட்டடப் பணிகளை விரைவில் முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டுவர துறை நடவடிக்கையினை மேற்கொள்ளப்பட வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.198)

44. திருநெல்வேலி மாவட்டத்தில் நபார்டு XVII திட்டத்தின்கீழ் மேற்குறிப்பிட்ட 9 கால்நடை மருந்தகங்கள், 6 ஊரக கால்நடை மருந்தகங்கள் மற்றும் 4 தரம் உயர்த்தப்பட்ட கால்நடை கிளை நிலையங்கள் புதிதாக கட்டுவதற்குரிய கருத்துருக்கு ஒப்புதல் பெற்று, விரைவாக அமைக்க துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.201)

45. 2013–2014 இல் இராமநாதபுரம் மாவட்டத்தில், தேசிய வேளாண் மற்றும் ஊரக அபிவிருத்தி வங்கி நிதி உதவிமூலம் 21 கால்நடை மருந்தகங்கள் கட்டுவதற்குரிய கருத்துருவிற்கு நபார்டு வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டவுடன் விரைவில் கட்டடங்களைக் கட்டி பயன்பாட்டிற்குக் கொண்டுவர துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.204)

46. இராமநாதபுரம் மாவட்டம், உச்சிநத்தம் கால்நடை மருந்தகம் மற்றும் பாண்டியூர் ஊரக கால்நடை மருந்தகக் கட்டடப் பணிகளை விரைவில் முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.207)

47. 2013–2014 ஆம் ஆண்டில் தரம் உயர்த்துவதற்கான கருத்துருவிற்கு நபார்டு XIX திட்டம்மூலம் நபார்டு வங்கியின் ஒப்புதல் பெற்றவுடன், இராமநாதபுரம் மாவட்டம், வேதாளை கால்நடை துணை நிலையத்திற்குச் செல்லும் வழியில் தண்ணீர் தேங்காமல் தடுப்பதற்கும், சுற்றுச்சுவர் கட்டுவதற்கும் மற்றும் கல்வெட்டு அமைப்பதற்கும் துறை விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.209)

48. திண்டுக்கல் மாவட்டத்தில் 2012–2013 ஆம் ஆண்டில் கட்டடம் புதுப்பித்தல் மற்றும் வலுப்படுத்துதல் திட்டத்தின்கீழ் மேற்காணும் 9 கால்நடை மருந்தகங்கள் கட்டும் பணிகளில் பெரும்பாலும் துவக்க நிலையில் உள்ளதை குழு அறிகிறது. இப்பணிகளை நிறைவு செய்வதற்கு துறை விரைவு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.212)

49. 2011–2012 ஆம் ஆண்டு நபார்டு திட்டத்தின்கீழ் திண்டுக்கல் மாவட்டத்தில் சிறுகுடி, கன்னிவாடி மற்றும் திண்டுக்கல் ஆகிய இடங்களில் நடைபெற்று வரும் கால்நடை மருந்தகக் கட்டடப் பணிகளை முடித்திட துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.215)

50. 2013–2014 இல் ரூ.40 இலட்சம் செலவில் 5 கால்நடை பன்முக மருத்துவமனைகளுக்கு நுண்ணொலி கருவிகள், கோயம்புத்தூர் கால்நடை பன்முக மருத்துவமனைக்கு ரூ.5 இலட்சம் செலவில் ஊடுகதிர் கருவி மற்றும் உள்நாட்டினங்களைப் பாதுகாக்க கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி நடத்த ரூ.10 இலட்சம் என ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இப்பணிகளை நிறைவு செய்து இதுகுறித்து அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்பி வைக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.221)

51. மேற்கு தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் வைகை அணையில் குஞ்சு பொரிப்பக கட்டடப் பணி நிறைவுற்றவுடன் குஞ்சு பொரிப்பக இயந்திரங்கள் அமைத்து பயன்பாட்டிற்கு கொண்டுவர துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.224)

52. திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் ரூ.46.71 இலட்சம் மதிப்பீட்டில் குஞ்சு பொரிப்பகம் அமைக்கும் பணியை முடிப்பதற்கு துறை விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.230)

53. மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி கால்நடை மருந்தக வளாகத்தில் கோழிக் குஞ்சு பொரிப்பகம் அமைக்கும் பணியை விரைவில் முடிப்பதற்கு துறை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.233).

54. மேற்கண்ட திட்டங்களை ரூ.72.90 இலட்சம் செலவில் தமிழ்நாடு நீர்ப்பிடிப்பு மேம்பாட்டு முகமை மூலமாக மேற்கொள்ளப்படும். இப்பணிகளை விரைவாக முடித்து குழுவிற்கு இது குறித்து அறிக்கை ஒன்றை அனுப்பி வைக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.235)

55. 2012–2013 ஆம் ஆண்டு கருமாற்று தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி முதல் கட்டமாக ரூ.50 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது. 2013–2014 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.2.50 கோடி செலவில் ஏற்கெனவே தெரிவித்த 8 மாவட்டங்களுடன் கூடுதலாக ஈரோடு, கரூர் மாவட்டங்களிலும், மேலும் அபிஷேகப்பட்டி செட்டிநாடு மற்றும் ஈச்சங்கோட்டை கால்நடை பண்ணைகளிலும் செயல்படுத்தி உயரின காளைக் கன்றுகள் உற்பத்தியைப் பெருக்க துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.251)

56. இராணிப்பேட்டையிலுள்ள கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்திற்கு தேசிய வேளாண்மைத் திட்டத்தின்கீழ் நுண்ணுயிர் தடுப்பு மருந்துப் பிரிவுகளைத் தரம் உயர்த்த ரூ.7.52 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, தமிழ்நாடு மருத்துவப் பணி கழகத்தின்மூலம் இப்பணியை செய்வதற்காக ஒப்பந்ததாரர் அமர்த்தப்பட்டு பணி நடைபெற்று வரும் வேளையில் கூடுதலாக ரூ.4.5 கோடி நிதி பெற்று இப்பணியை முழுமையாக நிறைவு செய்வதற்குரிய கருத்துரு தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதற்கு அனுமதியைப் பெற்று விரைவில் நிறைவு செய்து நுண்ணுயிர் தடுப்பு மருந்து தயாரிப்புப் பணியைத் துவக்க துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.255)

57. இராணிப்பேட்டையிலுள்ள கால்நடை தடுப்பு மருந்து நிலையத்திலுள்ள அடைப்பான் நோய் தடுப்பு மருந்து உற்பத்தியை சுகாதார வழிகாட்டுதலுக்குட்பட்டு நவீன ஆய்வகமான BSL-3 ஆய்வுக்கூடத்தை உருவாக்கிட ரூ.11.31 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தமிழ்நாடு மருத்துவப் பணி கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப்பணியை நிறைவேற்றி இந்த ஆய்வுக்கூடத்தின்மூலம் அடைப்பான் நோய்க்கான தடுப்பு மருந்து உற்பத்தியைத் துவக்குவதற்கு துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.257)

58. பெரும்பாலான மத்திய மற்றும் மாநில அரசுத் திட்டங்கள் குறித்த விவரங்கள், கால்நடைகளுக்கு வரும் நோய்கள் தொடர்பான விவரங்களை பொது மக்களிடம் கொண்டு சேர்க்கும் பணியினைச் செம்மையாகச் செய்ய வேண்டிய நிலைமை இருப்பதன் காரணமாக, கால்நடை பராமரிப்புத் துறையில் ஒரு விளம்பரப் பிரிவு விரைவில் அமைக்கப்பட வேண்டும் என்றும், அவ்வாறு அமைக்கப்பட்டது குறித்த விவரத்தை குழுவிற்கு அறிக்கையாக அனுப்பி வைக்கப்பெற வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.260)

59. கால்நடை மருத்துவ பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள்மூலம் கிராமப்புறங்களில் விவசாயிகளுக்கு எந்தெந்த பருவகாலங்களில் எந்த வகையான நோயின் தாக்கம் கால்நடைகளுக்கு ஏற்படும் என்றும், இந்த நோய்களைத் தடுப்பதற்கு தகுந்தாற்போல் என்னென்ன மருந்துகள் கொடுக்க வேண்டும் என்பது குறித்து அதிக அளவில் விழிப்புணர்வு ஏற்படுத்தி கால்நடைகளைப் பாதுகாக்க துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.263)

60. சென்னை நகரில் செல்லப் பிராணிகளின் பாதுகாப்பைக் கருதியும் வெளியூர் செல்வோர் தங்களது நாய்களை பாதுகாப்பாக விட்டுச் செல்ல நவீன நாய்ப் பராமரிப்பு பிரிவு அமைக்க துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.266)

61. தமிழகத்தில் இராஜபாளையம், கோம்பை, சிப்பிப்பாறை போன்ற அரியவகை சிறப்பு இன நாய்கள் அழிந்து வருகிறது. இதுபோன்ற அரிய வகையான நாய் இனங்களை காப்பாற்றிட நாய் வளர்ப்புப் பிரிவு முக்கிய நகரங்களில் ஏற்படுத்த உரிய நடவடிக்கையினை துறை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.269)

62. தமிழகத்தில் கால்நடைகளை கோமாரி நோய், தொண்டை அடைப்பான் போன்ற கொடிய நோய்களிலிருந்து காப்பாற்றுவதற்கும் விவசாயிகளை இழப்பீடுகளிலிருந்து விடுவிக்கவும் பயனளிக்கக்கூடிய மத்திய அரசு நிதி உதவியுடன் கூடிய கால்நடை காப்பீட்டுத் திட்டத்தினை அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்த துறை அவசிய அவசரம் கருதி விரைவு நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.272)

63. வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கும் திட்டத்தின் பயனாளிகளுக்கு பரண்மேல் ஆடு வளர்ப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தி, சுகாதாரமான முறையில், குறைந்த செலவில் அதிகமாக இலாபம் ஈட்டவும், இறப்பு போன்ற இழப்பீடுகளைக் குறைக்கும் வகையில் விலையில்லாத ஆடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் இதனை செயல்படுத்த துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.276)

***

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம்

04.06.2013	சென்னை
03.07.2013	தேனி
04.07.2013	திண்டுக்கல்
05.07.2013	திண்டுக்கல்
19.08.2013	சென்னை
20.08.2013	திருவள்ளூர்
21.08.2013	காஞ்சிபுரம்
19.09.2013	விருதுநகர்
20.09.2013	திருநெல்வேலி
05.11.2013	இராமநாதபுரம்
06.11.2013	சிவகங்கை
30.12.2013	சென்னை
26.06.2014	வேலூர்
27.06.2014	திருவண்ணாமலை
